
# கல்கி




KALKI 25-1-1976 75 காசு


நடத்திய பரிசோதனைகள் நிரூபிக்கின்றன...
பிஸ்கட் என்றால் இதுதான்—சுவைக்கும்
வைட்டமின்களுக்கும்
போஷாக்குக்கும் இதுதான்:
பிரிட்டானியா
க்ளுக்கோஸ்-D
பிரிட்டானியா க்ளுக்கோஸ்-Dயுடன் மற்றொரு முன்னணி ரக க்ளுக்கோஸ் பிஸ்கட்டை ஒப்பிட்டுப் பார்த்த பரிசோதனைகளில் தெள்ளத் தெளிவாக நிரூபிக்கப்பட்டுவிட்டது: வைட்டமின் சத்திலும், மொத்த போஷாக்குத் தன்மையிலும் உயர்ந்தது க்ளுக்கோஸ்-D பிஸ்கட் தான், இனிமைக்கும், சுவைக்கும், மொறுமொறுப்புக்கும், அதிகமாக விரும்பப்படுகிறது. சக்தி வேண்டுமா— க்ளுக்கோஸையும் விட 20 சத விகிதம் அதிக சக்தியைத் தருகிறது க்ளுக்கோஸ்-D. பிரிட்டானியா க்ளுக்கோஸ்-D பிஸ்கட்— தித்திக்கும் சக்தி!
எனவேதான், வேறெந்த க்ளுக்கோஸ் பிஸ்கட்டையும் விட அதிக மக்களைக் கவர்ந்துள்ளது பிரிட்டானியா க்ளுக்கோஸ்-D
பிரிட்டானியா
பிரிட்டானியா பிஸ்கட்டுகள் மிகச் சிறந்தவை
BRITANNIA
Glucose
BRITANNIA
Glucose-D
THE SWEET TASTE OF ENERGY
இப்போது கண்கவரும் புதிய பேக்கிலே
லின்டாஸ்-BBC-GL-10-140 TM


MCA/J/Tam/1
மல்லிகைப்பூ
மணம்கமழ...
சுகபோகமிக்க
குளியல் சோப்
விலை ரூ. 1.47 பை.
மட்டுமே
(தலவரிகள் தனி)
Jasmine
மைசூர்
ஜாஸ்மின்
சோப்
கவர்ன்மெண்ட் சோப் ஃபாக்டரி, பெங்களூர் அளிக்கும் தரமிக்க தயாரிப்பு.
விற்பனை செய்பவர்கள்: மைசூர் ஸேல்ஸ் இண்டர்நேஷனல் லிட்., பெங்களூர்.

# கல்கி





ராக்ஷஸ
தை 11
ஜனவரி 25
1976


"கல்கி"யில் வெளியாகும் கதைகளிலுள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

[இப் பகுதியில் பிரசுரிக்கப் புதுமையான கருத்துக்களைக் கொண்ட புதுக் கவிதைகளை வரவேற்கிறோம்.
— ஆசிரியர்]

## விலைவாசி


ஏய் விலைவாசி!
உனக்கேன் இந்த
விபரீத ஆசை?
ஐயோ பாவம்!
உன் மனைவி எவரெஸ்ட்
எவ்வளவு பரிதாபமாகக்
கதறுகிறாள்!
கறை படிந்தவள்
என்று தெரிந்துமா
அந்த 'நிலவு'ச் சிங்காரியின்
வீட்டுக் கதவைப் போய்
நிலை கொள்ளாமல் தட்டுகிறாய்?
'பெண் பாவம்' பொல்லாதது.
பேசாமல் இறங்கி வந்துவிடு.

— நிமல விசுவநாதன்



# பிரச்னைகள் தீர

# ஸ்டேன்ஸ் டயர்



ஸ்டேன்ஸ் டயர் ரீட்ரெடுகள் மிகவும் நம்பகமானவை.

ஸ்டேன்ஸ் டயர், புகழ் வாய்ந்த டயர்சோல்ஸ் பிரத்தியேக அம்சங்களை வழங்குகிறது — தன்னிகரற்ற நீண்ட உழைப்பு.

ஸ்டேன்ஸ் டயர் சிக்கனமானதும் கூட — ஒரு டயரை பலமுறை ரீடிரெட் செய்ய, கூடுதல் வாய்ப்பு— மிகக் குறைவான செலவில் பல்லாயிரம் மைல்கள்.

தாமதமின்றி, சேவை பெற உடனே அணுகவும்.

**STANES TYRE**

**ஸ்டேன்ஸ் டயர்**

அண்ட் ரப்பர் ப்ராடக்ட்ஸ் லிமிடெட்
திருச்சி ரோடு, கோயமுத்தூர்.

தொழிற்சாலைகள்:—
சென்னை, வேலூர், திருச்சி, சேலம், மதுரை, தூத்துக்குடி, பெங்களூர், மங்களூர், விஜயவாடா, செகந்திராபாத், எர்ணாகுளம், கோட்டயம், கள்ளிக்கோட்டை, திருச்சூர்.

MAC (B) ST-1/75

# பதில், பதிலுக்குப் பதில்!

கல்கி

மலர் 35

இதழ் 26

நெருக்கடி நிலைப் பிரகடனத்துக்குப் பிறகு உப்புச்சப்பற்றிருந்த அரசியலில் பிரதமரின் பேச்சும், முதல்வரின் பதிலும் முதல்வரின் பதிலுக்குப் பிரதமரின் பதிலும் ஓரளவு பரபரப்பை ஏற்படுத்தி யுள்ளன.

'இத்தனை நாட்களாக தி.மு.க. ஆட்சி பற்றி அதிகம் குறை கூறாது வாளாவிருந்த பிரதமர், அவர்களது ஆட்சிக் காலம் முடிவுறும் தறுவாயில் இப்படிப் பேச வேண்டுமா' என்று வருந்துவோரும் உண்டு; 'இப்போதாவது கூறினாரே' என்று மகிழ்வோரும் உண்டு. பிரதமர் தி. மு. க. அரசை விமர்சனம் செய்ததில் அரசியல் நோக்கைக் காண்பவர்கள், தி. மு. க. அரசு அண்மையில் பஞ்சப் படியை உயர்த்தி உத்தரவிட்டுள்ளதிலும் அரசியல் நோக்கைக் காண முடியும்!

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் கைவிடப்படவில்லை என்றும் உலகப் பொருளாதாரத்திலேயே ஏற்பட்டுள்ள நெருக்கடிகளின் பாதிப்பை நமது திட்டமும் உணர்கிறது என்றும் அதனால் தொழில், பொருளாதார முன்னேற்ற வேகம் பாரதத்தில் குறைந்திருக்கிறது என்றும் கூறிய பிரதமர் அதே மூச்சில் தமிழகத்தில் பொருளாதார தொழில் வளர்ச்சியின் வேகம் குறைந்திருக்கிறது, காமராஜர் ஆட்சிக் காலத்தில் இருந்த முன்னேற்ற வேகம் இன்று இல்லை என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

அவரது வாதப்படியே பார்த்தாலும் உலகப் பொருளாதார நெருக்கடி அகில இந்திய ரீதியில் தொழில் வளர்ச்சியைப் பாதிக்குமேயானால் இந்தியாவின் ஓர் அங்கமான தமிழகமும் அந்தப் பாதிப்பை உணரவே செய்யும். காமராஜர் காலத்தில் காணப்பட்ட பிரமிக்கத்தக்க முன்னேற்றம் இன்றில்லையே என்றால் அதற்குப் பண வீக்கம், தொழில் துறையில் நிலவும் நிச்சயமற்ற தன்மை, அபரிமித வரிகள் போன்ற பல காரணங்களைக் காட்டலாம்.

ஆனால் காரணங்களைக் கூறுவதைவிட சாதனைகளைக் காட்டுவதே சிறந்தது என்ற முறையில் முதல்வர் புள்ளி விவரங்களைத் தந்துள்ளார். முன்னேற்றமடைந்த மாநிலம் என்ற நோக்கில் இதற்கு மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு குறைந்திருந்தாலும் தமிழக அரசு தானாகவே நிதி வசதிகளை அதிகரித்துக் கொண்டு இட்ட இனங்களில் செலவிட்டுள்ளது என்று எடுத்துக்காட்டியதுடன் வேறு பல புள்ளி விவரங்களையும் தமிழகத்தின் வளர்ச்சிக்கு அத்தாட்சியாகக் கொடுத்திருக்கிறார்.

பிரதமர் இவற்றை ஏற்காததுடன், நினைவுச் சின்னங்கள் அமைக்க தி. மு. க. அரசு ஏராளமான தொகை செலவிட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார். சில சமுதாய நலத் திட்டங்களையும் குறை கூறியுள்ளார்.

பூம்புகார், வள்ளுவர் கோட்டம், கட்டபொம்மன் கோட்டை போன்றவற்றுக்கு ஆன செலவு மொத்தமுள்ள அரசாங்கச் செலவினங்களில் ஒரு சிறு பகுதியாகத்தான் இருக்கும் என்றாலும் உற்பத்திக்கு உதவாத செலவினங்கள் என்ற அளவில் விமர்சனத்துக்கு உள்ளாகும் என்று பலர் ஏற்கனவே எச்சரித்ததுண்டு. ஆனால் முதல்வரோ மாபெரும் கோயில்களை நிர்மாணித்த பண்டை நாள் மன்னர்கள், பெரும் சரித்திரப் புகழ் பெற்றது போல் இவையும் தமக்கும் தமது கட்சிக்கும் புகழ் சேர்க்கும் என்று நம்புகிறார்.

தி.மு.க. அரசின் சமுதாய நலப் பணிகள் பலரையும் பிரமிக்கச் செய்துள்ளன. இவை தி.மு.க. அரசுக்கு உடனடியாகப் பிராபல்யத்தைத் தேடித் தரப் பெரிதும் உதவும் என்பது உண்மையே என்றாலும் இவையும் தமிழகத்தின் நிரந்தரமான பொருளாதார, தொழில் வளர்ச்சிக்கு உதவாதவை. ஆனால் இதற்காகச் சமுதாய நலப் பணிகள் தேவையில்லை என்று கூறி விடமுடியாது. எது எதற்கு

தமிழ்த்திரு நாட்டைத் தன்னைப் பெற்ற - எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா -- பாரதியார்

எந்த எந்த அளவில் முக்கியத்துவம் தரப்பட வேண்டும் என்பதில் தவறுகள் நேர்ந்துள்ளன.

இத்தகைய குறைபாடுகள் தமிழக அரசில் மட்டுமில்லை, மற்ற மாநில அரசுகளிலும் உண்டு; மத்தியிலும் நிறையவே உண்டு.

மத்தியில் உள்ள பாராளுமன்றம் மக்களால் சட்டப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்று என்றால் தமிழக சட்டசபையும் அவ்வாறானதே. அதற்கு நேர்வதே இதற்கும் நேரட்டும்.

# என்ன சேதி?

## மகிழ்ச்சியும் வருத்தமும்

சுதந்திரக் கட்சி மகிழ்ச்சியும் வருத்தமும் அடைய வேண்டிய இரு காரியங்கள் சென்ற வாரம் நடந்தன. மகிழ்ச்சிக்குரிய செய்தி சுதந்திரக் கட்சியின் அகில இந்திய கூட்டுக் காரியதரிசி திரு ஸ்ரீகுமாருக்கு மணிவிழா அமைதியான முறையில் நடைபெற்றதாகும். திரு ஸ்ரீகுமார் அடக்கத்துடன் கூடிய ஆற்றல் நிரம்பியவர். வி. எஸ். ஸ்ரீகுமார் நிறுவனத்தின் அதிபராக விளங்கி வெற்றிகரமாகத் தொழில் நடத்தி வருபவர். சுதந்திரக் கட்சியின் பணிகளில் ஆர்ப்பாட்டம் ஏதும் காண முடியாதென்றாலும் அத்தனையும் அர்த்தமுள்ளவை என்பதில் ஸ்ரீகுமாரும் அவரது தோழர்களும் பெருமிதம் அடையலாம். ஸ்ரீகுமாரின் சுதந்திரப் பணிகள் பல்லாண்டு தொடரட்டும்.


ஸ்ரீகுமார்

வருந்த வேண்டிய விஷயத்துக்கு வருவோம். சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ராம். எல். ஜி. சுவாமிநாதன் கட்சியை விட்டு விலகி இந்திரா காங்கிரஸில் சேர்ந்திருக்கிறார். முன்னறிவிப்பு இன்றி இவர் இப்படிச் செய்தது ஒருபுறமிருக்க இதற்காக இவர் கூறியுள்ள காரணம் அதிவிசித்திரமானது. கறுப்புப் பண வேட்டை, கள்ளக் கடத்தல் தடுப்பு முதலிய வகைகளில் பிரதமர் செயற்கரிய செயல்களைச் செய்துள்ளார்; இத் தருணத்தில் அவரது கரத்தைப் பலத்தப்படுத்த வேண்டிய கடமை நமக்கு உண்டு என்கிறார்.

பிரதமரது கரத்தைப் பலப்படுத்த அவருடைய கட்சியிலேயே சேர்ந்துவிட வேண்டும் என்று சுவாமிநாதன் எண்ணினால் அவர் ஜனநாயகம் பற்றிய அடிப்படையையே உணரவில்லை என்று அர்த்தம். பிரதமர் எடுக்கிற நல்ல முடிவுகளுக்கு எதிர்க் கட்சியிலிருந்தபடியே ஆதரவு தருவதும் அவர் கரத்தைப் பலப்படுத்துவதாகத்தான் ஆகும். அதேபோல் பிரதமர் எடுக்கிற தவறான முடிவுகளைச் சுட்டிக் காட்டுவதும் பிரதமர் செய்ய வேண்டிய காரியங்களை நினைவுபடுத்துவதும் அவர் கரத்தைப் பலப்படுத்தவேயன்றிப் பலவீனப்படுத்தவல்ல.

சுவாமிநாதனின் அறிக்கை வெளியாகியுள்ள அதே நாளிதழில், "அஸோஸியேடட் சேம்பர்ஸ் ஆஃப் காமர்ஸ் அண்டு இண்டஸ்ட்ரி" என்ற அமைப்பின் அறிக்கையும் இடம் பெற்றிருக்கிறது. நாட்டின் பொருளாதாரம் சீர்ப்படவும்பலப்படவும் அருமையான ஆலோசனைகளை இந்தத் தொழில் வர்த்தக சங்கங்களின் கூட்டணி தெரிவித்திருக்கிறது. அவை யாவும் ராஜாஜி சுதந்திரக் கட்சியின் தலைவராக இருந்து கூறிவந்த கருத்துக்களே. இந்த யோசனைகளை மேற்படி அமைப்பைச் சேர்ந்த தொழில் வர்த்தகப் பிரமுகர்களும் பொருளாதார நிபுணர்களும் பிரதமரின் கரத்தைப் பலவீனப்படுத்தவா கூறியுள்ளார்கள்? நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்தக் கூறும் யோசனைகள் ஏற்கப்பட்டால் அவை பிரதமரின் கரத்தையும் பலப்படுத்தும் என்பது சுவாமிநாதனுக்குத் தெரியாமல் போகலாம்; பொருளாதார அறிஞர்களுக்குத் தெரியும்.

## பயங்கர ஆயுதங்கள்

சென்னையில் பிரதமர் பங்கேற்ற பக்வாஷ் மகாநாட்டில் வல்லரசுகளின் ஆயுதக் குவிப்பு நடவடிக்கைகள் கண்டனத்துக்குள்ளாயின. உலகில் வறுமையை ஒழித்துச் சுபிட்சத்துக்கு உதவக் கூடிய செல்வம் ஆயுதங்களைத் தயாரித்துக் குவிக்கச் செலவாவதை மகாநாடு சுட்டிக் காட்டியது.

எதிர்கால ஆயுதங்கள் வரிசையில் கடு மழை, புயல், இடி, மின்னல் ஆகியவையும் இடம் பெறுகின்றன. இந்த இயற்கை உபாதைகளை எதிரி நாட்டின் மீதாகச் செயற்கையாகச் சிருஷ்டித்துத் துன்பம் விளைவிக்கலாம். இதைவிடப் பயங்கரம் மின் அலைகளை அனுப்பி எதிரி நாட்டு மக்களின் மூளைகளை அவற்றால் தாக்கிக் கோளாறுகளை ஏற்படுத்தி விடலாம்!

இதையெல்லாம் பார்க்கும்போது விஞ்ஞானக் கதைகள் எழுதுபவர்களே கடை விரிக்க விடலாம் போலிருக்கிறது. ஏனென்றால் விஞ்ஞானக் கதாசிரியர்களின் கற்பனையில் தோன்றுகிற பயங்கர ஆயுதங்களை நாளை விஞ்ஞானிகள் மெய்யாலுமே தயாரித்துக் கொடுத்து விடுகிறார்கள்!

## அடிப்படை உரிமைகள்

நெருக்கடி நிலைப் பிரகடனம் அமலில் இருக்கும்வரை, அடிப்படை உரிமைகளைக் காத்துக்கொள்ள, நீதி மன்றங்களை நாட முடியாது என்பதாக அவசரச் சட்டம் பிறப்பிக்கிறிருக்கிறது அரசு. இந்த அடிப்படை உரிமைகளாவன: பேச்சுச் சுதந்திரம், பொதுக் கூட்டமாக அமையும் சுதந்திரம், சங்கங்கள் அமைக்கும் சுதந்திரம், இந்தியா முழுதும் நடமாடும் சுதந்திரம், இந்தியாவில் எங்கு




வேறுமாறுதும் குடியிருக்கும் சுதந்திரம், சொத்துரிமை, தொழில், வியாபாரம் நடத்தும் உரிமை ஆகியன.

இதற்கு முன்பாகவே அவசரச் சட்டங்கள் மூலம் வேறு சில உரிமைகளும் தாற்காலிகமாகப் பறிக்கப்பட்டன. அவை; சட்டத்தின் முன் அனைவருக்கும் சம நீதி பெறும் உரிமை, தனி மனிதரின் உயிரையும் சுதந்திரத்தையும் காத்துக் கொள்ளும் உரிமை, கைதாக்கிச் சிறைப்படுத்துவதிலிருந்து தன்னைக் காத்துக் கொள்ளும் உரிமை ஆகியன. நெருக்கடி நிலை பிரகடனமான பிறகு அதனை முழுமையாகவும் தீவிரமாகவும் அமல்படுத்த இவ்வாறான அவசரச் சட்டங்கள் அடுத்தடுத்து வரும் என்பது எதிர்பார்க்கக் கூடியதே. எனவே இத்தகைய அவசரச் சட்டங்கள் பிறப்பதற்காக வருந்துவதைவிட நெருக்கடி நிலைப் பிரகடனம் செய்ய வேண்டிய சூழல் நாட்டில் ஏற்பட்டதற்காக வருந்தித் இருந்த வேண்டியதே அனைவரின் கடமையுமாகும்.

மக்கள் உழைப்பார்வம் காட்டியும் தலைவர்கள் விவேகம் காட்டியும் தேசத்தை இக்கட்டான அரசியல் பொருளாதாரச் சிக்கல்களிலிருந்து துரிதமாக விடுவிக்க வேண்டும். அதன் பின் தாமதியாமல் எல்லா வித சுதந்திரங்களுடன் கூடிய ஜனநாயகம் இயங்க வழி வகுக்க வேண்டும். அது முன்போலன்றி இனி பொறுப்புணர்ச்சியுடன் நடக்க வேண்டும்.

தேசம் குடியரசானபிறகு சரிபாதி காலத்துக்கு மேலாக் நெருக்கடி நிலைப் பிரகடனத்துக்குக் கீழேயே மக்கள் இருந்து வந்திருக்கிறார்கள் என்றால் இது எதை உணர்த்துகிறது? பரிபூரண சுதந்திரங்களுடன் கூடிய ஜனநாயகத்தைப் பொறுப்புடன் நடத்திச் செல்லும் தகுதியை நாம் இன்னும் பெறவில்லை என்பதையும் அவ்விதத் தகுதியை நாம் அடையச் செய்யக் கூடிய தலைவர்கள் இன்னும் தோன்றவில்லை என்பதையும்தான்.

## இறைச்சி தயாரிக்கும் கூடம்

ஜீவகாருண்யப் பிரசாரம் செய்ய வேண்டியது மிகவும் அவசியம். புலால் உண்பதைத் தவிர்க்குமாறு கோருவதையும் வரவேற்கவே வேண்டும். ஆனால் இதில் முழு வெற்றி பெறாத நிலையில் இறைச்சி தயாரிக்கும் நவீன கூடம் ஒன்றை அமைக்கும் யோசனையைக் கைவிடுவது விவேகமாகாது.

ஜைனர்களின் விருப்பத்துக்கு இசைய மேற்படி திட்டம் கைவிடப்பட்டதாக முதல்வர் கூறியுள்ளார். புலால் உண்பதை முழுமையாகத் தடுக்க முடியாதபோது நவீன இயந்திரங்களுடன் கூடிய இறைச்சி தயாரிக்கும் கூடம் நிறுவுவதே ஒரு ஜீவகாருண்யப் பணிதான். எப்படியெனில் மரண வேதனையைச் சிறிதும் அளிக்காமல் இறைச்சி தயாரிக்கும் நவீன இயந்திரங்கள் இன்று உள்ளன. அத்துடன் இயந்திர மயமாக்குதல் புலால் உண்ணும் மக்களின் ஆரோக்கியத்தைக் காக்கும் பணியுமாகும்.

வளம் தரு வீதியிலே...


# தேவைப் பொருள்கள் மீதான வரி மேலும் குறைகிறது



கட்டம் கட்டமாக சர்க்கரை, தீப்பெட்டி, காலணிகள் போன்ற அன்றாடத் தேவைப்-பொருள்கள் மீதான சுங்கவரி குறைக்கப்படுகிறது. 1951-ல் 46 சதவிகிதமாக இருந்த வரி இன்று 17 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. 10 ஆண்டுகளுக்கு முன்கூட இப்பொருள்கள்மீது 31 சதவிகித வரி விதிப்பு இருந்தது.

**நெஞ்சில் உரமும்**
**செயலில் திறனும்**
**உறுதுணை நிற்கும்**

davp 75/451



# வையம் பரவிய வைதிக மதம் 4

**ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்**

ஆக, ரொம்பவும் ஆதியில் எங்கேயும் வேத மதமே இருந்தது ஒரு நிலை; அப்புறம் அங்கங்கே (ஹெலனிக், ஸெமிடிக் மாதிரி) புது மதங்கள் ஏற்பட்ட ஒரு நிலை; பிறகு இந்த மதங்கள் எல்லாம் மங்கிப் போகிற மாதிரி, கிறிஸ்துவம், இஸ்லாம், பௌத்தம் இவை மட்டுமே எங்கும் பரவிய நிலை; இதற்கப்புறம் சரித்திரத்தில் நன்றாக உறுதிப்பட்டுவிட்ட காலத்தில் மறுபடியும் இப்போது நான் சொன்ன மாதிரி, ஹிந்து நாகரிகச் செல்வாக்கானது பல தேசங்களின் — குறிப்பாகக் கீழ்த் திசை நாடுகளில் — ஜீவகளையுடன் ஏற்பட்டது ஒரு நிலை. இந்தக் கட்டத்தில்தான் அங்கோர் வாட், போராபுதூர், ப்ரம்பானன் மாதிரிப் பிரம்மாண்டமான கோயில்கள் அங்கே எழும்பின. இந்தக் கட்டத்தில்தான் நம்முடைய திருப்பாவையும் திருவெம்பாவையும் கூட ஸயாமுக்கு (இப்போது தாய்லாந்து என்கிறார்கள்) சென்றிருக்கின்றன.

இதற்குச் சான்றாக இப்போதும் அங்கே வருஷா வருஷம் இங்கே நாம் இந்தப் பாவைகளைப் பாராயணம் பண்ணுகிற அதே மார்கழி மாதத்தில் ஒரு பெரிய உத்ஸவம் நடக்கிறது.

இது அந்தத் தேசத்து ராஜாங்கமே செலவழித்து நடத்தும் உத்ஸவம் என்பது குறிப்பிடத் தக்கது. இந்த விழாவில் சிவபெருமானைப் போலவே வேஷம் போட்டுக்கொண்டிருக்கிற ஒருவரை வட கிழக்குத் திசையிலிருந்து வரவேற்று ஊஞ்சலுக்கு அழைத்துப் போய் உட்கார வைத்து வழிபாடு செய்கிறார்கள். அவர் ஏதோ டிராமா, ஸினிமாக்காரர் மாதிரி வேஷம் போட்டுக் கொண்டிருப்பதாக நினைக்கக் கூடாது. ஈச்வர வேஷம் போடுவதற்காக அவருக்குப் பல நியமங்கள் வைத்திருக்கிறது. இவரை வடகிழக்குத் திக்கில் வரவேற்பதிலேயே விசேஷம் இருக்கிறது. அந்தத் திசைக்கு "ஈசான்யம்" என்றே பேர், — அதாவது ஈச்வரனின் ஒரு ரூப பேதமான ஈசானன்தான் அந்தத் திக்குக்கு அதிதேவதை. நம் கோயில்களில் அநேகமாக மூலஸ்தான லிங்கம் கிழக்குப் பார்த்துத்தான் இருக்கும். அவரைச் சுற்றி வரும்போது ஈசான்ய திக்கில்தான் நடராஜா சந்நிதி இருக்கும். மார்கழியில் நடராஜமூர்த்திக்குத் திருவாதிரை உத்சவம் நடக்கிற சமயத்திலேயே நான் சொல்லும் ஸயாம் விழா நடக்கிறது. ஆனந்தமாக நாட்டியமாடும் நடராஜாவின் திசையிலிருந்து சிவ வேஷக்காரரை அழைத்துப் போய், ஊஞ்சலில் அமர்த்தும்போது, அவர் வலக்காலைத் தொங்கப் போட்டுக் கொண்டு இடது காலை மடித்து, வலது தொடை மேல் போட்டுக் கொள்கிறார். அதாவது ஆட்டமெல்லாம் அடங்கிய தக்ஷிணாமூர்த்தி மாதிரி உட்காருகிறார்.

வலது கால் தொங்கப் போட்டிருந்தாலும், அது பூமியைத் தொட்டுவிடக் கூடாது என்பது மிக முக்கியம். ஊஞ்சல் வெகு உயரச் சென்று கீழே வரும்படி ஆட வேண்டும். அதாவது ஈச்வரன் இருக்கும் பரமபதத்துக்கே இவர் போய் வருவதாகத் தாத்பர்யம். ஊஞ்சலை ரொம்பத் தாழ்த்தித்தான் கட்டியிருப்பார்கள். ஆனாலும், அத்தனை உயரத்திலிருந்து அதிவேகமாக ஊஞ்சல் கீழே வரும் போதும் அந்த ஆசாமி கால் மண்ணில் படாமல் ஜாக்கிரதை செய்துகொள்ள வேண்டும். 'ஸ்வாமி வருவது', 'ஆவேசம் வருவது' என்றெல்லாம் நாம் சொல்கிற மாதிரி, தெய்வ சாந்நித்யம் பெற்றதாகப் பாவிக்கப்படும் இந்த ஆசாமிக்குப் பூ ஸ்பரிசம் ஏற்படக் கூடாது என்று வைத்திருக்கிறார்கள். பூமியில் கால் பட்டுவிட்டால் போதும், அவருடைய சகல சொத்துக்களையும் சர்க்காரில் ஜப்தி (பறிமுதல்) செய்து விடுவார்களாம்! உத்ஸவம் நடக்கும் பத்து தினங்களும், அந்தத் தேசத்து ராஜாக்களிலிருந்து பாமர ஜனங்கள் வரை யாவரும் இதில் கலந்துகொள்கிறார்கள். சைனியம், ஆயுதங்கள் எல்லாம் உத்ஸவக் கொட்டகைக்கு வந்துவிடுகின்றன. இப்போதெல்லாம் (1959) ஏரோப்ளேன்களைக் கூடக் கொண்டு வந்து நிறுத்திவிடுகிறார்களாம்!

இரண்டு பாவைகளும் சைவத்தையும் வைணவத்தையும் சேர்த்து வைப்பதற்கு ஏற்றாற்போல் இந்த உத்ஸவத்தில் பெருமாளுக்கே நம் தேசத்தில் விசேஷமாகச் செய்கிற டோலோத்சவத்தை (ஊஞ்சலில் வைத்து ஆட்டுவதை) சிவபெருமான் வேஷத்தைப் போட்டுக் கொள்கிற ஒருத்தனுக்கு ஸயாம் தேசத்தில் செய்கிறார்கள்.

சரி, அவர்களுக்குப் "பாவை" நூல்களைப் பற்றி ஏதாவது தெரியுமா என்று கேட்டால், அடியோடு ஒன்றும் தெரியாது. அப்படியானால் சிவ வேடம் போட்டுக் கொண்டவனுக்கு மார்கழியில் ஊஞ்சல் உத்சவம் நடக்கிறது என்பது ஒன்றுக்காக அதைப் பாவைகளோடு சேர்த்துப் பேசுவதற்கு ஆதாரம் இல்லை என்று தோன்றலாம். பின் நான் ஏன் இப்படிச் சொல்கிறேன் என்றால், அவர்கள் இந்த உத்ஸவத்துக்குப் பெயரே ட்ரியம்பாவை — ட்ரிபாவை (Triyampavai Tripavai என்கிறார்கள்! (தொடரும்)

[1932ம் வருஷத்திலிருந்து பெரியவர்கள் வழங்கிய உரைகள், ஸ்ரீமுகங்கள், கட்டுரைகளிலிருந்து தொகுத்தது]



**ஜெனரல் பிராங்கோவின் ஆவி பிரிந்த பிறகும் அவரை நீண்ட காலம் உயிருடன் வைத்திருந்ததாகச் சொல்கிறார்கள். இப்படி நடக்க முடியுமா?**

# கட்டிக்காத்த உயிர்

**டாக்டர் ராஜ் வைத்யா**

என்னிடம் வைத்தியம் செய்து கொள்ளும் ஒரு வயதான மாது. "ஜெனரல் ஃபிராங்கோவை உயிருடன் வைத்திருந்தது போல் என்னை உயிருடன் வைத்திருப்பதை நான் விரும்பவே மாட்டேன்" என்றாள். தொடர்ந்து அவள் என்னிடம் கேட்டுக் கொண்டாள்: "எனக்குக் காலம் வரும்போது நான் அமைதியாகவும் கௌரவமாகவும் இறக்க அனுமதியுங்கள்; என் ஆவி பிரிந்து நீண்ட காலத்துக்குப் பிறகும் என்னை இயந்திரங்களின் உதவியுடன் உயிருடன் வைத்திருக்காதீர்கள்!"

நான் அவளுக்கு, ஜெனரல் பிராங்கோ ஓர் அசாதாரணமான மனிதர் என்பதை விளக்கினேன். அவர் மரணத்தைத் தாமதப்படுத்த அரசியல் காரணங்கள் இருந்திருக்க வேண்டும் என்று எடுத்துக் கூறினேன்.

"அவரைச் சுற்றி இருபத்தேழு டாக்டர்கள் இருந்தார்கள். அது போல எந்த ஆஸ்பத்திரியிலும் இருபத்தேழு டாக்டர்களை ஒரே ஒரு மனிதருக்காகப் பிரத்தியேகமாக ஒதுக்குவது சாத்தியப்படாது."

"அது சரி, ஆனால் அவர்கள் எப்படி ஜெனரல் பிராங்கோவின் உயிரைக் காத்தார்கள்? நோயுற்று மிக மோசமான நிலையில் இருந்தாரல்லவா அவர்?"

"இயந்திரங்களின் உதவியுடன் அவரை உயிரோடு வைத்திருந்தார்கள்" என்று நான் கூறினேன். "இந்த இயந்திரங்கள் முதலில் வேறு காரணங்களுக்காக உருவாக்கப்பட்டவை.

"உதாரணத்துக்கு சிறுநீரக இயந்திரத்தை எடுத்துக் கொள்வோம். ஜெனரல் ஃபிராங்கோவின் இரத்தத்தைக் கழிவுப் பொருள்கள் ஏதுமின்றிச் சுத்தமாக வைத்திருக்க இந்த இயந்திரம் பயன்பட்டிருக்கும். ஆனால் இந்த இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டது எதற்கு? சிறுநீரகக் கோளாறு மட்டுமே இருந்து மற்ற அவயவங்கள் எல்லாம் சரியாக இருந்த மனிதர்களின் உதவிக்காக உருவானது. செத்துக்கொண்டிருக்கும் ஒரு மனிதனின் உயிரைப் பிடித்து வைக்க உருவானது அல்ல."

இருதயத்தைச் செயற்கை முறையில் மின்சாரத் தூண்டுதலால் துடிக்கச் செய்ய முடியும் என்பதையும் அவளுக்கு நான் விளக்கினேன். "இதயத் துடிப்பு சீராக இல்லாவிட்டால் சீரான ஒரே கதியில் துடிக்கச் செய்ய 'பேஸ் மேக்கர்' கருவியைப் பயன்படுத்தலாம். துடிப்பு நின்றே போய்விட்டாலும் உடனடியாக மின் அதிர்ச்சி கொடுத்து மீண்டும் இயங்கச் செய்யலாம்.

"நுரையீரல்கள் சரியாக இயங்காவிட்டால் செயற்கையாகச் சுவாசக் கருவியைப் பயன்படுத்தலாம். இரும்பு நுரையீரல் என்பதாக ஒன்றிருக்கிறது. அது நுரையீரலுக்குள் காற்றைப் புகச் செய்யும். அங்கிருந்து பிராணவாயு இரத்த ஓட்டத்தில் சேர்கிறது."

என்னுடைய வைத்திய மேற்பார்வையில் இருந்த அந்த மூதாட்டி கேட்டார்: "ஜெனரல் பிராங்கோ ஏராளமான இரத்தத்தை இழந்து விட்டிருந்ததாகவும் படித்தேனே!"

"அது உண்மைதான். பிராணவாயுவை உடலெங்கும் எடுத்துப் போக இரத்தம் தேவை. ஆனால் இழந்துவிட்ட ரத்தத்தைத் தானம் பெற்ற ரத்தம் மூலம் ஈடு செய்யலாம். கிட்டத் தட்ட ரத்தத்தின் அமைப்புக் கொண்ட செயற்கைத் திரவங்களும் உள்ளன."

"இதையெல்லாம் செய்யத்தான் அத்தனை டாக்டர்கள் தேவைப்பட்டனரா?"

"ஆமாம். இரும்பு நுரையீரலைப் பயன்படுத்த டாக்டர்கள்; இரத்தத்தை உடலெங்கும் பாயச் செய்யும் இயந்திரத்தைக் கவனிக்க டாக்டர்கள்; செயற்கைச் சிறுநீரகங்களைக் கவனிக்க டாக்டர்கள்; சரியான அளவில் ரத்தம் உடம்பு முழுதும் பாய்கிறதா என்பதைக் கவனிக்க டாக்டர்கள்..."

"மூளை? அதன் நிலைமை என்ன?" என்று என்னிடம் பரிசோதனைக்கு வந்திருந்த மாது கேட்டார்.

"ஜெனரல் ஃபிராங்கோவின் மூளை இதற்குக் கொஞ்ச காலம் முன்பாகவே செயல்படுவதை நிறுத்தியிருக்கும் என்றே நான் கருதுகிறேன். மூளை மிக மென்மையானது. பிராணவாயு சிறிது குறைந்தாலும் வாடிவிடும். மூன்றே நிமிஷங்கள் பிராணவாயு

இல்லாதிருந்தாலும் போதும், மூளைத்திசுக்கள் மடிந்து போகும்.''

''ஆக டாக்டர்கள் உடலை மட்டும்தான் உயிருடன் வைத்திருந்தார்கள்.''

''ஆமாம்'' என்று தலையசைத்தேன். ''இப்படியே கால வரையறையின்றி உயிருடன் வைத்திருப்பதும் சாத்தியமாகலாம். முக்கியமான உடல் உறுப்புக்களின் பணிகளை இயந்திரங்கள் ஏற்றுக் கொண்டு விடுவதால் அந்த இயந்திரங்களைச் சரியாக ஒன்றோடொன்று ஒத்துழைக்குமாறு இயக்குவது மட்டுமே பிரச்னையாகி விடுகிறது. கோளாறு ஏற்பட்டால் அது இயந்திரக் கோளாறாகத்தான் இருக்கும்!''

''எனக்கு இது பிடிக்கவே யில்லை. நான் ஒருவேளை என் அந்திமக் காலத்தில் ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்தால் என்னை இந்த மாதிரி உயிருடன் வைத்திருக்க மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?'' என்று அந்த மாது கேட்டார்.


''அப்படி நேராது என்று நான் உறுதியாகக் கூற முடியும்'' என்றேன். ''ஏனென்றால் அவ்வளவு வைத்திய வசதிகளைப் பெறுமளவுக்கு உங்களிடம் பணம் கிடையாது. அதுபோன்ற இயந்திரங்களின் உதவியுடன் ஒருவரின் உயிரைக் காப்பதென்றால் ஒரு வாரத்துக்கு லட்சக் கணக்கான ரூபாய் செலவாகும். ரொம்ப முக்கியமான காரணங்களுக்காக உயிருடன் வைத்திருக்க வேண்டிய ரொம்ப முக்கியமான ஒரு நோயாளிக்குத்தான் அத்தகைய சிகிச்சை அளிக்க முடியும்.''

''ஜெனரல் ஃபிராங்கோவுக்காக நான் ரொம்பவும் வருத்தப்படுகிறேன்'' என்றார் அம்மாது.

''உங்கள் மனம் எனக்குப் புரிகிறது'' என்றேன். ''ஆனால் நீங்கள் கவலைப்பட வேண்டியது ஏதுமில்லை. ஏனென்றால் தம்மைச் சுற்றி என்ன நடக்கிறது என்ற உணர்வே ஜெனரல் ஃபிராங்கோவுக்கு இருந்திராது!''

**தமிழாக்கம்: இ. ராஜேந்திரன்**





★ கிருஷ்ணகான சபையில் ஸ்ரீமதி கிருஷ்ண வேணி லக்ஷ்மணனுக்கு ஸ்ரீமதி பாலசரஸ்வதி 'நிருத்ய சூடாமணி' என்னும் விருதைச் சூட்டுகிறார். இந்த நடன வைபவத்துக்குத் தலைமை வகித்த திரு இ. சந்திரசேகரன் நடனமணியைக் கௌரவிக்கிறார்.

★ சென்னை நேரு ஸ்டேடியத்திலும் எழும்பூர் நகர சபை ஸ்டேடியத்திலும் ரெனிபிராங்க் சர்வதேச ஹாக்கிப் போட்டியும், பீகம் ரஸுல் பெண்கள் சர்வதேச ஹாக்கிப் போட்டியும் நடந்து ஹாக்கி ரசிகர்களை மகிழ்வித்தன. இந்தப் போட்டிகளுக்குக் காரணகர்த்தாவான இந்திய ஹாக்கி பெடரேஷன் தலைவர் திரு எம். ஏ. எம். ராமசுவாமி பாராட்டுக் குரியவர். படத்தில் தமிழக முதல்வர் இந்திய ஹாக்கிக் குழு காப்டனுக்கு ரெனிபிராங்க் தங்கக் கோப்பையை வழங்குகிறார்.

★ சென்னையிலுள்ள மகாவீர் அன்புவழி பிரசார சங்கத்தின் சார்பில் ஜனவரி 11ந் தேதி ராஜாஜி மண்டபத்தில் வர்த்தமானர், வள்ளுவர், வள்ளலார் கருத்துவழி—விலங்குகளிடம் அன்பு பேணல் என்ற கருத்தரங்கை முதல்வர் திரு மு. கருணாநிதி தொடங்கி வைத்தார். கருத்தரங்குக்குச் சிலம்புச் செல்வர் திரு ம. பொ. சி. தலைமை வகித்தார். பத்மஸ்ரீ மோகன்மல்ஜி சோர்டியா உரையாற்றுகிறார்.





# பாலுசேரி பெனிபிட் சிட் பண்டு
## பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம் & பதிவு செய்யப்பட்ட அலுவலகம்
"பாலுசேரி பில்டிங்ஸ்", 3, சிங்காராச்சாரி தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.
தந்தி: 'EVERMANS', போன்: 85834, தபால்பெட்டி: 414

### நீண்டகாலச் சீட்டுகள்

60 மாதங்கள் — 60 அங்கத்தினர்கள்

| வகுப்பு | மாதச் சந்தா | சீட்டுத் தொகை |
|---|---|---|
| LTN | ரூ. 100/- | ரூ. 5,000/- |
| LTO | ரூ. 50/- | ரூ. 2,500/- |
| LTP | ரூ. 20/- | ரூ. 1,000/- |

40 மாதங்கள் — 40 அங்கத்தினர்கள்

| வகுப்பு | மாதச் சந்தா | சீட்டுத் தொகை |
|---|---|---|
| LTA | ரூ. 500/- | ரூ. 20,000/- |
| LTB | ரூ. 250/- | ரூ. 10,000/- |
| LTC | ரூ. 125/- | ரூ. 5,000/- |

### குறுகியகாலச் சீட்டுகள்

20 மாதங்கள் — 20 அங்கத்தினர்கள்

மாதம் ரூ. 30/- முதல் ரூ. 500/- வரை சந்தா

25 மாதங்கள் — 25 அங்கத்தினர்கள்

| வகுப்பு | மாதச் சந்தா | சீட்டுத் தொகை | வகுப்பு | மாதச் சந்தா | சீட்டுத் தொகை |
|---|---|---|---|---|---|
| A | ரூ. 200/- | ரூ. 5,000/- | D | ரூ. 25/- | ரூ. 625/- |
| B | ரூ. 100/- | ரூ. 2,500/- | E | ரூ. 20/- | ரூ. 500/- |
| C | ரூ. 50/- | ரூ. 1,250/- | F | ரூ. 15/- | ரூ. 375/- |

சேரும் குரூப்பை விவரித்து எழுதவும்

கிளைகள்: புது டில்லி - பம்பாய் - பெங்களூர் - கல்கத்தா - கோயமுத்தூர்

ஸ்தாபிதம்: 1947

29 YEARS

எங்கள் சேவை உங்களுக்குத்தேவை

# சேரமான் காதலி

**கண்ணதாசன்**


அத்தியாயம் 9

## இன்பமும் துன்பமும்

**வ**ழியனுப்பு விழாவில் மூர்ச்சித்து விழுந்த பத்மாவதியைத் தனது ரதத்திலேயே தூக்கிக் கொண்டு அந்தப்புரத்துக்கு வந்தாள் மெல்லிளங்கோதை.

தன்னை உயிராக வளர்த்த மன்னரின் பிரிவால்தான் அவள் மூர்ச்சிந்தாள் என்று கோதை கருதினாள். நாயகனிடம் விவரம் தெரிந்தவளாகப் பேசிய கோதை, பத்மாவதியின் விவரம் தெரியாதவளாகவே இருந்தாள். அவள் முகத்தில் பன்னீரைத் தெளித்துத் துடைத்தாள். மார்த்தாண்டவர்மன் உள்ளே நுழைந்து, ''ஏன் — ஏன் — அக்காவுக்கு என்ன?'' என்று கேட்டான். ''ஒன்றுமில்லை பூமயக்கம் போலிருக்கிறது'' என்றாள் கோதை.

''சரி — நீ பத்திரமாகப் பார்த்துக் கொள். நான் தம்பிரான் சுவாமிகளைப் பார்த்து விட்டு வருகிறேன்'' என்று சொல்லி விட்டு மார்த்தாண்ட வர்மன் சென்று விட்டான். இரண்டு தோழிப்



பெண்கள் பெரிய மயில் பீலி விசிறிகளால் பத்மாவதிக்கு விசிறிக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். மெதுவாகக் கதவைச் சாத்திக் கொண்டு ஆடை மாற்றுவதற்காகச் சென்று விட்டாள் கோதை.

சிறிது நேரத்தில் பத்மாவதி கண் விழித்தாள் — தான் படுத்திருப்பது கோதையின் அந்தப்புரம் என்பதை அறிந்து கொண்டாள். அவளுக்கு ஒவ்வொன்ருக நினைவுக்கு வரத் தொடங்கின ...

அன்று காலையில் ....

முடிசூட்டு விழா முடிந்ததும், விழாவிலிருந்து திரும்பிய ரவி வர்மன் மிகுந்த உற்சாகமாகக் காணப்பட்டான். தனது பள்ளியறையில் அலுப்புத் தீர சாய்ந்தபடி படுத்திருந்தான். எதிர்ந்த



கதவோரமாக அவனது சகோதரிகள் சாலியூர்த் தாவளி, மூரின்னூர் தாவளி, பள்ளிவிருத்தித் தாவளி ஆகிய மூவரும் நின்று கொண்டிருந்தனர். ''முடிதுறப்பது என்பது சேர நாட்டு மன்னர்களுக்கே வழக்கமாகப் போய் விட்டது'' என்ருன் ரவிவர்மன்.

''இதற்கு மூன் யாரண்ணு சேர நாட்டில் முடி துறந்திருக்கிருர்கள்?'' என்று கேட்டாள் சாலியூர்த் தாவளி.

''ஏன், இளங்கோவடிகள் முடி துறக்கவில்லையா?'' என்ருன் ரவிவர்மன்.

''அவர் மருடத்துக்கு உரியவர் அல்லவே; தம்பிதானே?'' — என்ருள் மூரின்னூர் தாவளி.

''பட்டத்துக்காக ஒருவரை ஒருவர் வெட்டிக் கொல்லுவதும் கட்டிப் போடுவதும் சேர நாட்டில் அதிகமில்லை — பெரும்பாலும் விட்டுக் கொடுப்பதாகவே இருந்திருக்கிறது'' என்ருள் பள்ளிவிருத்தித்தாவளி.

''விட்டுக் கொடுப்பது ஒருவகை அரசியல் தர்மம். ஏன் — கட்டிப் போடுவதும் காட்டுக்குத் துரத்துவதும் கூட அரசியலில் நியாயமாகத்தான் இருந்திருக்கின்றன'' என்ருன் ரவிவர்மன் சிரித்துக் கொண்டே.

''என்னவோ — நமது வம்சத்தில் இந்தச் சீர்கேடுகள் இல்லே'' என்று கபடமில்லாமல் சொன்ஞள் சாலியூர்த் தாவளி.

ரவிவர்மன் படுத்திருந்த அறை, மாளிகையின் நடு வளேவில் ஒரு பகுதி. அதன் வலது பக்கத்தில் குளிக்கும் அறை இருந்தது. இடது பக்கத்தில் பத்மாவதியின் பள்ளியறை இருந்தது. மாடத்திலேதான் சகோதரிகள் தங்குவது வழக்கம். அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போது மார்போடு சேர்ந்து ஒரு வெள்ளே முண்டு கட்டியபடி - தோளிலே ஒரு மஞ்சள் சேலேயைப் போட்டபடி, விரிந்த கூந்தலோடு தன் அறையிலிருந்து குளிக்கும் அறைக்குச் சென்ருள் பத்மாவதி. போகிற போக்கில் நாணத்தோடு தலேவனேப் பார்ந்து ஒரு புன்னகையை வீசிஞள். அவனும் புன்னகையாலேயே பதில் சொன்ஞன். இதை ஜாடையாகக் கவனித்த சகோதரிகள் மெதுவாகநடந்து மாடத்துக்குப் போய் விட்டார்கள்.

குளிக்கும் அறைக்குச் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டாள் பத்மாவதி. அது ஓர் அழகான சலவைக்கல் மண்டபம். சுவர்கள் சலவைக் கல்லாலும், தரை கடப்பைக் கற்களாலும் கட்டப்பட்டிருந்தன. நடுவிலிருந்த தொட்டி, முட்டை கலந்த சாந்து பூசி பளபளவென்று இருந்தது. எதிரே ஒரு பெரிய நிலேக்கண்ணுடி மாட்டப்பட்டிருந்தது. அவள் தன் ஆடையைக் களேந்து கொண்டிருக்கும் போது மெதுவாகக் கதவைத் தட்டிஞன் ரவிவர்மன்.

மெதுவாக — ''யாரது'' — என்ருள் பத்மாவதி.

''வேறு யார்?''—என்ருன்ரவிவர்மன்.

''நான் குளிக்கிறேன்'' என்ருள் அவள்.

''நானும் குளிக்க வேண்டும்'' என்ருன் அவன்.

''ஐயய்யோ — வேண்டாம்'' என்ருள் அவள் — ''நான் சத்தம் போட்டால் சகோதரிகளுக்குக் கேட்கும்; கதவைத் திற'' என்ருன் அவன்.

மஞ்சளாடையால் உடம்பைப் போர்த்தியபடி மெதுவாகக் - கதவைத் திறந்து விட்டுச் சுவரிலே மார்பைச் சாய்த்தபடி நின்ருள் பத்மாவதி.

உள்ளே நுழைந்த ரவிவர்மன் கதவைத் தாளிட்டான். அவள் தலேகுனிந்த



படி நாணத்தோடு ''என்ன இது?'' என்றாள்.

''அல்லி மலர்கள் தண்ணீருக்கு மேல் ஆடையில்லாமல் தான் நிற்கின்றன; ஆடை, வாடையைத் தடுக்கவே — கணவனின் ஜாடையைத் தடுக்க அல்ல'' என்றான் ரவிவர்மன்.

''தயவுசெய்து போய் விடுங்கள்; எனக்கு வெட்கமாக இருக்கிறது'' என்றாள் அவள்.

''தண்ணீருக்குள் விழும் போது குளிரத்தான் செய்யும்; கொஞ்ச நேரம் போனால் அதுவே சுகமாகி விடும்'' என்று அவள் ஆடையைப் பறித்தான் ரவிவர்மன். தடுப்பவள் போல் அவள் தடுத்தாள். ஆனால் தடுக்க முடியாதவள் போல் நடித்தாள். ஓடிப் போய் அவள் தண்ணீர்த் தொட்டிக்குள் விழுந்தாள். இப்போது தண்ணீரே அவளது ஆடையாகி விட்டது.

தண்ணீரைத் தொட்டுப் பார்த்த ரவிவர்மன், ''ஐயோ—கொதிக்கிறதே!'' என்றான்.

''உங்கள் கை குளிர்ந்திருக்கிறது!''

அப்போது பெண்மை பலமிக்கதாகவும் ஆண்மை பலவீனமாகவும் காட்சியளித்தன. கூரையில் பதித்திருந்த கண்ணாடி வழியாக வெய்யில் நிலவொளி, போல் பாய்ந்து கொண்டிருந்தது. அந்த ஒளியில் அவளது அழகு தகதகவென மின்னியது. கேரளப் பெண்களுக்கே உரிய இயற்கையான வாளிப்பான அந்த மேனியை வைத்த கண்கள் வாங்காமல் பார்த்தான் ரவிவர்மன்.

''மன்மதனுடைய அம்புகள் துளைத்த துளை வழியாகத் தென்றல் நுழைந்து சுவைத்து விட்ட வெறுங்கூட்டை ஏன் சுடுகிறாய் நிலவே?'' என்றாளாம் ஒருத்தி. இரண்டு வருஷ காலம் நீ எவ்வளவு பாடு பட்டிருப்பாய் என்பது எனக்குத் தெரியும். பெண்ணின் வாழ்க்கையே கணவன் அவளைத் திருப்தி செய்வதில் தான் இருக்கிறது. பகவான் பரந்தாமனைப் பற்றிப் படிக்கும் போது ஜலக் கிரீடையைப் பற்றியும் படித்திருக்கிறேன்'' என்றான் அவன்.

''ஐயையோ — வேண்டாம்'' என்றாள் அவள்.

''கை வேண்டாம் என்கிறது. கண் வேண்டும் என்கிறதே.''

''ஒரு யுகம் என்னைத் தனியாக இருக்கச் சொன்னாலும் நான் இருப்பேன்.''

''எந்தக் குலப் பெண்ணும் இருப்பாள். ஆனால் தூக்கம்தான் வராது.''

''உங்களுக்குப் பதில் சொல்ல ஒருத்தி போதாது.''

''இப்படிப்பட்ட அழகுஇருந்தால் உலகம் உள்ள வரை ஒருத்தியே போதும்.''

அவன் சிரித்தான்.

''எதற்காக என்னைக் குளிப்பாட்டுகிறீர்கள்?'' என்று கேட்டாள் அவள். அவள் இரண்டு அர்த்தத்தில் கேட்கவில்லை. ஆனாலும் இரண்டு அர்த்தம் இருந்தது.

அவள் ஆடை கட்டிக் கொண்டதும் கைகளில் அவளைத் தூக்கிக் கொண்டு கதவைத் திறந்து நடு வளைவு வழியாக அவளது பள்ளி அறைக்குக் கொண்டு சென்றான் ரவிவர்மன்.

கண்ணாடி முன்னால் அவளை உட்கார வைத்து நீண்ட கேசத்தை வாரி விட்டு முடிச்சுட்டு விழாவில் எடுத்த மலரை இடது நெற்றி ஓரமாகச் செருகி விட்டான்.

''இப்போது திருப்திதானா?'' என்றான் அவன்.

பெண் அதிகாரம் செய்யும் இடம் அதுதானே.

''இத்துடன் யார் திருப்தி அடைவார்கள்?'' என்று அவளைப் பள்ளியிலே சாய்த்தான்.

புனிதமான தாம்பத்ய உறவில் சிறிது நேரம் கழிந்தது. அவள் இப்போது அடிமை போலக் காட்சி அளித்தாள்.

பாதிக் கண்ணை மூடியபடி அவனைப் பார்த்தாள். உலகமெல்லாம் திரண்டு அவன் வடிவில் நிற்பது போல் தோன்றியது.

''நான் ஒன்று சொல்வேன், கேட்பாயா?'' என்றான் அவன்.

''சரி'' — என்றாள் அவள்.

சுவர்க் கண்ணாடிக்குப் பின்னாலிருந்து நான்கு ஓலைகள் கொண்ட ஒரு கட்டை எடுத்து வந்தான். அதை அவள் கையில் கொடுத்து, ''இதில் நீ மன்னரின் கைச்சாத்தை வாங்கி வர வேண்டும். கைச்சாத்தை வாங்காமல் திரும்பி வந்தால் என்னை நீ உயிரோடு காண முடியாது'' என்றான்.

அதன் பிறகுதான் அவள் அதை எடுத்துக் கொண்டு குளிக்கும் அறைக்குச் சென்றாள்.

— அத்தனையும் நினைத்துப் பார்த்த பத்மாவதிக்கு மீண்டும் தலை சுற்றிற்று.

விசிறிக் காற்று வெப்பக் காற்றாகத் தோன்றிற்று. தோழிப் பெண்களை வெளியே போகச் சொன்னாள். நாயகன் முகத்தில் எப்படி விழிப்பது என்று நடுங்கினாள்.

''என்ன அண்ணி'' என்றபடியே உள்ளே நுழைந்தாள் மெல்லிளங் கோதை.

அவளைப் பார்த்ததும் அடக்க முடியாத அளவுக்குப் பத்மாவதிக்குக் கண்ணீர் பெருக்கெடுத்தது. (தொடரும்)

# மின்னலடிக்குது ஸூப்பர் ரின்... வெண்மை
# ஓங்குது மேன் மேலும் !




ஸூப்பர் ரின் டிட்டர்ஜெண்ட் வில்லை: நீங்கள் இதுவரை உபயோகித்த எந்த டிட்டர்ஜெண்ட் வில்லையையும் விட, எந்த சோப்பையும் விட அதிக வெண்மை... ஒரே சலவையில் காண்பீர்கள் அந்த உயர்வை. அதோடல்ல, மின் வெண்மை மயமான ஸூப்பர் ரின் வெண்மை... சலவைக்கு சலவை அதி வெண்மை. செழிப்பான நுரை கொழித்து அதிக வெண்மையூட்டுவதற்கான பொருள்கள் அடங்கியது ஸூப்பர் ரின் ஒன்றுதான்—காத்திருந்த வெண்மையினைக் கைக்கெட்டச் செய்கிறது உங்களுக்கு.

**கொடுக்கும் பணத்திற்குக் கூடுதலான வெண்மை-தருவது ஸூப்பர் ரின்**

லின்டாஸ்—RIN. 19-140 TM


இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

"கண்ணில் சிறந்த உறுப்பில்லை" என்றார் நான்மணிக் கடிகை ஆசிரியர்.

உடம்பில் எந்தப் பகுதிக்கு உபாதை வந்தாலும் அவஸ்தைதான். ஆயினும் உண்மையில் மனித உறுப்புக்களிடையே மிகச் சிறந்த உறுப்பு கண்தான் என்று மிக நுட்பமாக உணர்ந்து புலவர் சொல்லியிருக்கிறார். இதற்கு மாறுபட்ட கருத்து இதுவரை வந்ததில்லை.

இத்தகைய சிறந்த உறுப்பாகிய கண்ணுக்கு சிகிச்சை செய்யும் ஆப்பிரிக்க – ஆசிய கண் வைத்தியர்களின் மகாநாடு சென்னையில் அண்மையில் நடைபெற்றது. ஆப்பிரிக்க – ஆசிய மகாநாடு என்று பெயர் இருந்தாலும் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் என்று உலகில் எல்லா நாடுகளிலிருந்தும் பிரபல டாக்டர்கள் வந்து குழுமியிருந்தார்கள். மொத்தம் முப்பத்தைந்து நாடுகளிலிருந்து சுமார் 850 டாக்டர்கள் வந்திருந்தார்கள்.

நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை கூடும் இம்மகாநாட்டுக்குக் கண் டாக்டர் லெப்டி





# கண் காப்போர் கருத்தரங்கு

னண்ட் கர்னல் வி. ரங்காச்சாரி எம். வி. தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. தமிழ் நாட்டுக்கும் இந்தியாவுக்கும் பெரிய கௌரவமாகும். டாக்டர் வி. ரங்காச்சாரி இச் சங்கத்துக்கு அடுத்த நான்கு ஆண்டுகளுக்குத் தலைவராக இருப்பார்.

இந்த மகாநாட்டின் பொதுக் காரியதரிசி டாக்டர் ஜே. அகர்வால் வரவேற்புரை நிகழ்த்தினார்.

- டாக்டர் அக்ரவால் திரு கருணாநிதியை மகாநாட்டுக்கு அழைத்து வருகிறார்.
- டாஜ் கோரமண்டல் ஹோட்டலில் நடந்த மகாநாட்டுக்கு வருகை தந்த டாக்டர்களும் அழைப்பினரும்.
- டாக்டர் ரங்காச்சாரி ஜப்பானிய டாக்டருடன் அளவளாவுகிறார். அருகே வேறு இரு அறிஞர்கள்.

மகாநாட்டைத் தொடங்கி வைத்த முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தமிழ் நாட்டில் ஏழைகளுக்குக் கண் சிகிச்சை செய்து, கண்ணாடிகள் வழங்கி, தமிழக அரசு புரியும் தொண்டினைப் புள்ளி விவரங்களோடு எடுத்துரைத்தார்.

தலைமையுரை நிகழ்த்திய தலைவர் டாக்டர் வி. ரங்காச்சாரி அவர்களுடைய பேச்சு வைத்திய நிபுணர்கள் அடங்கிய சபையின் கௌரவத்துக்கு ஏற்பக் கண்யமாகவும் அவரது அடக்கத்தைப் புலப்படுத்துவதாகவும்,



— எஸ்.வி.எஸ் —

இத்தகைய மகாநாடு எவ்வளவு பயனுடையது என்பதனைத் தெரிவிப்பதாகவும் இருந்தது. அவரது உரையிலிருந்து ஒருசில வரிகளைப் பாருங்கள்:

''1970க்குப் பிறகு கண் வைத்தியத் துறையில் ஏற்பட்டுள்ள அறிவு விஸ்தாரமும் முன்னேற்றமும் பிரமிக்க வைப்பதாக உள்ளன. நான் என் தொழிலை ஆரம்பித்த 1930ம் ஆண்டிருந்த நிலவரத்தையும், இப்பொழுதைய நிலையையும் ஒப்பிட்டுப் பார்க்கிறேன். வைத்திய உலகில் நடை பெற்று வரும் வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் ஒழுங்காகப் படித்து வரும் வழக்கம் கொண்டிருந்தும் இத்துறையில் என் அறிவு பூரணத்துவத்தை அடையவில்லை என்பதை உணர்கிறேன். ஆகவே, கருத்துப் பரிவர்த்தனைக்காவது மாதம் ஒருமுறை இம்மாதிரி கூடவேண்டும் என்று நினைக்கிறேன்.''

* * *

பிறகு மகாநாடு, கண் வைத்திய நிபுணர்களின் பேச்சுக்கள் சர்ச்சைகளாக நான்கு நாட்கள் நடைபெற்றது. இவை யாவும் அத்துறை நிபுணர்களுக்கே புரியக்கூடும். ஆகவே மகாநாட்டின் பயனைக் குறித்துப் பொதுவாகக் கூறும்படி டாக்டர் ரங்காச்சாரி அவர்களைக் கேட்டுக் கொண்டேன்.

''இந்த மகாநாட்டில் 150 ஆராய்ச்சிக் கட்டுரைகள் படிக்கப்பட்டன. கட்டுரைகள் மேல் விவாதங்கள் எழுந்தன. சந்தேகங்களுக்குத் தக்க பதில்களும் அளிக்கப்பட்டன.

''இம்மகாநாட்டுக்கு என்று விசேஷமாக ஆறு டாக்டர்களை விருந்தினர்களாக அழைத்துப் பேச வைத்தோம். இவர்கள் உரைகள், ஸ்லைடுகளின் உதவியுடனும் திரைப் படங்களின் உதவியுடனும் நடைபெற்றன. இந்த விசேஷ விருந்தினர்களுக்காக வரவேற்புக் கமிட்டி சுமார் பதினாயிரம் ரூபாய் செலவழித்திருக்கிறது.

''‘கடராக்ட்’ நீக்கும் நவீன முறைகள் மகாநாட்டில் விவாதிக்கப்பட்டன. ஜப்பானில் காடலின் என்ற மருந்தின் உதவி கொண்டு வெற்றிகரமாக கடராக்ட் குணப்படுத்தப்படுகிறது. இந்த மருந்து தற்சமயம் இந்தியாவிலும் கிடைக்கிறது. இந்த மருந்தின் தன்மைகளையும் பயன்களையும் இம்மகாநாட்டில் டாக்டர் அகிரா நகஜிமா எடுத்துரைத்தார்'' என்றார் டாக்டர் ரங்காச்சாரி.

சென்னையைச் சேர்ந்த டாக்டர் பத்ரிநாத் கண் திரையாகிய ‘ரெடினா’ சம்பந்தப்பட்ட கருத்தரங்கை நடத்தினார்.

டாக்டர் பி. ராமமூர்த்தி கண் நரம்பு சம்பந்தப்பட்ட கருத்தரங்கு நடத்தினார்.

ஆப்பிரிக்க ஆசிய கண் டாக்டர்கள் குழுவின் நிரந்தரத் தலைவரான எகிப்து டாக்டர் ஐ. அபூத். இந்தியாவில் தில்லியில் கண் வைத்திய ஆராய்ச்சிக் கழகம் நிறுவத் தீர்மானித்திருப்பதாக மகாநாட்டில் அறிவித்தார். இக்கழகத்துக்கு டாக்டர் எல். பி. அக்ரவாலைத் தலைவராக நியமித்தார்.

இவ்விதம் மேலட்டையில் மகாநாட்டின் தலைவர் டாக்டர் ரங்காச்சாரி காட்சியளிக்கிறார். அவர் கழுத்தில் தொங்கும் பதக்கம் தலைமைப் பீடத்தை அலங்கரிப்பவர் அணிய வேண்டியது. நாலு ஆண்டுகளுக்குப் பிறகு அடுத்த மகாநாட்டுத் தலைவருக்கு டாக்டர் ரங்காச்சாரி இதனை அணிவிப்பார். இந்தப் பதக்கத்தைநிறுவியவரே டாக்டர் ரங்காச்சாரி தான் என்பதால் ''ரங்காச்சாரி பதக்கம்'' என்றே இது பெயர் பெற்றுள்ளது. ரங்காச்சாரி பதக்கம் ஆழ்ந்த அறிவுக்கும் சீரிய தொண்டுக்கும் உருவகமாக என்றென்றும் விளங்கட்டும்.

### நஷ்டத்தில் லாபம்!

பல வருடங்கள் வேலையில்லாமல் திண்டாடிய ஒருவனுக்குப் பீங்கான் கடை ஒன்றில் வேலை கிடைத்தது. போய்ச் சேர்ந்த ஒரு வாரத்துக்கெல்லாம் பெரிய பீங்கான் ஜாடி ஒன்றை அவன் உடைத்துவிட்டான். மானேஜர் வந்து பார்த்து ''உன்னுடைய சம்பளத்தில் இதன் விலையை மாதாமாதம் பிடித்தம் செய்யப் போகிறேன்'' என்றார்.

''ஜாடியின் விலை எவ்வளவு சார்?'' என்று அவன் கேட்டான்.

''மூவாயிரம் ரூபாய்'' என்று பதில் வந்தது.

''அப்பாடா!'' என்று அவன் சந்தோஷப்பட்டான். ''எனக்கு இந்த வேலை வருடக்கணக்கில் உறுதியாகிவிட்டது!'' — ஆர். எம்.


விலையை ஒப்பிடுக.
தரத்தை சோதித்திடுக.
பாய்ண்ட்
தரமான டிட்டர்ஜண்ட்
சலவைப் பவுடர்
Point
DETERGENT WASHING POWDER
for sparkling white and brilliant colour washes
Point
Net Weight 750 gms
for sparkling white and brilliant colour washes
MCA/PD/4
மைசூர் சந்தன சோப் தயாரிப்பாளர் அளிப்பது
பெங்களூர் அரசினர் சோப்பு
தொழிற்சாலையின் ஒரு தரமான தயாரிப்பு

தலைப்பில் கவர்ச்சி இல்லையென்றாலும், படத்தில் சத்தான கதை இருக்கிறது. பாராட்டுக்குரிய நடிப்பாற்றல் வெளிப்பட்டிருக்கிறது. எந்தப் படத்திலும் இது வரையில் இல்லாத புதுமையான அம்சம் ('திக்கற்ற பார்வதி'யைத் தவிர): 'செட்'டே கிடையாது.

ரயில் கதையை இழுத்துக் கொண்டு போகிறது. கதையும் சில இடங்களில் ரயிலை இழுத்துக் கொண்டு போகிறது. எலமனூர் ஸ்டேஷன் பிளாட்பாரத்திலேயே காதல், கீதல் எல்லாம் நடக்கிறது. ரயில்வே ஸ்டேஷன் சூழ்நிலையிலேயே கதையைப் படரவிட்டிருப்பது புதுமை.

இந்தப் படத்தில், முதல் மார்க் எலமனூர் ஸ்டேஷன் மாஸ்டர் வேசாமியாக வரும் மேஜர் சுந்தரராஜனுக்குத்தான்...... ''ஹலோ, இது எலமனூர்'' என்று ஆரம்பித்து அவர் வேலை பார்க்கிற ஜோரே பிரமாதம். வாயாடிப் பெண்ணான மாலாவிடம் பேச்சுக் கொடுக்கும் போதும், அவள் தான் தன் மகனின் காதலி என்று அறிந்து கொண்ட போதும் ஸ்டேஷன் மாஸ்டரின் மன நிலையை மேஜர் சுந்தரராஜன் விண்டு காட்டிவிட்டார். ராணுவத்தில் தன் மகன் இறந்துவிட்ட செய்தியை அவன் காதலி மாலாவிடம் சொல்ல முடியாமல் துடித்த துடிப்பையும், தவித்த தவிப்பையும் அவரது அற்புதமான நடிப்பு நன்கு உணர்த்துகிறது.

அரைகுறை உடைகளில் பல படங்களில் நடித்து வந்த ஜெயசித்ரா இப் படத்தில், 'நல்ல பாத்திரமாகக் கொடுத்தால் நன்றாக நடிப்பேன்' என்று சொல்லாமல் சொல்லி விட்டார். துள்ளலும், துடிப்புமாக வந்த மாலா, தன் காதலன் இறந்து விட்டான் என்று தெரிந்ததும் எப்படி நெகிழ்ந்து போகிறான்! 'ஓ' என்று அலறாமல், 'பட பட' என்று 'டயலாக்' பேசாமல், கண்ணீரைக் கொட்டி விம்மியே அந்தப் பாத்திரத்தை நிலைநிறுத்தி விட்டார், ஜெயசித்ரா.

ஒரு கயவனின் பசப்பு வார்த்தைகளை நம்பித் தன்னையே இழந்து விட்ட ஓர் அபலைப் பெண்ணின் பாத்திரத்தை ஏற்றிருப்பவர் ஜெயலக்ஷ்மி. ஓடும் ரயிலில் தற்கொலை செய்து கொள்ள முயன்ற போது அவளைத் தடுத்துக் காப்பாற்றிய கிறிஸ்தவக் கன்னியாஸ்திரியிடம் தன் அவலக் கதையைச் சொன்னது, கற்பிழந்து கைக் குழந்தையுடன் பெற்ற தந்தையிடமே அடைக்கலம் புகுந்தது ஆகிய இடங்களில் மிக உருக்கமாக நடித்திருக்கிறார்.

உணர்ச்சிமயமான கதையில், காதல் சுவையைச் சேர்த்திருப்பவர் விஜயகுமார். களங்கமற்ற ஒரு பெண்ணைக் களங்கப்படுத்தும் கயவனாக வருபவர் ஸ்ரீ காந்த். நகைச்சுவைப் பொறுப்பை ஏற்றிருப்பவர் நாகேஷ். அவருக்குப் பக்கத் துணையாக இருந்து உதவுபவர்கள் தேங்காய் சீனிவாசன், நீலு ஆகியவர்கள்.

இரண்டே இரண்டு பாடல்கள். உருக்கமான கதையை அவற்றால் எதுவும் செய்ய முடியவில்லை! அது வரையில் சந்தோஷந்தான்.

திரைக் கதை வசனம் எழுதியிருக்கும் 'வியட்நாம் வீடு' சுந்தரம் படத்தின் டைரக்ஷன் பொறுப்பையும் ஏற்றுச் சிறப்பாக நிர்வகித்திருக்கிறார்.

ஸ்டேஷன் பிளாட்பாரத்திலேயே ஒரு குமட்டியை வைத்துக் கொண்டு அக்கினி வளர்த்துக் கல்யாணம் செய்து வைப்பது, அம்மி மிதிப்பது, அருந்ததி என்னும் பெயர் கொண்ட பெண்ணைப் பார்ப்பது ஆகியவையெல்லாம் சற்று அதிகப்படிதான். இருந்தாலும் மக்களைச் சிரிக்க வைக்க வேண்டுமே!

''இந்த 'டிஷ்யூம் டிஷ்யூம்' சண்டைக் காட்சிகளைத் தவிர்த்திருந்தால் படத்துக்கு நூற்றுக்குத் தொண்ணூறு மார்க் கிடைத்திருக்குமே!'' என்றேன், படத்தின் டைரக்டரிடம்.

''விநியோகஸ்தர்களைத் திருப்திப்படுத்த வேண்டுமே, ஸார்!'' என்றார் அவர். அதற்கு மேல் நான் என்ன பேச முடியும்?

சித்ராலயாவின் ''பயணம்'' மனத்துக்குப் பல விதத்திலும் திருப்தி அளிக்கும் நல்ல படம்.

— காந்தன்





# பொன்னியின் புதல்வர்

சுந்தா

## 17. சுதந்திர ஆனந்தம்

ஆடுவோமே — பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோமென்று

— பாரதியார்

பேரிகை கொட்டுங்கள்! முரசம் முழக்குங்கள்! சங்கம் ஊதுங்கள்! கொடி உயர்த்துங்கள்! விழா நடத்துங்கள்! ''வந்தே மாதரம்'' என்று வணங்குங்கள்! ''வாழ்க பாரதம்!'' என்று வாழ்த்துங்கள்! ''ஜெ ஹிந்த்'' என்று கோஷமிடுங்கள்!

கனவு அல்ல; பிரமை அல்ல; கற்பனையும் அல்ல! நம்முடைய வாழ்நாளில், நம்முடைய கண் முன்னே, இதோ பாரத புண்ணிய பூமி பூரண சுதந்திரம் அடைந்தது! இருநூறு வருஷத்து அந்நிய ஆட்சி முடிவடைந்தது! பாரத கண்டத்துப் பெரியோர்கள் செய்த தவம் சித்தி அடைந்தது! ஆயிரம் ஆயிரம் தேச பக்தர்கள் கண்ட கனவு நனவாயிற்று! லட்சோப லட்சம் தேசத் தொண்டர்கள் செய்த தியாகம் பலன் தந்தது! பகவத் கீதையில் பகவான் அருளிய திருவாக்குப் பலித்தது! சத்தியம் ஜயித்தது!

அதோ, இந்தியாவின் சுதந்திரக் கொடி நாடெங்கும் பறப்பதைப் பாருங்கள்! நேற்று வரையில் பிரிட்டிஷ் யூனியன் ஜாக் கொடி பறந்து கொண்டிருந்த கவர்ன்மெண்ட் மாளிகையிலும், இராணுவக் கோட்டைகளிலும் சர்க்கார் காரியாலயங்களிலும் இன்று தாயின் மணிக் கொடி வானளாவப் பறப்பதைப் பாருங்கள்! அதில் நீல வர்ணத்தில் பொறித்திருக்கும் அசோக சக்கரத்தையும் பாருங்கள் .....

விடுதலைக் களிப்பை அள்ளி வீசும் இந்த ஆரம்ப வாக்கியங்களுடன், 1947 ஆகஸ்ட் 15ந் தேதிய கல்கி சிறப்பு மலரின் தலையங்கம், ''வாழ்க சுதந்திரம்! வாழ்க நிரந்தரம்!!'' என்ற மகுடத்துடன் வெளியாயிற்று. வழக்கத்துக்கும் முன்னாலேயே இதை எழுதிய கல்கி சென்னை நகரிலே அல்லாமல், ''ஆனந்த நகரம்'' என்று அவர் வர்ணித்த கல்கத்தாவில் சுதந்திரப் பொன்னாளைக் கொண்டாடினார்.

முதல் நாள் வரை, இந்து — முஸ்லிம் பகைமையினால் கோர நரகம் போல் இருந்த கல்கத்தா அந்தத் திருநாளில் விழாக் கோலம் பூண்டு மகிழ்ச்சி ஆரவாரம் நிறைந்ததாய் மாறிற்று. அதைக் கண்டுதான், ''ஆனந்த நகரம்'' என்று அதைக் கல்கி வர்ணித்து அதையே தலைப்பாய்க் கொண்டு சுதந்திர மலரை அடுத்த நாலு இதழ்களில் ஒரு தொடர் கட்டுரை எழுதினார்.

அது ஓர் ஆனந்த நகரமாய்க் கல்கிக்குத் தோன்றியதற்கு மற்றொரு காரணம், சிறப்பான காரணம், அவருடைய அருந் தலைவர் ராஜாஜி அந்நகரத்து அரசாங்க மாளிகையில் மேற்கு வங்காளக் கவர்னராய்க் கொலு வீற்றதனாலாகும். அவருடைய பதவி ஏற்பைக் கண்ணாரக் கண்டு களித்ததனால் ஆகும்.

அந்தக் களிப்பினை அவர் உடனிருந்த டி. கே. சி. யுடனும், சின்ன அண்ணாமலையுடனும் சேர்ந்து அனுபவித்தார். பின்னர் அதை வாசகர்களுடன் பகிர்ந்து கொண்டார் :

...1799ம் ஆண்டிலிருந்து சுமார் நூற்றைம்பது வருஷம் இந்தியாவின் தலைநகராயிருந்த கல்கத்தாவில் எத்தனையோ வைஸ்ராய்கள் வாசம் செய்து தர்பார் நடத்தி, இந்தியாவை அரசு புரிந்த மாளிகை அல்லவா அது?... அப்பேர்ப்பட்ட பிரம்மாண்டமான மாளிகைக்குள்ளே நாங்கள் ஆகஸ்ட் 14ம் தேதி நள்ளிரவில் தங்கு தடையின்றிப் பிரவேசித்து தட் தட் என்று மச்சுப் படிகளில் ஏறினோம். சுவர்களிலே தொங்கிக் கொண்டிருந்த கிளைவ், வாரன் ஹேஸ்டிங்ஸ், காரன்வாலிஸ், வெல்லெஸ்லி முதலிய ஏகாதிபத்திய ஸ்தாபகர்கள் எங்களைப் பார்த்துத் திருதிருவென்று விழித்தார்கள். ஆள் உயரப் படங்களில் மேற்படி பிரபுக்கள் தத்ரூபமாக உயிருள்ளவர்களைப் போலவே தோன்றினார்கள். அவர்களில் சிலர் கத்தியை உருவும் நிலையில் நின்றார்கள். தொப்பி இல்லாமல் பூட்ஸ் இல்லாமல், சட்டையும் அங்க வஸ்திரமும் அணிந்த கறுப்பு மனிதர்கள், இந்த மாளிகைக்குள்ளே எப்படிப் பிரவேசித்தார்கள் என்று மேற்படி ஏகாதிபத்திய பிரபுக்களுக்கெல்லாம் ஒரே வியப்பும் திகைப்புமாகவே இருந்திருக்கும் அல்லவா?...

வைஸ்ராய்களும் கவர்னர்களும் வீற்றிருந்த சிம்மாசனத்தில் அமருவதற்காகக்

கதர் வேஷ்டியும், கதர் ஜிப்பாவும், குறுக்கில் மடித்த கதர் அங்க வஸ்திரமும் தரித்த மெலிந்த மனிதர் ஒருவர் முன்னும் பின்னும் 'எய்ட்டி காம்ப்' என்னும் கம்பீரத் தோற்ற முள்ள அதிகாரிகள் தொடர வந்துகொண் டிருந்தார். அந்த அதிசயக் காட்சியைச் சுவரில் தொங்கிய பிரிட்டிஷ் பிரபுக்களும் துரைமார்களும் கண் விழிகள் வெளியிலே வந்துவிடுமோ என்னும்படியாக விழித்துப் பார்க்கலானார்கள்.

இதற்குள்ளாக நாங்கள் முக்கிய நிகழ்ச்சி நடக்கப் போகும் ஹாலுக்குப் போய்விட் டோம். மேற்கு வங்காளத்தின் பத்து மந் திரிகள், நீதிபதி மித்தர், கல்கத்தாவின் ஷெரீப், மேயர், பிரபல பத்திரிகைக்காரர்கள் உள்ளிட்ட சுமார் நூறு பேர் வந்திருந் தார்கள். 'டாண்' என்று மணி ஒன்று அடித்த தும் அனைவரும் எழுந்து நின்றார்கள். ராஜாஜி நிதானமாக நடந்து வந்து சிம்மாசனத்தின் எதிரில் நின்றார். நீதிபதி மித்தர் அவர் முன் னால் வந்து, ''கவர்னர் பதவி வகிக்கத் தங் களுக்குச் சம்மதமா?'' என்று கேட்டார்.. ''சம்மதம்'' என்று ராஜாஜி பதில் சொன் னார். நீதிபதி மித்தர் அச்சிட்ட விசுவாசப் பிரமாணத்தை எடுத்துப் படிக்க, ராஜாஜி பின்னோடு சொல்லிக் கொண்டு வந்தார். கடைசியில் கையெழுத்தும் போட்டார். இது நடந்து வருகையில் நூறு காமிராக்கள் 'கிளிக்' 'கிளிக்' என்று சப்தித்தன. சினிமா காமிராக்கள் சரசரவென்று ஒலித்தன. படம் பிடிப்பதற்கு வேண்டிய பெரிய விளக்குகளை ஏற்றுவதும் அணைப்பதுமாக இருந்தார்கள். ராஜாஜி கையெழுத்துப் போட்டு முடிந்ததும் சபையில் ஒரு கணம் நிசப்தம் நிலவியது....

கவர்னர் பதவி ஏற்பு வைபவம் சுமார் இரண்டு மணிக்கு முடிவுற்றதும் நேரமானா லும் பாதகமில்லை என்று, தமிழ் நாட்டின் சார்பாக ராஜாஜிக்கு வாழ்த்துக் கூறுவதற் காக கவர்னர் மாளிகையில் அவர் இருந்த பகுதியைத் தேடிப் போனோம். வெகு தூரத் துக்கு வெகு தூரம் விஸ்தாரமாய் இருந்த அந்த மாளிகையில்,ஒவ்வொன்றும் ஒரு பெரிய வீட்டின் விசாலமுள்ள பல ஹால்களும் அறுநூறு அறைகளும் உள்ள அந்த அரண் மனையில் ராஜாஜி இரண்டரை அறையில் தமது ஜாகையை வைத்துக் கொண்டிருந்தார் என்பதை இங்கே குறிப்பிட்டு வைக்கிறேன்...

மறுநாள் காலையில் மறுபடியும் கவர்னர் மாளிகைக்குச் சென்றோம். எட்டு மணிக்கு நடைபெறவிருந்த கொடி ஏற்று விழாவைப் பார்ப்பதற்காகத்தான்.

குறிப்பிட்ட நேரத்தில் கவர்னர் ராஜாஜி வந்து சேர்ந்தார். அணிவகுத்து நின்ற படைகளைப் பார்வையிட்டார். கொடியை உயர்த்திப் பறக்க விட்டார். உடனே இரு பத்தொரு குண்டுகள் போடப்பட்டன. தேசிய கீதங்கள் பாடப்பட்டன.

இதே அனுபவங்களை ''வெள்ளி மணி'' இதழில் ''காணக் கண் கோடி வேண்டும்'' என்ற தலைப்புடன் எழுதிய சின்ன அண்ணாமலை, முதல் நாள் முன் னிரவில் தாங்கள் மூவரும் ராஜாஜி யைக் காணச் சென்ற விவரத்தையும் சேர்த்துச் சொன்னார். டெல்லியில் வகித்திருந்த மந்திரி பதவியை ராஜாஜி விடுத்து அன்று பிற்பகலில் தான் விமானம் மூலம் கல்கத்தாவுக்கு வந்து அரசாங்க மாளிகையில் குடியேறி இருந்தார். அப்படி இருந்தும், தம் மைக் காண வந்த நண்பர்களுக்கு விருந்தளிக்க ஏற்பாடு செய்து விட்டார். விருந்து என்றால் அதற்கு முன் அந்த மாளிகையில் நடந்திருக்கக் கூடிய விருந் துகளுக்கெல்லாம் முற்றிலும் மாறானது








★ மேற்கு வங்க கவர்னருடன் ஆனந்த நகரத்தில் டி. கே. சி., கல்கி.

★ ராஜாஜி இட்ட பணியை நிறை வேற்ற சாந்திநிகேதன் சென்றபோது.

★ ஸ்ரீ டி. எஸ். சீதாபதி — கல்கத்தா பாரதி தமிழ்ச் சங்கத் தலைவர்.

★ ஸ்ரீ வி. டி. சுவாமி — ''அறுபது எழுபது மைல் வேகத்தில்......''



சாதாரண ரேடியோ மெதுவாகப் பாடினாலும் வேகமாகப் பாடினாலும் மின்சாரம் ஒரே அளவுதான் செலவாகும். ஆனால் டிரான்ஸிஸ்டர் ரேடியோவை மெதுவாக வைத்தால் பாட்டரி செலவு குறைவாகும்.

- ஃபெமினா - 'பாபு'

---

—சாம்பார் ரசத்துடன் அசல் தமிழ் நாட்டுச் சாப்பாடு. அதுவும் கையால் பிசைந்து சாப்பிடும்படியாய்ப் பரிமாறப் பட்டது.

சுதந்திர உதய நாளுக்கு முன்னும் பின்னும், வந்தேமாதர கோஷத்துடன் மகாத்மா காந்திக்கும் ராஜாஜிக்கும் சேர்ந்து முழங்கிய ''ஜே'' கோஷங்களையும் நகரத்தில் தாம் சென்ற பேட்டைகளில் எல்லாம் மூவரும் கேட்டு மகிழ்ந்தார்கள். அத்துடன் ராஜாஜியின் கவர்னர் பதவி ஏற்பை எதிர்பாராத விதமாய்க் காணக் கிடைத்ததையும் எண்ணிக் களிப்புற்றார்கள்.

எதிர்பாராத விதமாய்த்தான் அது வாய்த்தது — எதிர்பார்த்தும், திட்டமிட்டும், ரவீந்திரநாத் தாகூரின் சாந்திநிகேதனுக்குச் செல்வதற்காக அவர்கள் மேற்கொண்ட ஒரு பயணத்துடன் இணைந்ததாக. எப்படி என்பதை ''தாகூர் தரிசனம்'' என்ற கட்டுரையில் கல்கி சொல்லியிருக்கிறார்.

மத்திய அரசில் கல்வி மந்திரியாய் இருந்தபோது சாந்திநிகேதனுக்கு விஜயம் செய்த ராஜாஜி, பல மொழிகளுக்கு அங்கே நூல்நிலையங்கள் இருக்க, தமிழ் மொழிக்கு மட்டும் இல்லை என்பதைக் கண்டார். அந்தக் குறையைத் தீர்த்து வைக்கும்படி ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாருக்கு ஒரு கடிதம் எழுதிக் கேட்டுக் கொண்டார். செட்டியார் வழங்கும் நன்கொடையைக் கொண்டு சாந்திநிகேதனில் தமிழ் நூலகம் நிறுவும் பணியை டி. கே. சி. யும் கல்கியும் நேரில் சென்று ஆற்ற வேண்டும் என்றும் விருப்பம் தெரிவித்தார்.

முற்பிறப்பில் செய்த புண்ணியத்தின் பயனை இந்தப் புனித யாத்திரைக்கு ஆகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் நாள் குறிப்பிடப்பட்டது. ஆகஸ்ட் 8ந் தேதி மகா கவி டாகூர் சமாதி அடைந்த தினம். அந்தப் புண்ணிய தினத்தில் தமிழ்ப் புத்தகங்களைச் சமர்ப்பிக்கும் விழாவை நடத்தினால் நன்றாக இருக்கும் என்று விசுவபாரதி நிர்வாகிகள் தெரிவித்திருந்தார்கள்.

ராஜாஜியின் கடிதம் கண்டதும் ராஜா ஸர் அவர்கள் வெகு உற்சாகமாக அதற்கு இணங்கினார்கள். உடனே தமிழ் நூல்கள் வாங்கிச் சேர்க்கும்படி (சின்ன அண்ணாமலையின் பதிப்பகமான) தமிழ்ப் பண்ணைக்கு உத்தரவு அனுப்பினார்கள்....

நாலாம் தேதி காலை ஒன்பது மணிக்கு மீனம்பாக்கத்திலிருந்து விமானம் புறப்பட்டது. விமானத்தில் பறக்கும்போது உண்மையில் எங்களுக்கு இறகு முளைத்து வானுலக தேவர்கள் போல் ஆகாச மார்க்கத்தில் பறப்பது போலவே எண்ணிக் கொண்டோம். இத்தகைய குதூகல உணர்ச்சிக்குக் காரணம், விமான நிலையத்தில் கிடைத்த பத்திரிகைகளில் நாங்கள் பார்த்த ஒரு செய்திதான். அதாவது ராஜாஜி ஆகஸ்ட் 15ந் தேதி மேற்கு வங்காளத்தின் 'மேன்மை தங்கிய கவர்னர்' ஆகிறார் என்பது.

(47ல் தயாரான கல்கி பொங்கல் மலர் 1948)

அந்த நற்செய்தி காரணமாய், வங்காளத்திலிருந்து திரும்புவதற்காக முன்பு திட்டமிட்டிருந்த தேதியைக் கல்கி தள்ளிப் போட்டுவிட்டு, முதலில் சாந்திநிகேதனுக்குச் சென்றார் — மற்ற இருவருடனும். ஏற்கனவே ரயில் மார்க்கமாய்க் கல்கத்தாவுக்குச் சென்றிருந்த கல்கியின் புகைப்படக்காரர் கணேசன், டி. கே. சி.யின் செயலாளர் பலராம ராஜா, சொந்தப் பணியாளர் ஒருவர் ஆகியோரும் அந்தப் பயணத்தில் சேர்ந்து கொண்டார்கள்.

கல்கியைப் பொறுத்தவரை, குருதேவரின் அந்தக் குருகுலத்துக்குச் சென்றது இரண்டாம் தடவையாகும். முதல் தடவையாகச் சென்றது இருபத்து நான்கு வருடங்களுக்கு முன்னால், கல்கி என்று பெயரெடுக்காத இளைஞராக. 1923ல் டெல்லியில் நடந்த காங்கிரஸில் கலந்து கொண்ட பின்னர், கல்கத்தா வழியே இரு நண்பர்களுடன் திரும்புகையில், அங்கே இரண்டு நாள் தங்கியிருக்கும் பேற்றினை அடைந்தார். ''இரவைப் பகலாக்கிய வெண்ணிலவில், சாந்திநிகேதனத்துக் குறுக்குச் சாலைகளில் மாணவர்களும், மாணவிகளும் டாகூரின் வங்காளி கீதங்களைப் பாடிக் கொண்டு அங்குமிங்கும் உலவிய'' காட்சி அவருடைய நினைவில் நிலையாகப் பதிந்து விட்டது. அந்த இரண்டு நாள் வாசத்தை மேலும் நினைவுகூர்கையில்—

பகல் நேரத்தில் விருட்சங்களின் குளிர்ந்த நிழலில் ஓர் ஆசிரியரைச் சுற்றிப் பத்துப் பதினைந்து மாணவர்கள் உட்கார்ந்து பாடம் கேட்ட காட்சிகளையும் சாந்திநிகேதனத்தில் கண்டோம். அது பண்டைக் காலத்து

நாலந்தா, தக்ஷசிலம் முதலிய குருகுலங்களை எங்களுக்கு ஞாபகப்படுத்தியது.

பிரார்த்தனை நேரத்தின்போது டாகூரையும் தரிசனம் செய்தோம். அரண்யத்தின் மத்தியில் உள்ள குருகுலத் தலைவரான மகரிஷியைப் போலவே அவர் இருந்தார். டாக்டர் டாகூரின் கவிதையைப் படித்ததிலிருந்து அவர் மேல் ஏற்பட்ட பக்தி, அவருடைய குருகுலத்தைப் பார்த்தபிறகு பன்மடங்காயிற்று. (மேற்படி)

அந்தக் குருகுலத் தலைவர், கல்கியாகக் கல்கி சென்றபோது இல்லைதான் — 1941ல் அவர் காலமாகிவிட்டார். ஆயினும் அவர் மறைந்தும் மறையாமலே இருந்தார் அங்கே:

சாந்திநிகேதனத்திலுள்ள ஒவ்வொரு கட்டிடத்திலும் குடிசையிலும் அவரைப் பார்த்தேன். ஒவ்வொரு செடியிலும் கொடியிலும் ஒவ்வொரு மரத்திலும் மலரிலும் அவரைப் பார்த்தேன். ஒவ்வொரு ஆசிரியரிடத்தும் ஒவ்வொரு மாணவரிடத்தும் அவரைப் பார்த்தேன். ஒவ்வொரு சிற்பத்திலும் சித்திரத்திலும் பார்த்தேன். ஒவ்வொரு விழாவிலும் வைபவத்திலும் பார்த்தேன்.

எங்கே திரும்பினாலும் மகா கவி டாகூரின் சாந்தம் குடிகொண்ட திருமுகம் தோன்றிக் கொண்டிருந்தது. அவருடைய அமுத கவிதைகள் அங்குள்ள மரம் செடிகளின் மர்மர சப்தத்தில் ஒலித்துக் கொண்டிருந்தன. அவருடைய ஆத்மாவின் தபோ சக்தி காற்று வெளியெல்லாம் பரவிச் சூழ்ந்து அந்தப் பிரதேசத்துக்கே தூய்மை அளித்துக் கொண்டிருந்தது. (மேற்படி)

தூய்மையும் சாந்தமும் நிலவிய அந்தக் கவித்தலத்தில் ''ரத்தன் குடில்'' எனப் பெயர் கொண்ட அழகான அதிதி விடுதியில், கல்கியும் நண்பர்களும் நாலு நாட்கள் தங்கியிருந்தார்கள். கீதாஞ்சலிக் கவிஞர் வசித்திருந்த மாளிகையின் தாழ்வாரத்தில் அவருடைய குமாரரும் விசுவபாரதியின் செயலாளருமான ரதீந்திரநாத் டாகூர், அவர்களுக்கு முதலில் வரவேற்பு விருந்தளித்தார். புகழ் மிக்க ஓவியர் நந்தலால் போஸும், சாந்திநிகேதன் நிர்வாகியும், டாகூர் இலக்கியத்தில் விற்பன்னருமான க்ஷிதிமோகன் ஸென்னும் அந்த விருந்தில் கலந்து கொண்டார்கள்.

அடுத்த நாட்களில் பல்வேறு அரிய அனுபவங்கள். எளிமைக்கும் இனிமைக்கும் உறைவிடமான குடிசைக் கோயில், பலவிதப் பண்ணைகளும் பட்டறைகளும் நிறைந்த ஸ்ரீநிகேதன், சைனாவின் பண்பாட்டை எடுத்துக் காட்டும் சீன பவனம், சித்திரமும் சிற்பமும் கற்பிக்கும் கலா பவனம் — இவற்றையெல்லாம் தமிழக அதிதிகள் கண்டு மகிழ்ந்தார்கள். (கலா பவனத்தின் தலைவர் நந்தலால் போஸ் அளித்த வண்ண ஓவியம் ஒன்றை, நந்திக் கலம்பகப் பாடல் ஒன்றின் விளக்கத்துடன் அந்த ஆண்டுத் தயாரான அடுத்த ஆண்டுப் பொங்கல் மலரில் கல்கி வெளியிட்டார்.)

அடுத்தடுத்து ஆடல் பாடல்களும், அழகு வண்ணங்களும் நிறைந்த நிகழ்ச்சிகள்; அவற்றில் மிகச் சிறப்பானது ''விருட்சாரோபண'' விழா. அடேயப்பா! ஒரு செடியை நடுவதற்கு என்ன தடபுடல்!

ஒரு சின்னஞ் சிறு செடிக்குப் பூமாலை சூட்டி அலங்கரித்தார்கள். அதை விமானத்தில் ஏற்றி வைத்து மேலே பூச்சக்கரக் குடை பிடித்தார்கள். நாலு பேர் விமானத்தைத் தூக்கிக் கொண்டார்கள். எதிரே சுமார் நூறு பெண்கள் இரு வரிசையாக நின்று ஆடலும் பாடலுமாக நடந்து சென்றார்கள். அந்தப் பெண்களுக்கு முன்னால் சிலர் மத்தளம் கொட்டினார்கள். சிலர் சங்கம் ஊதினார்கள். சிலர் வெண்சாமரம் வீசினார்கள். சிலர் மலர்களைத் தூவினார்கள். இம்மாதிரி அழகிய ஊர்வலம் அரை மைல் தூரம் சென்ற பிறகு, செடியை நடுவதற்காகத் தேர்ந்தெடுத்த இடம் வந்தது. அங்கே குழி வெட்டி, குழியைச் சுற்றி விதம் விதமான வர்ணக் கோலங்கள் போட்டிருந்தார்கள். குழிக்கு எதிரே உயரமான மேடை மீது, பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் ஆகிய பஞ்ச தேவர்களும் வீற்றிருந்தார்கள். அதாவது அவ்வாறு ஐந்து குழந்தைகளுக்கு வேஷம் தரித்து உட்கார வைத்திருந்தது. அக்கினிக்குச் சிவப்பு உடை, நீருக்கு நீல உடை — இப்படியாக வேஷங்கள். ஆச்சாரிய க்ஷிதிமோகன் ஸென் புரோகிதம் செய்ய, ஸ்ரீ ரதீந்திரரின் மனைவியார், அதாவது டாக்டர் டாகூரின் நாட்டுப் பெண், செடியை நீரால் அபிஷேகம் செய்து பூமியிலே நாட்டினார். சங்கங்கள், குழல்கள், மத்தளங்களோடு, மாணவர்களும் மாணவிகளும் நாத கீதங்களை ஒருமிக்க எழுப்பினார்கள். (மேற்படி)

இனி, தமிழக அதிதிகள் நேராகச் சம்பந்தப்பட்ட நூலக அன்பளிப்பு நிகழ்ச்சி பற்றிய வர்ணனையை, இதுவரை மேற்கோள்கள் எடுத்த கல்கியின் கட்டுரையிலிருந்து அல்லாமல், மகள் ஆனந்திக்கு அவர் எழுதிய கடிதம் ஒன்றிலிருந்து பார்ப்போம். அதைவிட இது சுருக்கமானது என்பதோடு, சகஜ

---

சாதாரணமாக இருக்க வேண்டிய எடையை விட இருபது சதவீதம் அதிக எடை உள்ளவர்களை 'குண்டு' என்று சொல்லலாம்.

'வீக்கெண்ட்' — 'பாலி'



## அடையபலம் திருப்பணி

அடையபலம் கிராமத்தில் இரு கண்கள் போன்று இரு சிவாலயங்கள், ஸ்ரீ பார்வதி அம்பாள் ஸமேத ஸ்ரீ காலகண்டேசுவரர் ஆலயம், ஸ்ரீ ஞானம்பிகா ஸமேத ஸ்ரீ நீலகண்டேசுவரர் ஆலயம் உள்ளன. ஸ்ரீ காலகண்டேசுவரர் ஆலயத்துக்கு ஸ்ரீ ஆசார்யாள் முன்னிலையில் 1960-ல் ஜீர்ணோத்தாரண கும்பாபிஷேகம் வெகு விமரிசையாக நடைபெற்றது. இப்பொழுது ஸ்ரீ நீலகண்டேசுவரர் ஆலயத்தைப் புதுப்பித்துக் கும்பாபிஷேகம் செய்யும் முயற்சி நடைபெற்று வருகிறது. இத் திருப்பணிக்குப் பக்த கோடிகள் தங்களால் இயன்ற பொருள் உதவி செய்ய வேண்டிய முகவரிகள்: கெ.சி. முத்தீசுவர உடையார், பொக்கிஷதார், c/o கே.சி. பரசுராம உடையார் அண்டு சன்ஸ், 332, சத்தியமூர்த்தி ரோடு, ஆரணி, வட ஆர்க்காடு. அல்லது எம். என். சந்திரசேகர சாஸ்திரி, அடையபலம் கிராமம், மெய்யூர் போஸ்ட், ஆரணி, வட ஆர்க்காடு.

நடை காரணமாய்ச் சுவை கூடுதலாயும் உள்ளது—

(சாந்திநிகேதன் 8—8—47).... பிரார்த்தனைக்குப் பிறகு குருதேவரின் கீதங்களைப் பாடிக் கொண்டு, அவர் வசித்த வீட்டுக்கு ஊர்வலமாய்ச் சென்றார்கள். அந்த வீட்டு மெத்தை அறைக்கு ஒவ்வொருவராய்ச் சென்று தரையைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டார்கள்.

இதற்குப் பிறகு டி. கே. சி. மாமாவும் நானும் இவ்விடம் வந்த காரியம் நடந்தது. அதாவது ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் நன்கொடை அளித்திருக்கும் ஆயிரம் தமிழ்ப் புத்தகங்களை விசுவபாரதிக்குக் கொடுக்கும் நிகழ்ச்சி. புத்தகங்களை வரிசையாக அடுக்கி வைத்துப் புஷ்பங்கள் தூவித் தீபம் ஏற்றி வைத்து, புத்தக வரிசைகளுக்கு முன்னால் எங்களுக்கு உட்கார இரத்தினக் கம்பளங்கள் விரித்திருந்தார்கள். நான் ஒரு பக்கமும், டி. கே. சி. மாமா ஒரு பக்கமும், நடுவில் விசுவபாரதி தலைமை ஆசிரியர் ஸ்ரீ க்ஷிதிமோகன் ஸென், குருதேவர் ரவீந்திரரின் குமாரர் ஸ்ரீ ரதீந்திரநாத் டாகூர்—இவர்களும் உட்கார்ந்திருந்தோம். எங்களுக்கு எதிரில் ஆசிரியர்கள் மாணுக்கர்கள் பலர். பிரார்த்தனை கீதங்களை மாணவியர் பாடினார்கள்.

ஒரு மாணவி டி. கே. சி. மாமாவுக்கும் எனக்கும் நெற்றியில் சந்தனத் திலகம் இட்டாள்.

பிறகு, க்ஷிதி மோகன் ஸென் எங்களை அறிமுகம் செய்து வைத்தார். "தக்ஷிண தேசத்திலிருந்து வந்திருக்கிறார்கள்; தாக்ஷிண்யத்தினால் வந்திருக்கிறார்கள்; ஸரஸ்வதி தேவிக்குத் தக்ஷிணை கொண்டு வந்திருக்கிறார்கள்" என்று அவர் சொன்னது ரஸமாயிருந்தது.

அந்தத் தட்சிணை விழாவிலும் சரி, சாந்திநிகேதனில் நடந்த வேறு நிகழ்ச்சிகளிலும் சரி, தாடியில்லாத் தாகூரின் பக்கத் துணையாக மட்டுமே கல்கி இருந்து கொண்டார். ஒவ்வொன்றிலும் டி. கே. சி. மட்டுமே முறைப்படி உரை நிகழ்த்தினர். அவருக்குத் துணையாகக் கூட கல்கி பேச இணங்கவில்லை.

சாந்திநிகேதன் விஜயத்துக்கு முன்னும் பின்னும் கல்கத்தாவில் நடந்த பல்வேறு நிகழ்ச்சிகளிலோ, டி.கே.சி.யுடன் கல்கியும் பேசினர். சின்ன அண்ணாமலையும் பேசினர்.

கல்கத்தாவில் நடந்த பெரிய நிகழ்ச்சிகளில் ஒன்று, அப்போது தொழில் பிரமுகர் டி. எஸ். சீதாபதியின் தலைமையில் இயங்கிய பாரதி தமிழ்ச் சங்கத்தில் ராஜாஜி உருவப் படத் திறப்பு விழா. படத் திறப்பை டி. கே. சி. நிகழ்த்தினர். அதை அடுத்துக் கல்கி பேசுகையில், தாமும், தமிழர்கள் அனைவரும் வங்காளத்துக்கு வெவ்வேறு விதங்களில் கடன்பட்டிருப்பதை எடுத்துச் சொன்னர். ராமகிருஷ்ணரும், விவேகானந்தரும் ஊட்டிய சமய வளர்ச்சி, விபின் சந்திர பாலர் தூண்டிய தேசிய எழுச்சி, பங்கிம் சந்திரர் வழங்கிய "வந்தே மாதரம்" கோஷம், சுபாஷ் போஸ் அளித்த "ஜே ஹிந்த்" முழக்கம் — இவ்வாறு கல்கி வரிசையாய் அடுக்கிக் கொண்டே போய், வியப்புடன் முடியும் கதைகளில் கையாளும் உத்தியுடன் முத்தாய்ப்பு வைத்தார்: "இப்படியெல்லாம் சென்ற ஐம்பது வருஷமாக வங்காளத்துக்குச் சென்னை மாகாணம் எத்தனையோ விதத்தில் கடமைப்பட்டிருக்கிறது. அவ்விதம் பட்ட கடனையெல்லாம் இன்று ராஜாஜியைக் கவர்னராகக் கொடுத்த ஒரே காரியத்தினால் சென்னை மாகாணம் தீர்த்துக் கொண்டு விட்டது!"

ராஜாஜி பதவி ஏற்ற நன்னாளின் மாலையில், ஆங்கிலத்தில் கல்கி ஓர் உரை நிகழ்த்தினர் என்ற விவரத்தைத் தமது கட்டுரையில் சின்ன அண்ணாமலை குறிப்பிட்டிருக்கிறார். அப்படி நிகழ்த்தியது, தட்சிண பாரத சேவை சங்கம் நடத்திய சுதந்திர விழாக் கொண்டாட்டத்தில். தலைமை வகித்த ("இண்டியன் ஃபைனான்ஸ்" ஆசிரியர்) சி. எஸ். ரங்கசாமி தமிழர் அல்லாதார் பலர் கூட்டத்தில் இருந்ததைக் கருதி, ஆங்

கிலத்தில் பேசும்படி கல்கியைக் கேட்டுக்கொண்டார். அதற்கிணங்க ''கல்கி ஆசிரியரும் யாதொரு தயக்கமுமின்றி ஆங்கிலத்தில் வாசாமகோசரமாய்ப் பேச ஆரம்பித்தார்'' என்று சின்ன அண்ணாமலை சொல்கிறார். அந்த மொழியிலேயே நிறைய நகைச்சுவையையும் அள்ளி வீசினாராம்.

யோசிக்கையில் இது வியப்புக்குரியதே அல்ல. எளிதாகவும் நேர்த்தியாகவும் ஆங்கிலத்தில் உரையாடக் கூடியவர் கல்கி. அம்மொழியில் மேடைப் பேச்சு நிகழ்த்தினார் என்பது மட்டுமே குறிப்பிடத் தக்கது.

கல்கத்தாவில் தங்கிய நாட்களில், வி. என். ராஜன் — ஜயா தம்பதியரின் இல்லத்து விருந்தினராய் கல்கி குழுவினர் இருந்தார்கள். ஐ.ஸி.எஸ். அதிகாரியான ராஜன், ஆட்சி மாற்றத்தினால் மனமாற்றம் கொண்டு அதற்கு ஒரு வெளி அடையாளமாக, ஐரோப்பிய உடையிலிருந்து சுதேசி உடைக்கு அதுவும் காந்திக் குல்லா உள்படக் கதர் உடைக்கு மாறியிருந்தார்.

அவரும் இன்னொரு நண்பர் வி.டி சுவாமியும் தாமே கார் ஓட்டி அதிதிகளை வெவ்வேறு இடங்களுக்கும் நிகழ்ச்சிகளுக்கும் கூட்டிச் சென்றார்கள். பெரிய கலகங்கள் ஓய்ந்தும் பதற்ற நிலையில் இருந்த அந்த நகரத்தின் தெருக்களில், அப்படிக் கூட்டிச் செல்வதற்கும் கூடச் செல்வதற்கும் மிக்க தைரியம் வேண்டியதாய் இருந்தது.

ஒரு வருட காலமாய் அந்நகரில் நடந்து வந்த கலகங்களின்போது பல தமிழர்களையும் வங்காளிகளையும் ஆபத்திலிருந்து காப்பாற்றி, அவர்களுடைய நன்றிக்கும் பொதுமக்களின் பாராட்டுக்கும் உரித்தானவர் வி. டி. சுவாமி; ஏற்கனவே நல்ல சில பொதுப் பணிகள் மூலம் புகழ் ஈட்டியவர். கல்கி விரும்பியதன் பேரில் பயங்கரப் பகுதிகள் சிலவற்றை அறுபது எழுபது மைல் வேகத்தில் தமது ''மாரிஸ்'' காரை ஓட்டியபடி அவர் சுற்றிக் காட்டினார். அந்தக் கன வேக சவாரிகளின் போது கண்டதையும் அங்கங்கே நடந்த கோரங்களைப் பற்றிக் கேட்டதையும், தம் மனத்திலே கல்கி பதித்துக் கொண்டு, பின்னர் ''அலைஓசை'' நாவலின் இறுதிப் பகுதியில் ஒரு துயர ஓசையாய் எழுப்பினார் — ''ஹாவ்ரா ஸ்டேஷனில் சீதா இறங்கியபோது கல்கத்தா நகரத்துக்குள்ளே இருந்து, ஆயிரம் நரகங்களிலிருந்து வருவது போன்ற கோர சப்தம் வருவது கேட்டது...''

கலகத்தை அடக்கி வகுப்பு நல்லுறவைப் பேணுவதற்காக, கல்கத்தா நகரின் மத்தியப் பகுதியில், தனியொரு சமாதானக் காப்பாளராக அப்போது காந்தி மகாத்மா நிலையம் கொண்டிருந்தார். ''மகாத்மாவைக் காண வேண்டும் எனக் கல்கி விரும்பவில்லையா?'' என்று வி. டி. சுவாமியைக் கேட்டபோது, ''விரும்பத்தான் செய்தார்; ஆனால் அவரைப் பாதி தூரம் கூட்டிச் சென்ற பிறகு, கூட்டமும் குழப்பமும் காரணமாய்த் திரும்ப வேண்டியதாயிற்று'' என்று அவர் கூறினார். அவர் மேலே செல்ல அஞ்சவில்லை என்றாலும் அதே சமயம் கல்கியை வீணே அபாயத்துக்கு உள்ளாக்கவும் விரும்பவில்லை.

எந்த சுதந்திரத்துக்கான போராட்டத்தில் மகாத்மா பெரும் பங்கு கொண்டாரோ, அந்த சுதந்திரம் உதயமான போது, அதை அவர் ஆனந்த சுதந்திரமாகக் கொண்டாடவில்லை. ''அமைதி இல்லாமல் ஆனந்தம் ஏது?'' என்று வேதனையுடன் கேட்டார் அவர்.

கலப்பற்றதாய் இருக்கவில்லை சுதந்திர ஆனந்தம். (தொடரும்)

# தெருவில் ஒரு விளக்கு!

அமுதவன்

**பு**திது புதிதாக எத்தனை மின்சார பல்புகள்தான் போட்டாலும் இந்தக் கம்பத்துக்கு நிரந்தரமில்லை. அவை எப்படியோ உடைபட்டுப் போகின்றன. யார் உடைக்கிறார்கள் என்பது யாருக்குமே விளங்கவில்லை. சப்-இன்ஸ்பெக்டர் செண்பகம் ஆகட்டும், அவருக்கு நேர் எதிர் வீட்டிலே இருக்கும் எம். எல். ஏ.வான வடிவேலு பிள்ளை ஆகட்டும், இரண்டு பேருமே கண்ணில் விளக்கெண்ணெய் விட்டுக் கொண்டுதான் கவனித்து வருகிறார்கள். சப்-இன்ஸ்பெக்டர் இங்கே குடி வந்து இரண்டு மாதங்கள் ஆகின்றன. இவர் வந்த பிறகுகூடப் புதிதாக மூன்று பல்புகள் போட்டு விட்டார்கள். அதிகம் போனால் ஒரு வாரம் வரை எரியும், அவ்வளவுதான். அடுத்த நாள் நொறுங்கிப்போய்க் கிடக்கும். அவரே முயற்சி எடுத்து மூன்று தடவையும் மின்சார வாரியத்துக்கு ஃபோன் செய்து வெவ்வேறு பல்புகள் போட வைத்தார். அவருடைய வீட்டு காம்பவுண்டுச் சுவரை ஒட்டியதாகத் தெருவில் அந்த விளக்குக் கம்பம் இருக்கிறபடியால் அதில் விளக்கு எரிவதில் அவர் வீட்டுக் காம்பவுண்டு தொடங்கி வாசல் வரை வெளிச்சம் வரும். அதனால் அந்தக் கம்பத்தில் விளக்கு எரிவது அவருக்குச் சௌகரியம் மட்டுமல்ல. அவசியமும் கூட.



எம். எல். ஏ. வடிவேலுப் பிள்ளை வீட்டுக்கோ காம்பவுண்டுக்கோ இந்தக் கம்பத்தில் விளக்கு எரிவதில் — வெளிச்சம் என்று பார்க்கும்போது அப்படி ஒன்றும் பிரயோசனம் இல்லைதான். ஆனால் இங்கே விளக்கு எரிவதில் இந்த வெளிச்சம் ஒரு பாதுகாப்பாக இருக்கும். முதலிரண்டு தடவை சப்-இன்ஸ்பெக்டர் செண்பகம் மின்சார வாரியத்துக்கு டெலி







போன் செய்து ''எங்க வீட்டுக் காம்பவுண்டை ஒட்டிய தெருவில் உள்ள கம்பத்தில், அதாவது சார்லஸ் ரோடு தொடக்கத்தில் பஸ் நிலையம் பக்கத்தில் உள்ள விளக்குக் கம்பத்தில் பல்பு போய்விட்டிருக்கிறது. வேறு மாற்றுங்கள்'' என்று சொல்லியபோது — ஒரு சப்-இன்ஸ்பெக்டர் சொல்லுகிறாரே என்பதற்காக வேறெதுவும் சொல்லாமல் ''ஆகட்டும் சார்! மாற்றி விடுகிறோம்'' என்று மட்டும் சொல்லி மாற்றியும் விட்டார்கள். அவர் மூன்றாவது முறையாகவும் மின்வாரியத்துக்குப் போன் செய்து ''சப்-இன்ஸ்பெக்டர் செண்பகம் பேசுகிறேன். இங்கே சார்லஸ் ரோடு தொடக்கத்தில் பஸ் நிலையம் பக்கத்தில்...'' என்று சொல்லத் தொடங்கியபோது அந்த முனையில் — டெலிபோனில் பேசிக் கொண்டிருந்த ஒரு குமாஸ்தா ''ஒன் மினிட் சார், எங்க ஆபீசர் பேசுவார்'' என்று சொல்லி டெலிபோனை வேறொருவர் கைக்கு மாற்றினார்.

அந்த ஆபீஸர் சொன்னார்: ''என்ன சார் இது? நீங்களே கடந்த மூன்று மாதங்களுக்குள் மூன்றாவது தடவையாக இப்படி எங்களுக்கு ஃபோன் பண்ணுகிறீர்கள் என்று நினைக்கிறேன். அங்கு விளக்கு 'பர்ன் ஆவதோ, 'ஃப்யூஸ்' போவதோ இல்லை. ஒவ்வொரு சமயமும் உடைக்கப்படுகிறது. திட்டமிட்டு யாரோ இதைச் செய்து கொண்டு வருகிறார்கள் என்று தோன்றுகிறது. அதைக் கொஞ்சம் கவனியுங்கள் சார். இன்னும் கொஞ்ச நாள் பார்த்துக் கொண்டு அந்த விளக்குக் கம்பத்தை 'ரிமூவ்' பண்ணிவிடலாம் என்றுகூட இருந்தோம். இதுக்கு மேல் அதை நீங்கள் கவனிச்சிப்பீங்கன்னு நெனைக்கிறேன். இன்ஸ்பெக்டர் வீட்டு வாசலிலேயே இப்படி நடக்கிறதென்றால் எப்படிசார்?'' என்று கேட்டுச் சிரித்தார் அவர்.

மின்வாரிய அதிகாரி இப்படிச் சொல்லி டெலிபோனை வைத்தது சப்-இன்ஸ்பெக்டர் செண்பகத்துக்குக் கொஞ்சம் கோபத்தை உண்டு பண்ணியது.

அன்றிலிருந்துதான் இந்த விளக்குக் கம்பத்தின் மீது ஒரு கண் வைத்துக் கொள்ள ஆரம்பித்தார் சப்-இன்ஸ்பெக்டர். ஒவ்வொரு நாளும் விடிகாலையில் எழுந்து பேப்பர் பையனிடமிருந்து பேப்பர் வாங்குவதற்காகச் சைக்கிள் மணிச் சப்தம் கேட்டதும்தான் கதவைத் திறந்து கொண்டு வெளியில் வருவது வழக்கம். அப்படிக் கதவைத் திறந்தவுடன் அவர் பார்வை இந்த விளக்குக் கம்பத்தில்தான் முதலில் பதிவது வழக்கமாகி விட்டது அன்றையிலிருந்து. அதில் பல்பு இருந்தால் மனம் திருப்தியடைந்து விடும் அவருக்கு. ஆனால் இந்தத் திருப்தி அடிக்கடி சிதைக்கப்படுவதற்கு அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. சப்-இன்ஸ்பெக்டருக்கு இது ஒரு புதிராகவே இருந்தது. அவர் பல தடவை மண்டையைப் போட்டு உடைத்துக் கொண்டிருக்கிறார். ஒரு காரணமும் புரியவில்லை.

அடுத்த நாள்.

நல்லவேளை, விளக்கு அப்படியே இருந்தது. தினமும் இப்பொழுதெல்லாம் காலையில் விளக்குக் கம்பத்தைப் பார்ப்பதோடு நின்றுவிடாமல் அருகில் நெருங்கியும், சுற்று முற்றும் பார்ப்பார் அவர். ஏதாவது முஸ்தீபுகள் நடந்திருக்கின்றனவா அல்லது அகஸ்மாத்தாகத்தான் உடைந்து நொறுங்கிக் கொண்டிருக்கின்றனவா இந்த பல்புகள்?

அவர் டூட்டிக்குத் தயாராக யூனிபாரத்துடன் வந்து வாசலில் நின்றார். போலீஸ் ஸ்டேஷனிலிருந்து ஜீப் வரும் அவரை அழைத்துப் போக. சிந்தனையுடன் மெல்ல அந்த வராந்தாவில் உலாவிக்கொண்டிருந்தார் அவர். ஜீப் வந்து நின்றது. ஓட்டி வந்த கான்ஸ்டபிள் வண்டியை விட்டிறங்கி விறைப்பாக நின்று சல்யூட் அடித்தார். இவர் அதை ஏற்றுக் கொண்டதற்கு அடையாளமாகத் தலை அசைத்ததும், அட்டென்ஷன் கலைந்து, ஜீப்பில் உட்கார்ந்து அதைக் கிளப்ப ஆயத்தமானார். ஜீப்பில் ஏறி அமர்ந்தார் சப்-இன்ஸ்பெக்டர் செண்பகம். ஜீப் கிளம்பியது.





சட்டென்று எதையோ நினைத்துக் கொண்ட சப் இன்ஸ்பெக்டர், 'ஒன் மினிட்' என்று சொல்லி ஜீப்பிலிருந்து குதித்தார். தீவிரமாக யோசித்தவாறே கட்டை விரல் நகத்தைக் கடித்துக் கொண்டே அந்தக் கம்பத்தண்டை சென்று நின்றார். இப்படியும் அப்படியுமாகத் திரும்பிப் பார்த்தார். கம்பத்துக்கு ஒரு இருபதடி தள்ளி, இவர் வீட்டுக் காம்பவுண்டில் வேர் ஊன்றி வெளியே ரோட்டுப்புறமாகக் கிளை பரப்பியிருக்கும் சம்பங்கி மரத்தினடியில் வழக்கமாக உட்கார்ந்து தன் தொழிலைக் கவனிக்கும் சென்னியப்பன், கறுகறுப்பாகத் தன் வேலையில் ஈடுபட்டிருந்தான். இந்தக் காலை வேளை என்பது அவனுக்கு எப்போதுமே ஒரு 'பிஸி அவர்'. அப்படிக் காலையிலேயே கிடைத்து விட்ட 'கிராக்கி'க்காக ஓர் ஒற்றைக் கால் செருப்பைத் தைக்க வேண்டி அவசரம் அவசரமாகத் தகர டப்பா ஒன்றிலிருந்த தண்ணீரில் ஒரு செருப்பைப் போட்டு முக்கி எடுத்துக் கொண்டிருந்தான்.

அவனுடைய கறுகறுப்பைக் கண்டு அவன் மீது சப் இன்ஸ்பெக்டருக்கு எப்போதுமே ஒரு பிரியம். 'என்ன வேகமாய் அவன் காரியம் செய்கிறான்' என்று மனத்துக்குள் வியந்தார் அவர். ஒரு கால் செருப்பை அவனிடம் கழற்றித் தந்து விட்டதால் இன்னொரு காலில் ஒற்றைச் செருப்புடன், இந்தக் காலை, அதாவது வெறுங்காலைக் கீழே வைத்துப் பழக்கமில்லாததால் கீழே வைக்காமல் பெரு விரல் மட்டும் நிலத்தில் பதித்து ஊன்றி நாட்டிய முத்திரை பிடித்தவன் போல் கையில் புத்தகக் கட்டுடன் நின்றிருந்தாள் ஒரு கல்லூரி மாணவி.

அங்கே வந்து நின்ற சப் இன்ஸ்பெக்டர் அவனைப் பார்த்து, ''ஏம்ப்பா, நீ எப்பவும் இங்கேதானே இருக்கிறே?'' என்றார்.

''ஆமாம், சாரு'' என்றான் அவன்.

கல்லூரி மாணவி தனக்கு நேரமாகிவிட்டதென்று அவனுக்கு உணர்த்த வேண்டுமென்பதைப் போலக் கடிகாரத்தைப் பார்த்துவிட்டுச் சென்னியப்பனைப் பார்த்தாள். 'இந்த ஆளிடம் பேசத் தொடங்கி விடுவாரோ?'

ஆனால் அவன் செருப்பைத் தைப்பதில் தான் ஈடுபட்டிருந்தான். தன் எதிரில் வந்து நிற்பது ஒரு போலீஸ் அதிகாரி என்பதற்குத் தனி பரபரப்புக் காட்ட வேண்டியது அவசியம் இல்லை என்று அவன் நினைப்பதைப் போலிருந்தது அவன் செய்கை.

''ஏம்ப்பா!'' என்றார் செண்பகம். அந்த 'ஏம்ப்பா'வில் ஓர் அழுத்தம் விழுந்திருந்தது. சென்னியப்பன் தலை நிமிர்த்தினான். ''உன்னை ஒன்னு கேட்கணும். இந்தக் கம்பத்துலே அடிக்கடி விளக்கு உடைஞ்சு போவுது. கவனிச்சிருக்கியா நீ? யாரோ அடிக்கடி உடைக்கிறாங்க போல் தெரியுது. யாருன்னு தெரியுமா உனக்கு?''

அவன் கண்களை இடுக்கி சப் இன்ஸ்பெக்டரைப் பார்த்தான். 'எனக்கென்ன தெரியும்' என்றது அந்தப் பார்வை. ''உடைக்கிறாங்களா?.... எனக்கின்னு தெரியும் சார்?'' என்றான்.

''ஆமா. இங்கேயே இருக்கிற நீ இதைக் கூடக் கவனிச்சதில்லையா? அதோட அஞ்சாறு தடவை உடைச்சிருக்காங்க... விஷயம் என்னவென்று தெரியணும். இனிமேலாவது நீயும் ஒரு கண் வைச்சுக்கோ.... ஏதாச்சும் சந்தேகம் வந்துச்சுன்னு எனக்குத் தெரிவி'' என்றார்.

''ஆட்டும் சார்!'' என்று தலையாட்டினான் சென்னியப்பன். 'டக் டக்' என்று ஷூ ஒலி சப்திக்க மிடுக்குக் கலையாமல் நடந்து சென்று ஜீப்பில் ஏறிக் கொண்டார் சப் இன்ஸ்பெக்டர். ஜீப் புறப்பட்டது.

''தே, இன்னாது அது, இன்ஸ்பெட்டர் ஐயா கையிலே பேச்சுக் கொடுத்துக்கினு இருந்தே?'' என்று கேட்டுக் கொண்டே இடுப்பிலிருந்த குழந்தையைத் தரையில் இறக்கினாள் ஒரு பெண் — சென்னியப்பனின் மனைவி. அவள் தூரத்திலிருந்தே சப்-இன்ஸ்பெக்டர் பேசிக் கொண்டிருந்ததைக் கவனித்துக்கொண்டே வந்தாள் போலும்.

''ஆ...? அது வந்து, இந்தக் கம்பத்தோட பல்பை யாரோ ஒடைக்கிறாங்களாம். யாருன்னு தெரியலியாம். யாருன்னு நாம பார்த்துச் சொல்லணுமாம். 'தொரை' சொல்லிட்டுப் போறாரு. நமக்கு 'வேறே வேலை வெட்டி ஏது? அதான் இங்கே வேலை பாரு''... என்று முணுமுணுத்தான் அவன்.

அவன் சொன்னதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் கையிலிருந்த குழந்தையின் மூக்கில் ஒழுகிக் கொண்டிருந்த சளியை

---

ராஜாஜி சிந்தனை

## தனி நபரைத் தாக்காதே!

நான் எச்சரிக்கை செய்ய வேண்டிய விஷயம் இது:

குற்றம் குறைகளைக் கண்டு பிடி; ஆனால் மக்களை மட்டும் தாக்காதே. குற்றங்களை எடுத்துக்காட்டு. ஆனால் யாரையும் வையாதே. போன ஜன்மத்தில் செய்த பாப புண்ணியங்களுக்குத் தக்கவாறு மக்களைக் கடவுள் சிருஷ்டிக்கிறார். அத்துடன் அவர்கள் பிறந்து வளரும் சூழலுக்குத் தக்கவாறு மாறுதல்களும் அடைகின்றனர். அதனால் நாம் எல்லோரிடமும் இரக்கம் உடையவர்களாக இருக்க வேண்டும். இதை மனத்தில் வைத்துக் கொண்டு குறைகளை மட்டும் தாக்க வேண்டுமேயன்றி, குறையுடைய மக்களைத் தாக்கலாகாது என்று எண்ணிக் காரியம் செய்தால் மட்டுமே நாம் எடுத்த காரியத்தில் வெற்றி பெறுவோம். மக்களைத் தாக்குவதில் மகிழ்ச்சி காண்போமானால் எதிர்ப்பும் சண்டை சச்சரவுகளுமே சிருஷ்டி செய்து கொள்வோம். நான் கூறும் வேறுபாடு மிக நுண்ணியதாகத் தோன்றலாம். ஆனால் இந்த வேறுபாட்டை நினைவில் கொண்டு மக்களை மறந்து சீர்திருத்தம் மட்டும் செய்வோமானால் நம்முடைய சேவை வெகு விரைவில் பலன் தரும்.

(சமூக சீர்திருத்தம் என்ற கட்டுரையில்)



உங்களுக்கு விருப்பமான ப்ரூ
இப்பொழுது குறைந்த விலைக்கு
ரீ:பில் பாக்கெட்டில்
கிடைக்கிறது
200 கிராம்-(ஜாடியைவிட ஒரு ரூபாய் குறைவு)
50 கிராம்-(ஜாடியைவிட 50 பைசா குறைவு)
Refill Pack
Brooke Bond
BRU
INSTANT
Brooke Bond
BRU
INSTANT
கெட்டியான
ஸ்ட்ராங்கான
ப்ரூ ருசி
சிறந்த காப்பியின் ருசி
OBM-4381A/3 TAM

அவள் முந்தானையால் துடைத்து விட்டாள். "அட, அந்த ஆள் கெடக்காரு. நீ நம்ம வேலையைப் பாருய்யா."

"டயமாச்சி எனக்கு" என்று திடீரென்று ஞாபகப்படுத்தினாள் கல்லூரி மாணவி. "தோம்மா, ஒரு நிமிஷம்" என்று சொல்லித் தைக்க ஆரம்பித்தான் சென்னியப்பன்.

**வா**ரம் ஒரு கட்சி என ஆரம்பிக்கப்படும் அந்நாட்டின் அரசியல் சரித்திரம் — இதோ நடந்து கொண்டிருக்கிறதே ஒரு புதிய அரசியல் கட்சியின் கூட்டம் இதையும் தன்னுடைய கணக்குகளில் ஒன்றாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.' இந்தக் கட்சியின் பெயர் 'இளைஞர் கட்சி'யாம். இதைத் தோற்றுவித்த இளைஞர்களின் சிங்கமும், அதன் தலைவருமான பொன்னுரங்கம் மைக்கில் பொழிந்து தள்ளிக் கொண்டிருந்தான். "சிங்கார நகரம் சீரழிந்து கிடக்கிறது. வண்ண விளக்குகள் ஒளியைச் சிந்த வேண்டிய சாலைகளிலும் தெருக்களிலும் இருள் மண்டிக் கிடக்கிறது. சரியான பராமரிப்பு இல்லை. பள்ளிகளில் தரம் இல்லை; சாலைகள் எல்லாம் குண்டும் குழியுமாய்க் கிடக்கின்றன. ஒரு தெருவில் கூட எல்லா விளக்குக் கம்பங்களிலும் இரவில் விளக்குகள் எரிவதில்லை. இம்மாதிரியான மோசமான நகரசபையின் நிர்வாகம் இருந்தால் எப்படி? ஆகவே வாக்காளப் பெருமக்கள் வருகின்ற தேர்தலில் இந்த ஆளும் கட்சியைத் தோற்கடித்து எங்கள் — மன்னிக்கவும் — நம்முடைய இளைஞர் கட்சியை வெற்றி பெறச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்."

கூட்டம் கலைந்ததும் மேடையில் பேசிய நண்பர்களுடன் அவர்களின் தலைவன், பொன்னுரங்கமும் இன்னும் சிலரும் பேசிக் கொண்டே நடக்க ஆரம்பித்தனர். ஒருவன் கேட்டான்: "ஏன்டா, பொன்னு, 'தெருவெல்லாம் இருள் மண்டிக் கிடக்கிறது. விளக்குகள் எரிவதில்லை' என்றெல்லாம் பேசினாயே, எங்கேயோ சில இடங்களில் அப்படி இருக்கலாம். ஆனால் பொதுவாக எல்லாக் கம்பங்களிலும் விளக்குகள் எரிந்து கொண்டுதானே இருக்கின்றன?"

'ஹஹ் ஹஹ் ஹஹ்' எனச் சிரித்தான் பொன்னுரங்கம். தான் மேடையில் பேசியதை நியாயப்படுத்த வேண்டும் என அவனுக்குத் தோன்றியதோ என்னவோ, அவன் சொன்னான். "எரிகிறதுதான். எரியட்டுமே! எனக்குத் தெரியாதா என்ன? ஆனால் நாம் மேடையில் இப்படியேதான் பேச வேண்டும். இதையேதான் திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் ஒன்று செய்வோம். அமெரிக்காவில் பல ஆண்டுகளுக்கு முன்பு ஒரு புதிய ஆங்கிலத் தினசரி தொடங்கினார்கள். பிரபலமான நியூயார்க் டைம்ஸுக்குப் போட்டியாக வரவேண்டுமென்று எவ்வளவோ முயன்றார்களாம். ஆனால் முடியவில்லை. செய்திகளை எவ்வளவு முடியுமோ அவ்வளவு கடச் கடக் கொடுப்பார்களாம். ஆனாலும் இந்தப் பத்திரிகையோடு போட்டி விட முடியவில்லை. ஆகவே ஒரு தந்திரம் செய்தார்கள். ஒரு பிரபல பாங்கில் ஒரு பெரிய கொள்ளையை அடுத்த நாள் காலை ஐந்தரை மணிக்கு நடத்த இவர்களே ஏற்பாடு செய்துவிட்டு ஐந்து மணிக்கே பிரஸுக்குப் போன பத்திரிகையில் 'இன்ன பாங்கிலே இன்று காலை ஐந்தரை மணிக்கு இப்படிப்பட்ட கொள்ளை' என முழுதாகச் செய்தி போட்டார்களாம். நாமும் அந்த 'ஐடியா'வை இங்கே செய்து பார்ப்போமா? எந்தெந்தக் கம்பத்தில் விளக்குகள் எரிகின்றனவோ கற்களை எடுத்துக் கொண்டு அவ்வளவையும் உடைப்போம். உடனே புதிதாகப் போடுவார்கள். போடப் போட உடைப்போம். உடைத்தெறிந்துவிட்டுத் தெருக்களில் விளக்கில்லை, விளக்கில்லை எனத் திரும்பத் திரும்பச் சொல்வோம். ஜனங்களை நம்ப வைப்போம். ஆளும் கட்சியைக் கீழே இறக்குவோம். எப்படி நம்ம அரசியல்?" என்று கேட்டு மறுபடியும் 'ஹோ' வென்று ஏகத்தாளமாகச் சத்தம் போட்டுச் சிரித்தான் பொன்னுரங்கம். அப்பொழுது ஒரு கரம் முரட்டுத்தனமாகப் பொன்னுரங்கத்தின் தோள்மேல் விழுந்தது.

"நடய்யா ஸ்டேஷனுக்கு" என்றார் சப்-இன்ஸ்பெக்டர் செண்பகம்.

**இ**ரவு.

எங்கேயோ மணி பன்னிரண்டு அடித்து ஓய்ந்தது. சப் இன்ஸ்பெக்டர் செண்பகத்தின் வீட்டுக் காம்பவுண்டை ஒட்டியுள்ள அந்தச் சம்பங்கி மரத்தடியில் கோணிப் படுதாவுக்குள்ளிருந்து கேட்கும் குரல்கள் சென்னியப்பனுடையதும் அவன் மனைவியினுடையதுமாகும். அவன் குரல் கேட்கிறது. "தே... இன்னா இது? இன்னும் ஆள் நடமாட்டமே அடங்கலே, அதற்குள்..."

"இன்னைக்கு உன்னோட பெரிய ரோதனையாப் போச்சு" என்று அங்கலாய்த்துக்கொள்வது அவளுடைய குரல்.

"பின்னே இன்னா... இந்தக் கோணிப் படுதாவும் இவ்வளவு கிழிஞ்சு போயிருக்கு... நைட் ஷிப்ட் ஆளுங்க வேறே ஷிப்ட் முடிஞ்சு வருவாங்க... ரெண்டாவது ஆட்டம் சினிமா முடிஞ்சவங்க வேறே வருவாங்க... இந்த லைட் வெளிச்சம் வேறே நம்ம மேலேயே விழுது..."

"நாம என்ன பண்ணறது?" என்றாள் சென்னியப்பன். "நம்ம வீடு இதுதான். நாம இங்கேதானே குடும்பம் நடத்த கொஞ்ச நேரம் அமைதி. சற்றுக் கழித்து முடியும்?"

"தொறுக்கிடட்டுமா?" என்றான் அவன்.

"வேணாய்யா, இன்ஸ்பெட்டரையா இப்ப இந்தப் பல்ப் மேலே ஒரு கண் வைக்க ஆரம்பிச்சுட்டாரு. வேணாம்" என்றாள்.

"அடப் போம்மே... கொஞ்ச நாளைக்காவது இந்த பல்ப் இருந்துட்டுப் போவட்டுமேன்னுதான் வுட்டு வைச்சேன். வெளிச்சமிருந்தா நம்ம குடித்தனம் நடக்காது. ஒரே வெளாசல் — தோ, தொறுக்கிடறேன்."

அவன் கோணிப் படுதாவை நீக்கி, யாரும் தெருவில் இல்லை என்பதை நிச்சயப் படுத்திக் கொண்டு ஒரு சரியான கல் கிடைக்கிறதா என்பதற்காகத் தரையில் தேடுகிறான். லட்சக் கணக்கான குடும்பங்களுக்கு வீடுகள் தான்பஞ்சம்... தெருவில் கற்களுக்கா பஞ்சம்?

---



"உலகில் இரண்டே பேர்கள்தான் நல்லவர்கள். ஒருவன் இறந்து விட்டான். மற்றவன் பிறக்கவில்லை." ஒரு சீனப் பழமொழி, ரமா ராம்நாத்




AM/7571

# அமிர்தாஞ்சனம்

**தலைவலி, ஜலதோஷம் மற்றும் வலிகளுக்கு நம்பகமான நிவாரணி**

அமிர்தாஞ்சனம் தலைவலி, உடல்வலி, தசைவலி, சுளுக்கு, ஜலதோஷம் இவற்றிலிருந்து உடனடியாக குணமளிக்கிறது. அமிர்தாஞ்சனம் தடவியதும் வலி மறைகிறது. பாட்டில்கள், சிக்கனமான ஜாடிகள், மற்றும் மலிவு விலை டப்பாக்களிலும் கிடைக்கிறது.

அமிர்தாஞ்சனம் — பத்து மருந்து பொருள்கள் ஒருங்கே சேர்ந்தது.

அமிர்தாஞ்சன் லிமிடெட்

---



மேனியெழில் மிகுந்திட

# மேட்டூர் சந்தன சோப்

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட்

மேட்டூர் அணை-2 • சேலம் ஜில்லா • தமிழ் நாடு

MCIC

## பாரதப் பெரும் தலைவர் காமராஜ்

“இந்த நூல் முழுவதும் காமராஜரது வாழ்க்கையில் நிகழ்ந்தவற்றை அப்படியே படம் பிடித்துக் காட்டி யிருக்கிறேன். வாழ்க்கை நிகழ்ச்சிகளைத் தொடர்பு படுத்திக் காட்டும் போது மட்டும் என்னுடைய விமர்சனங்களை ஆங்காங்கே சொல்லியிருக்கிறேன்.'' இவ்வாறு இந்நூலின் தன்மையைப் பற்றி இதன் ஆசிரியரே தமது முன்னுரையில் கூறியிருக்கிறார். இவ்வாசிரியர் செய்யும் விமர்சனங்களே இப்புத்தகத்தின் பிரதான நாயகராகிய பெருந் தலைவருக்கு அநீதி இழைப்ப தாக அமைந்து விடுகிறது. அதாவது புத்தகத்தை மேலே படிக்க விடாமல் தடுக்கிறது.

உதாரணமாக ராஜாஜி சம்பந்தப்பட்ட பல பகுதிகள் உண்மைக்குப் புறம்பாக இருக்கின்றன. 1952ல் ராஜாஜி முதலமைச்சரானதைப் பற்றிப் பின்வருமாறு எழுதுகிறார்.

''1946க்குப் பிறகு மத்திய அமைச்சராகவும் வங்காள கவர்னராகவும் முதல் இந்திய கவர்னர் ஜெனரலாகவும் பல்வேறு பதவிகளை வகித்திருந்த ராஜாஜி சென்னையில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார். சென்னை மாநில முதலமைச்சராகப் பதவி ஏற்க அவர் விருப்பத்துடன் இருந்து வருவதை நண்பர்கள் அறிந்தனர்''.

இதைப் போன்ற சிறிதும் உண்மைக் கலப்பில்லாத வாக்கியம் வேறு இருக்க முடியுமா?

## படித்தோம் சொல்கிறோம்

'இது காமராஜ் பற்றிய புத்தகம். இதில் ராஜாஜியைப் பற்றி எப்படி வந்தால் என்ன?' என்று யாராகிலும் கேட்டால் அவர்கள் காமராஜைப் பற்றிச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பதேயாகும். தேச நலனைத்தவிர வேறு ஒன்றிலும் பற்றில்லாத இரு தமிழகத் தலைவர்கள் மாறுபட்டு நிற்க வேண்டிய நிலையைப் பார்க்கும்போது பாரதம் போன்ற பெரும் காவியங்களில் காணப்படும் தர்மசங்கடப் போர்கள்தான் நினைவுக்கு வரும். தலைவர் காமராஜ், மக்கள் எண்ணத்தைப் பிரதிபலிக்கும் தலைவராக வாழ்ந்தார். தலைவர் ராஜாஜி, மக்கள் தன்னைத் தவறாகப் புரிந்து கொண்டாலும் அவர்களுக்குச் சரியான பாதை காட்டி அவர்களை வழிநடத்திச் செல்ல வேண்டியது தமது கடமை என்று வாழ்ந்தவர். இவ்விரு கோட்பாடுகளை நினைவில் கொண்டு இரு தலைவர்களைப் பார்த்தால் ஒரு மாபெரும் காவியம் எழுத விஷயம் கிடைக்கும்.

மக்கள் மனநிலையை உணர்ந்து காமராஜ் முதலில் சாஸ்திரியையும் பின்னர் இந்திரா அம்மையாரையும் வழங்கினார்.

இந்திரா அம்மையாரின் வேகம் அவரை நிலைகலங்கச் செய்தது. காங்கிரஸில் பிளவு ஏற்பட்டது.

நூல் ஆசிரியர் காமராஜ் இறந்து அவர் சிதையின் சூடு தணியுமுன் புஸ்தகம் வர வேண்டும் என்ற அவசரத்தில் எழுதியிருக்கிறார். அவசரக் கோலம் அள்ளித் தெளித்ததாக முடிவதில் வியப்பில்லையல்லவா?

சல. வி. எஸ்.

ஆசிரியர்: பி. கி. கணேசன், பிரசுரம்: அருணோதயம், ராயப்பேட்டை, சென்னை-14 விலை

## செதுக்காத சிலை

ஒரு சின்ன நிகழ்ச்சியை நிலைக்களனாக வைத்துக் கொண்டு அதன் அடிப்படையிலேயே சிந்தைக்கு விருந்து அளிக்கும் சிறுகதைகளைப் படைப்பது ஒரு பாணி. பாத்திரப் படைப்பின் வேகத்தின் உந்தலில் கதைகள் உருவாவதும் உண்டு. அடுத்தது அடுக்கடுக்கான சம்பவங்களை அடிப்படையாகக் கொண்ட கதைகள்.

இந்நூலில் இரண்டு நெடுங்கதைகளுள் முதல் கதையான ''செதுக்காத சிலை'' சில சுவையான சம்பவங்களை அடிப்படையாகக் கொண்ட கதை. ஆக்ராவிலிருந்து நாங்கு மைல்கள் தள்ளியிருக்கும் ராதாஸ்வாமி கோவிலில் உள்ள சிற்பங்களைப் பற்றிய கதை. அப்படிச் சொல்லுவதை விட் ஆவிகளைப் பற்றிய கதை என்று கூறலாம். பிரதாப் என்ற வழிகாட்டியை வைத்துக் கொண்டு இந் நூலாசிரியை மிகவும் சுவாரஸ்யமாகக் கதையைப் பின்னியிருக்கிறார். 'ஆவிகள் உலகம்' என்னும் ஓர் அபூர்வ உலகம் இருப்பதாகவும், அதில் நமக்கு வேண்டிய, இறந்து போனவர்களை அழைத்துப் பேசலாம் என்றும் கூறப்படும் நியதியை நிலைக்களனாக வைத்திருக்கிறார். ஆவிகளை வரவழைப்பது பற்றிய வேடிக்கையான முடிவு கதைக்கு மேலும் சுவையூட்டுகிறது.

அடுத்த கதை ''உணர்வின் நெசவு''. இக்கதையில் சம்பவங்கள் அதிகமாக இல்லை. ஆனால் ஒரு 'சஸ்பென்ஸ்' பலமாக இடம் பெற்றிருக்கிறது. இளம் காதலர்களைப் பற்றிய சுவையான கதையூடே இடம் பெற்றுள்ள சஸ்பென்ஸ் முழுக்க முழுக்க எதிர்பாராதது என்று சொல்ல முடியா விட்டாலும் ஆசிரியை அதைப் புனைந்திருக்கும் முறை நன்றாயிருக்கிறது. கதை உண்மையிலேயே உணர்வின் நெசவாகவே இருக்கிறது. எழுதியவரின் பெயரை நூலின் பெயரை விடப் பெரிதாகப் போட்

டிருப்பதைப் 'பெண்கள் ஆண்டின்' புரட்சியாகக் கொள்ளலாம். ஆசிரியை: குயிலி ராஜேஸ்வரி; வெளியிட்டோர்: ராஜஸ்ரீ பதிப்பகம், 8, ராமச்சந்திரய்யர் தெரு, தியாகராயநகர், சென்னை 600017. விலை ரூ. 5.50.

## கண்ணதாசன்

இலக்கியத் தரமும் நயமும் கொண்ட ''கண்ணதாசன்'' மாத இதழ் சிறப்பாக வெளிவந்திருக்கிறது. கவியரசின் பத்திரிகையில் கவிதைக்கு நிறைய இடம் அளிக்கப்பட்டிருப்பதில் வியப்பில்லை. கேரளத்தின் காளிதாசன் என்று சிறப்பாகக் கூறப்படும் அமரர் வயலார் ராமவர்மாவின் ''எனக்கு மரணமில்லை'' என்ற தமிழாக்கக் கவிதை கருத்துப் பொதிந்ததாயிருக்கிறது. ''கண்ணதாசனின் பாவை நினைவுகள்'' என்ற நிறைய்வுக் கட்டுரை பாராட்டுக்குரியது. தை மாதத்துக்குத் தனிச் சிறப்புண்டு. உழைப்புக்கும் செழிப்புக்கும் நாம் விழா எடுக்கும் மாதம் தை மாதம். இதை அந்தக் கட்டுரை சிறப்பாக விளக்குகிறது. ''மார்கழிக்குப் பெண்ணாக மாசிக்குத் தாயாகப் போர்கொழிக்க வந்த பெட்டகமே தைப்பாவாய்'' என்று கவிஞர் தைப் பாவையை அழைக்கும் கரிசனம் அருமையிலும் அருமை.

''காக்கைக் கூடு'', ''மௌன சங்கேதங்கள்'', ''சத்திய சோதனை'', ''இன்டர் வியூ'', ''முகங்கள்'' என்ற தமிழ்க் கதைகளோடு ''சாக்கடைக் குழியில் ஒரு மனிதன்'என்ற ஹிந்தி மொழி பெயர்ப்புக் கதையும் சேர்ந்து கண்ணதாசனைக் கலைச் செல்வமாக்குகிறது.

கவிஞர் கண்ணதாசனின் ''அர்த்தமுள்ள இந்து மதம்'' என்னும் கட்டுரையின் தொடர்ச்சியும் இடம் பெற்றிருக்கிறது.

வெளியிடுவோர்: ஆர். ராஜேந்திரன், ஸ்ரீ விஜயா பப்ளிஷர்ஸ், 47–10, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராய நகர், சென்னை–600017. தனிப் பிரதி ரூ. 2.

— லோமாஸ்

## உடை தயாரித்தல் (Dress Making

புத்தகத்தைப் பார்த்துச் சமையல் செய்யவும் முடியாது, சொக்காய் தைக்கவும் முடியாது. ஆசானிடம் பயின்று ஆரம்பப் பாடங்களையாவது பழகிய பின்னர்தான் புத்தகம் உதவும். இதை உணர்ந்தே இந்த ஆசிரியர், ''தையற்கூடங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் நாகரிக உலகில் தையற் கலை நுட்பங்களைப் பயின்று வரும் மாணவ மாணவியரின் கலைத் தன்மையை விளங்கச் செய்யவும் இந்தப் புத்தகம் உதவும்'' என்கிறார்.

இன்று தையற்கலை பல இல்லங்களில் குடும்பப் பட்ஜெட்டைக் குறைக்கவும் உதவுகிறது. புதிய வருவாய் தேடிக் கொள்ளவும் வழி வகுக்கிறது. ஆயிரம் தையல் இயந்திரங்களை முதல்வர் வாழ்வற்றவருக்கு விநியோகித்ததும் இந்த நோக்கில் தானே! தையற் கலையில் ஆர்வம் காரணமாயும் வருவாய்க்கு ஒரு வழி என்ற அளவிலும் ஈடுபட்டுள்ள பல்லாயிரக்கணக்கானோருக்கு இந்த நூல் பெரிதும் உதவும். ஆங்கிலம் – தமிழ் ஆகிய இரு மொழி நூலாக எழுதியிருப்பது தனிச் சிறப்பு.

ஆசிரியர்: தங்கம் சுப்பிரமணியம்; கிடைக்குமிடம்: 199, எம். டி. எச். ரோடு, அம்பத்தூர், சென்னை–600053, விலை: ரூ. 10.00.

— ஜெயந்தி

## மனித நிழல்கள்

பத்திரிகைக்கு அல்லாது புத்தகத்துக்காகவே 'ஆர்வி' எழுதிய புதிய நாவல் இது. புதிய நாவல் என்பதுடன் புதிய அலை நாவலும் கூட. அதாவது புதிய அலை என்பதற்குத் தற்போது நிலவுகிற தவறான ஓர் அர்த்தத்துக்கு ஏற்ப அமைந்த நாவல்!

கதாநாயகன் பாபுவுக்குப் பதினெட்டு வயது. அபாரமான சாரீர சம்பத்தும், சரீர சம்பத்தும் கொண்ட இளைஞன். வயதுக்கு மீறின வளர்த்தி, அனுபவம், சாமர்த்தியம் எல்லாம் கொண்டவன். தாய் தந்தை யார் என்று தெரியாத அநாதை. இதற்கு மேல் கதை நியூ வேவ் பாணியில் வளர்கிறது.



கு. காமராஜ்

வாழைத் தோட்டத்து உரிமையாளனான முருகேசனும் அவன் மனைவி செந்திருவும் பாபுவின் வாழ்க்கை முன்னேற்றத்துக்குக் காரணமாக இருக்கிறார்கள். புதிய அலை மயக்கத்தில் கோமளம் பாத்திரத்தை சிருஷ்டித்து அதற்கு நாவலில் அதிகப் பக்கங்களை ஒதுக்கி யிருந்தாலும், செந்திருவின் பாத்திரமே மனத்தில் நிற்கிறது. களங்கமற்ற அந்த அன்பும் பாசமும் நெஞ்சை நெகிழ வைக்கின்றன.

நாவலின் பின்பகுதி 'எக்ஸ்பிரஸ்' வேகத்தில் நல்ல விறுவிறுப்புடன் போகிறது. திரைப் படங்களில் வரும் திடீர்த் திருப்பங்களைப் போல் பாபுவின் பிறப்பை வெளிப்படுத்தும் கட்டங்கள் அமைந்துள்ளன. கண்களைக் கவியச் செய்ய மாணிக்கத்தையும், அவன் மனிதர்களை எடைபோடும் அழகையும் அவன் காதலையும் உருவாக்கி நாவலுக்கு உயிரூட்டி இருக்கிறார். பாபு தன் காதலியாக நினைக்கும் விஜயா ஏனோ நிழலாகவே நின்றுவிடுகிறாள்.

— கௌசிகன்


பிரசுரம்: வானதி பதிப்பகம், சென்னை-17. ரூ. 8.


குயிலி ராஜேஸ்வரி





அறிவின் விலை ஒரு கோடி!
3
கதை: கௌசிகன்
சித்திரம்: ம.செல்வன்
இந்திய பாகிஸ்தான் எல்லைப் பகுதி இது. சோதனைகளுக்காகவும் எஞ்சின் மாற்றவும் வண்டி இங்கு ஒரு மணி தாமதிக்கும்.
சின்ன ஸ்டேஷனிலும் இயற்கையழகு கொஞ்சுகிறதே.
குறுகுறுத்த இரு கருவிழிகள் தங்களை நோட்ட மிடுவதை சாருவோ, மாதவனோ கவனிக்கவில்லை.
இவர்களாகத் தானிருக்கும். இந்த வண்டியில் இவ்வளவு அழகுடன் யாருமில்லை. உருமாறி இருக்கிறார்கள். கிராமத்து ஆள் எவனும் தன் மனைவிக்கு இத்தனை மரியாதை காட்ட மாட்டான்.
தர்ப்பூசணிப் பழம் தாகத்துக்கு இதமாக இருக்கும்
வாங்குங்கள் மாதவன். எனக்கு வெகு நேரமாக ஒரே தாகம்!
ஒரு சின்ன 'டெஸ்ட்' செய்து என் சந்தேகத்தைத் தெளிவாக்கிக் கொள்கிறேன்.
சாரு தர்ப்பூசணித் துண்டுடன் திரும்பும் போது லில்லி அவள் மீது மோதுகிறாள்.
ஓ! ஐயாம் சாரி- மன்னிக்கணும், அவசரத்தில்....
சுத்த காட்டுப்புறம், தூரப் போ...
கிராமப் பெண் ஆங்கிலத்தில் 'சாரி' சொல்கிறாளா?
சாரு, நீ போட்டிருப்பதோ நாட்டுப்புற வேஷம். ஆங்கிலத்தில் அந்தப் பெண்ணிடம் மன்னிப்புக் கேட்டாயே? நல்லவேளை அவள் அதைக் கவனிக்கவில்லை.
உண்மைதான் மாதவன். இனி கவனமாக இருப்பேன்.


மறுபடி வண்டி தன் பிரயாணத்தைத் தொடர்ந்தது. மாதவனால் லில்லியை மறக்க முடியவில்லை.
உன் மீது மோதிக் கொண்ட, முதல் வகுப்பில் ஏறிய, அந்தப் பெண்ணை ஏனோ எனக்குப் பிடிக்கவில்லை. இனந் தெரியாத ஒரு திகில் ஏற்படுகிறது மனசில்.
முதல் வகுப்பிலுள்ள லில்லியின் செயலைச் சாரு பார்க்க முடிந்திருந்தால் மாதவனைப் போலவே அவளும் திகிலடைந்திருப்பாள்.
அதோ அப்பாவின் காரும் ரயிலை ஒட்டி வருகிறது.
அதோ சிக்னல்...! முதலாளியின் மகள் லில்லி தான் அது. திருப்பங்களில் காரைக் கவனமாகப் பார்த்து ஓட்டு.
'பாஸின் மகள் அழகி மட்டுமல்ல. திறமைசாலியும் கூட.
மாதவனின் மன உளைச்சலை ரயில் பாதையின் இருபக்கங்களிலும் தோன்றிய இயற்கை வனப்பு மறக்கச் செய்து விட்டது. வண்டி பல அழகிய கிராமங்களைக் கடந்து போய்க் கொண்டிருந்தது.
வண்டி ஒரு ஸ்டேஷனில் தாமதித்தது.
சாரு, உனக்குச் சாப்பிட ஏதாவது இங்கு கிடைக்கிறதா என்று பார்த்து வருகிறேன்.
எனக்கும் பசிதான். ஆனால் விரைவில் வந்து விடுங்கள் மாதவன்.
மாதவன் வெளியேறிய அதே சமயம்...
இந்த நாட்டுப்புறத்துப் பெண் தான் என்னை அவமானப் படுத்தியது.
ம்... கிளம்பு. உன்னைக் கைது செய்கிறோம்.
ஆனால்... வந்து... வந்து... நான்...
தொடரும்.



# ஒரு நாள்...



# பரணீதரன்

□ எழுத்துப் பணி நடக்கிறது
□ புனிதப் பயணத்துக்குப் பூர்வாங்க ஆலோசனைகள்

காலை ஐந்து மணிக்குள்ளாகவே விழிப்பு வந்து விடுகிறது. காரணம் நான் இரவில் கண் விழித்துப் படிக்காதவன்.' எழுதுவது, படிப்பது போன்ற வேலைகளைக் கூட கூடியவரை இரவு நேரங்களில் தவிர்ப்பவன். இந்த வழக்கம் என் கண்களைச் சற்றுக் காப்பாற்றி வருகிறது.

காலைக் கடன்களை முடித்துவிட்டுத் தினசரிப் பத்திரிகையை மேலெழுந்த வாரியாகப் புரட்டுகிறேன். இது பழக்கத்தில் வந்தது. சுற்றுப் பிரயாணங்களின் போது இது கிடைக்கவும் கிடைக்காது. தப்பித் தவறிக் கண்களில் பட்டாலும் அங்கெல்லாம் படிக்கவும் மாட்டேன்.

இன்று அடுத்த வாரத்துக்கான 'புண்ணிய பாரத'க் கட்டுரை எழுத வேண்டிய நாள். இந்த வேலையை நான் காலை வேளையில் விட்டிலேயே செய்துவிடுகிறேன். இது சௌகரியமாக இருக்கிறது. சுமார் இரண்டு மணி நேர அவகாசம் இதற்காக ஒதுக்கி விடுகிறேன்.

என்னுடைய பிரயாணக் குறிப்பு நோட்டுப் புத்தகங்கள், அந்த ஸ்தலங்கள் சம்பந்தப்பட்ட புத்தகங்கள், அந்தந்தப் பகுதி நேயர்களிடமிருந்து கடித உருவத்தில் வந்திருக்கும் ஆலோசனைகள், டேப் ரிகார்டர் எல்லாம் மேஜையில் தயாராய் இருக்கின்றன. புகைப்படங்கள் ஒரு பக்கம்.

அந்த மேஜைக்கு அருகே போகும்போது என் உடம்பு சிலிர்க்கிறது. ஒரு கணம் கண்களை மூடிக் கொண்டு மெய் மறந்து நிற்கிறேன். அந்தக் கணத்தில் என் அகக் கண்கள் முன் ஜெகஜ் ஜோதியாக காஞ்சிப் பெரியவர் காட்சியளிக்கின்றார்.

அரசியல் கேலிச் சித்திரம் வரைபவனாக இருந்த என்னை எழுத்துத் துறையில் திருப்பி, அதிலும் பிரயாணக் கட்டுரையாளனாக மாற்றி, இமயத்திலிருந்து குமரி முனை வரையிலுள்ள கோயில்களுக்குப் போக வைத்து அங்கெல்லாம் யான் பெற்ற இன்பத்தை லட்சக்கணக்கான வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள ஆசி வழங்கியவர் மகான் காஞ்சி ஆசாரிய சுவாமிகள் ஆவர்.

ஆகம சில்ப சதஸ் ஒன்றில் பெரியவர்களைத் தரிசிக்க நேர்ந்தபோது திடீரென்று நாகலாபுரத்தில் உள்ள வேத நாராயணர் ஆலயத்தைப் போய்ப் பார்த்துவிட்டு வரும்படி அருட்கட்டளை யிட்டார். ஒரு ஸ்தபதி, ஓர் அர்ச்சகர், ஒரு புகைப்படக்காரர் முதலியவர்களுடன் போகும்படி கூறினார்கள்.

உத்தரவுப்படி நாகலாபுரம் சென்று வந்தேன். ஆனால், நான் நாகலாபுரம் போய் வந்ததைப் பற்றி சுவாமிகள் கேட்கவில்லை. நான்கு நாட்கள் காத்திருந்தேன். கடைசியில் சுவாமிகள் முகாமை விட்டுக் கிளம்பும்போது அவர் வீற்றிருந்த பல்லக்குடனேயே சற்று தூரம் நடந்து போய், "நாகலாபுரம் ஆலயத்தைப் பற்றி தீபாவளி மலரில் எழுதலாமா?" என்று அனுமதி கோரினேன்.

"எழுது!" என்று அன்பு கனிய உத்தரவு கிடைத்தது. கோயிலைப் பற்றி நான் எழுதிய முதல் கட்டுரை அதுதான். இதுவே என் பிற்கால எழுத்துத் துறைக்குத் தொடக்கமாகவும் அமைந்தது.

அப்புறம் ஸ்ரீதர் எப்படிக் கேலிச் சித்திரம் வரையும் உணர்ச்சியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு க்ஷேத்திரம் க்ஷேத்திரமாகப் போய்ப் பிரயாண அனுபவங்களை எழுதும் பரணீதரனாக மாறினான் என்பது இன்னும் எனக்கே புரியாத ஒரு புதிர்.

நாற்காலியில் அமர்ந்து குறிப்புப் புத்தகங்களையும் அந்தந்தப் புண்ணிய ஸ்தலங்கள் சம்பந்தப்பட்ட புத்தகங்களையும் விரித்து வைத்துக் கொள்கிறேன். ஆரம்ப நாட்களில் நான் போகும் இடங்களிலெல்லாம் காண்பதையும் கேட்பதையும் குறிப்புக்களாக எழுதிக் கொள்வேன். என்னுடன் வரும் நண்பர் பாபுஜீயும் இத்தகைய குறிப்புக்களை எடுக்க உதவுவார்.

ஆனால் பல வாரங்கள் கடந்து அந்தப் பகுதி யாத்திரை பற்றிய கட்டுரை எழுத முற்படும்போது முன்பு கண்டு களித்த சூழ்நிலைகளைப் பூரணமாக மீண்டும் மனத்திரையில் ஓடவிட இயலவில்லை என்பதைக் கண்டுகொண்டேன். ஆகவே டேப் ரிகார்டர் இயந்திரத்தையும் குறிப்பு நோட்டுப் புத்தகத்துடன் இணைத்து உபயோகிக்க ஆரம்பித்தேன். 'அது வெறும் இயந்திரம் அல்ல; அதுவே பல சமயம் சாந்நித்தியமுள்ள ஆலயமாக மாறிவிடும்' என்பதைப் பிறகு ஒரு நேரத்தில் உணர வைத்தார் காஞ்சிப் பெரியவர்.

பத்ரீநாத் ஆலயத்துக்குப் போயிருந்தபோது அங்கே நடைபெற்ற பஜனையை ஒலிப் பதிவு செய்திருந்தேன். அதே போல அங்கே உள்ள மகா லட்சுமி கோவிலில் தீபாராதனை நடக்கும் நேரத்தில் ஒலிக்கும் மந்திரங்களையும் மணி ஓசையையும் பதிவு செய்திருந்தேன்.

யாத்திரை முடிந்து திரும்பி வந்த பிறகு தேனம்பாக்கம் சிவாஸ்தானத்துக்குப் போனபோது கையோடு அந்த டேப் ரிகார்டரையும் கொண்டு போயிருந்தேன். பெரியவரின் சன்னிதானத்தில் மகாலட்சுமி கோவில் மணி ஓசையை மறுபடியும் ஒலிக்கச் செய்தேன்.

ஆச்சாரிய சுவாமிகள் உடனே எழுந்து நின்று 'மகாலட்சுமியின் சந்நிதியில் நிற்பது போலவே மெய் மறந்து விட்டார். அந்தக் காட்சியை என்றால் மறக்கவே முடியாது.

அதே போல் பத்ரீநாத்தில் பதிவு செய்யப்பட்ட பஜனை ஒலியைக் கேட்ட பெரியவர் ''இந்த டேப் ரிகார்டர் இங்கேயே இருக்கட்டும்'' என்று கட்டளை இட்டார். அடுத்த ஒரு வார காலத்துக்கு அந்தப் பஜனை ஒலியைப் பல தடவை கேட்டு ரசித்தாராம். அவரைத் தரிசிக்க வந்த பக்தர்களுக்கும் போட்டுக் கேட்கச் செய்தாராம்!

எழுதி முடித்து எடுத்துக் கொண்டு காலை பத்து மணிக்கெல்லாம் விகடன் காரியாலயத்துக்கு வந்து விடுகிறேன்.

புண்ணிய யாத்திரைக் கட்டுரைகள் எழுத ஆரம்பித்த பிறகு வாசக நேயர்களிடமிருந்து இதுபற்றிப் பல ரகமான கடிதங்கள் காரியாலயத்துக்கு வருகின்றன.*

ஏற்கனவே நான் போய்ப் பார்த்து எழுதி அச்சில் வந்த பகுதிகளைப் படித்த நேயர்கள் நான் எதை எதை விட்டு விட்டேன் என்று சுட்டிக் காட்டி எழுதுவார்கள். இது ஒரு ரகம். இனிமேல் எழுதவிருக்கும் பகுதிகளுக்காக அந்தந்த ஸ்தலங்களைச் சுற்றி வசிக்கிறவர்கள் கொடுக்கும் புதிய குறிப்புக்கள் இரண்டாவது ரகம்.

'எங்கள் ஊர்க் கோவிலை ஏன் இன்னும் நீங்கள் பார்க்க வரவில்லை?' என்று கேட்டு எழுதுவது மூன்றாவது ரகம். இந்த மாதிரிக் கடிதங்கள் நிறையவே வருகின்றன.

இன்றுகூட டான்ஸானியா நாட்டிலிருந்து ஓர் அன்பர் எழுதிய கடிதம் வந்திருக்கிறது. அவர் நெய்வேலிப் பகுதியைச் சேர்ந்தவராம். தொழில் நிமித்தம் டான்ஸானியாவில் குடியேறியிருக்கிறார். நெய்வேலிக்கு அருகிலுள்ள ஒரு கோவிலை நான் அவசியம் தரிசித்து அது பற்றி எழுத வேண்டும் என்று வேண்டுகிறார்.

இன்னொரு ரக கடிதங்களும் உண்டு. பயணக் கட்டுரை எழுதும் என்னை ஏதோ பெரிய மகான், யோகி, சாமியார் என்றெல்லாம் சிலர் கற்பனை செய்து கொண்டு விடுகிறார்கள். இவர்கள் என் படத்தையும், என் கைப்படப் பிரசாதத்தையும் கேட்டு எழுதுகிறார்கள். இந்த மாதிரிக் கடிதங்களைப் படிக்கும்போது என் உடம்பு கூனிக் குறுகுவது போன்ற உணர்ச்சி ஏற்படுவது வழக்கம். இந்த ரகக் கடிதம் எழுதுபவர்களுக்கு நான் காஞ்சிப் பெரியவரின் திருவுருவப் படத்தையும் கைவசம் இருக்கும் விபூதி, குங்குமப் பிரசாதத்தையும் அனுப்பி வைக்கிறேன்.

இடையே இரண்டு அன்பர்கள் என்னைக் காண வந்திருப்பதாக வரவேற்பு அறையிலிருந்து தகவல் வருகிறது. அவர்களை என் அறைக்கு அனுப்பச் சொல்கிறேன். அந்த இருவரும் சமீபத்தில் பத்ரீநாத் போகத் திட்டமிட்டிருக்கிறார்களாம். நேரடியாக என்னிடம் சில தகவல்கள் கேட்டுப் போக வந்திருக்கிறார்கள்.

இப்படிப் பல பேருக்கு ஒரு 'டூரிஸ்ட் கைடு' ஆக இங்கிருந்தே நான் பணியாற்றுகிறேன்.

இடைவேளை வருகிறது. ஒன்றரை மணிக்கு காரியாலயத்தை விட்டுக் கிளம்புகிறேன். இடைவேளை ஆகாரத்தை முடித்துக் கொண்டு பிற்பகல் மூன்றரைக்குக் காரியாலயம் திரும்புகிறேன். சற்று ஓய்வும் தேவைப்படுகிறது. பிரயாணங்களின்போது இத்தகைய நடுப்பகல் ஓய்வு எப்போதாவது எதிர்பாராமல் தான் கிடைக்கும். அதாவது, ஏதாவது ஆலயங்களை நடுப் பகலில் சாத்தியிருப்பார்கள். பிற்பகல் நான்கு மணிக்குத்தான் திறப்பார்கள். அதற்காக அங்கேயே காத்திருப்பேன். எனக்கு ஆகாரங்கள் விஷயத்தில் அதிக கட்டுப்பாடு இல்லாததால், கிடைத்ததை வைத்துச் சமாளித்து' விடுவேன்.

காரியாலயத்தில் மீண்டும் வந்து அமர்ந்ததும் அச்சகத்திலிருந்து புரூஃப்கள் மாறி மாறி மேஜையில் குவிகின்றன. இடையே மேஜை காலியாகும்போது கடிதங்களுக்குப் பதில் எழுதுகிறேன்.

கடைசிப் புரூஃபைப் பார்த்துவிட்டு வீட்டுக்குக் கிளம்புகிறேன். அநேகமாக மாலை நேரத்தைப் பொழுது போக்குக்காகச் செலவிடுவதில்லை. பொழுது போகவில்லை என்பதைவிட பொழுது போதவில்லை என்பதுதான் என் குறை. 'வாக்' போய் வருவேன். படிப்பேன். இரவில் 'லைட்' சாப்பாடு. ஒன்பது மணி அளவில் படுத்து விடுவேன்.

மறுநாள் பொழுது சுறுசுறுப்பாக இருக்க இது உதவுகிறது!

கேட்டு எழுதியவர்: கோமதிசுவாமிநாதன்

---




சர்ச்சில் திருமணம் நடந்து கொண்டிருந்தது. மணமகள் ஏற்கனவே திருமணமாகி இரண்டு குழந்தைகளுக்குத் தாய். அந்த இரண்டு குழந்தைகளும் வந்திருந்தன. அவை ரொம்பவும் விஷமம் செய்து கொண்டிருந்தன. அந்தத் தாய் சொன்னாள்: ''நீங்கள் இம்மாதிரி சப்தம் போட்டுச் சண்டை பிடித்தால் அடுத்த தடவை உங்களை அழைத்து வரமாட்டேன்.''


— டிட்பிட்ஸ் - கே.ஆர்.


Nirlon
அதி அற்புதங்கள் நிறைந்தது!
Nirlon
Interpub/Nir/5/75/TM







**காற்றுப் போனபலூனுக்கு:** ''உங்களுக்குத் தேவையானதெல்லாம் நிறைய சுத்தமான காற்றுதான்! தினமும் பீச்சுக்குப் போங்களேன்!''



**லிஃப்ட் (*Lift*)க்கு:** ''நீங்கள் கண்டிப்பாக மாடி ஏறவே கூடாது! ஆமாம், சொல்லிவிட்டேன்!''


# டாக்டர் தரஜா



**சாய்வு நாற்காலிக்கு:** ''இருபத்து நாலு மணி நேரமும் சாய்ந்து கொண்டேயிருந்தால் முதுகுவலிவரத்தான் செய்யும்... நிமிர்ந்து உட்காரப் பழகிக் கொள்ளுங்கள்!...''

o

**தெர்மாஸ் பிளாஸ்குக்கு:** ''சுடச்சுட எதையும் முழுங்காதீர்கள்... அதேபோல் ரொம்ப ஜில்லென்று சாப்பிடுவதையும் தவிருங்கள்...''







**தயிர் கடையும் மத்துக்கு:** ''உங்களுக்கு எந்த விதமான வியாதியும் இல்லை .... நீங்களாகப் போட்டுக் குழப்பிக் கொள்ளாதீர்கள். போய் வாருங்கள்!''

o

**லௌட் ஸ்பீக்கருக்கு:** ராத்திரி — பகல் என்றில்லாமல் கத்திக் கொண்டிருந்தால் தொண்டை கட்டிக் கொள்ளத்தான் செய்யும். பத்து நாளைக்குப் பேசாமல் இருங்கள்!







**மின்விசிறிக்கு:** ''இந்த வயதிலும் ஓயாமல் சுற்றிக் கொண்டிருந்தால் எப்படி?.... அவ்வப்போது கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக் கொள்ளுங்கள்.''

o

**மிக்ஸிக்கு (*Mixie*):** ''தினமும் இரண்டு வேளையும் தக்காளிஜூஸோ, கிரேப் ஜூஸோ சாப்பிடுங்கள். மீன காய், பூண்டு, மசாலா எதுவும் இட்டே வரவே கூடாது!''





# இளவட்டக் கல்!

**சோம மகாதேவன்**

கிராமப்புறத்துச் சூழ்நிலையில் சிறு கதைகள் புனைவதில் சிறந்து விளங்கிய சோம. மகாதேவன் 1974ம் ஆண்டு கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் இரண்டாவது பரிசு பெற்றவர். அவர் இவ்வாண்டின் தொடக்கத்திலேயே (1-1-76) திடீரென்று இயற்கை எய்தி விட்டார் என்னும் துயரம் தரும் செய்தியைக் கேட்டு வருந்துகிறோம். "கல்கி" வாசகர்களுடன் குடும்பத்தாருக்கு நமது அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர்

தகப்பனின் கட்டளையைத் தலைமேற்கொண்டு, காரியமாகவே அழகப்பன் இந்தத் திருவிழாவுக்கு வந்திருக்கிறான்.

இந்தப் பொட்டல் காட்டிலே, எங்கிருந்தெல்லாமோ ரிப்பன், வளையல், பாத்திரக் கடைகளும், கொடை ராட்டினங்களும் வந்து குவிந்து விட்டன. எங்கு திரும்பினாலும் மகிழ்ச்சியில் திளைக்கும் மக்கள் கூட்டம்.

வளையல் கடைகளில், முன் கை நிறைய வளையல்களை அடுக்கிக் கொண்டு கலகலக்கும் கன்னியர்கள் நிறைந்திருக்கிறார்கள். அவர்கள் அறிந்த வரையிலும், தங்களைச் சிங்காரித்துக் கொள்ள, ஆண்டுக்கொரு நாள் என்று வரும் வாய்ப்பு இது. அவர்களிடையேதான் எவ்வளவு மகிழ்ச்சி பொங்கி வழிகிறது.

"அந்தப் பொண்ணுதான் தம்பி!" என்று பார்வையால் சுட்டிக் காட்டினான் கிழவன்.

"எந்தப் பொண்ணு?"

"அந்தா நிக்குதுகளே. அதிலே எந்தப் பொண்ணு உங்களுக்குப் பிடிச்சிருக்குது. சொல்லுங்க" என்று கேட்டான் கிழவன்.

அழகப்பன் அங்கே பார்த்தான்.

ஐந்தாறு பெண்களுக்கு மத்தியிலே ஒருத்தி பளிச்சென்று தெரிந்தாள், செந்தாமரை மலரைப் போன்று.

அவனது பார்வை அவளிடமே பதிந்தது.

அழகே ஓர் உருவாக, கைதேர்ந்த சிற்பி ஒருவன், பசும் பொன்னில் வடித்தெடுத்த சிலையாக நின்றாள் அவள். இந்தக் கும்பலிலே இப்படி ஒரு பேரழகியா?

அவனது பார்வை திரும்பவில்லை.

"என்ன தம்பி?" என்றான் கிழவன்.

"மேக வண்ணத்திலே பட்டுப் புடவை கட்டியிருக்கே.... அந்தப் பொண்ணு" என்று அழகப்பன் சொன்னபோதே, கிழவன் உற்சாகத்தோடு விரலைச் சொடுக்கினான்.

"அதேதான். ஆயிரம் பொண்ணுகளுக்கு மத்தியிலே நிறுத்தினாலும் 'பளிச்'சின்னு தெரியும். பெரும் மீனாட்சி. எவ்வளவு பொருத்தம் பாருங்க. நாகம்பட்டியிலேயே பெரிய வீட்டுப் பொண்ணு இது. இதையே மருமகளாகக் கொண்டு வரணும்னு ஐயா ரொம்ப நாளா இட்டம் போட்டுக்கிட்டிருக்காரு" என்றான் கிழவன்.

அழகப்பன் அங்கேயே பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் ஆயிரத்தில் ஒருத்திதான். தன் தோழியோடு பேசிக் கொண்டிருந்தாலும், அவளது பார்வை அடிக்கடி இங்கேயும் திரும்புகிறது. அவளது காதோடு தோழி ஏதோ சொல்ல, முகம் குங்குமப் பூவாகச் சிவந்து விட, தோழியின் தோளிலே முகம் கவிழ்ந்து கொள்கிறாள் அவள்.

மெய்ம்மறந்து நின்றுவிட்ட அழகப்பன், "என்ன தம்பி! எங்கே மறந்திட்டீங்களே"

என்ற கிழவனின் குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினான்.

வெளி உலகின் ஆரவாரமெல்லாம் எட்ட முடியாதபடி, உள்ளடங்கியிருக்கும் நாகம்பட்டி, அன்று பரபரப்புக்கு உள்ளாகி இருந்தது. எண்ணி நூறு வீடுகளே உள்ள அந்தக் கிராமத்தில், எந்த வீட்டில் எது நடந்தாலும், அதில் எல்லோருக்கும் பங்கு இருக்கும்.

இன்று பெரிய வீட்டுக் கார்மேகத்தின் மகள் மீனாட்சியைப் பெண் கேட்டு, நிச்சயத்துக்கு நாள் குறிக்க வந்திருக்கிறார்கள்.

மீனாட்சி அந்த ஊருக்கே இளவரசி போன்றவள். அவளது மலர் முகத்தை இன்றைக்கெல்லாம் பார்த்துக் கொண்டே இருக்கலாம், பசிக்காது! குணமும் அப்படியே. அவளது பொற்கரத்தால் தொட்டுக் கொடுத்த விதை ஒன்றுக்குப் பத்தாக விளையும் என்று வாய் நிறையவே பேசிக் கொள்வார்கள்.

மாப்பிள்ளை அழகப்பனும் வந்திருக்கிறார். சொல்லி வைத்தது போலவே பொருத்தமாகவே படுகிறது. எவ்வளவுதான் படித்திருந்தாலும், இந்தத் திருமகளின் கரம் பற்றக் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

மாப்பிள்ளையின் தந்தை துரைசாமிக்கும் பக்கத்து ஊர்தான். ஏற்கெனவே இங்கு வந்து சென்று பழக்கம் உள்ளவர். கொள்வன — கொடுப்பன என்பதைப் பற்றியெல்லாம் அவர் பேசிக் கொள்ளவில்லை. ''என்றைக்கு முறையோட வந்து நிச்சயத்தை வைத்துக் கொள்ளலாம்'' என்று பேச்சை ஆரம்பித்த போது, அந்த ஊருக்கே முதியவரும், முதன்மையானவருமான நாட்டாண்மை சோமையா, இடையிலே அந்தக் கல்லை உருட்டி விட்டார்.

'' நினைச்ச மாதிரி.... எல்லாமே நிறைவோடவே இருக்கு. முடிவுக்கு வர்றதுக்கு முன்னாலே, எங்க கிராமத்திலே பரம்பரையா இருந்து வர்ற பழக்கத்தையும் சொல்லியாகணும்'' என்று ஆரம்பித்தார் நாட்டாண்மை.

'' சொல்லுங்க, ஐயா ! எந்தக் குறையும் வைச்சுக்க வேண்டாம், இது நெடுநாட்களா நிலைச்சிருந்து முடியப் போற சம்பந்தம்'' என்றார் துரைசாமி அவசரத்துடனே.


''மந்தையிலே இருக்கிற அம்மன் கோயில் திண்ணையிலே, உருண்டையா ஓர் இளவட்டக் கல் இருக்கு. எங்க ஊருக்கு மாப்பிள்ளையா வர்ற இளவட்டம், இந்தக் கல்லைத் தூக்கி முதுகுப் பக்கமா போடணும். இது, இது வரைக்கும் தொடர்ந்து நடந்துக்கிட்டு வருதுங்க'' என்று சொல்லி நிறுத்தினார் நாட்டாண்மை.

'' அதுக்கென்னங்க, நம்ம பையன் கல்லூரியிலே எத்தனையோ போட்டியிலே பரிசுகள் வாங்கியிருக்கான்'' என்றவர், பின்னால் திரும்பி மகனைப் பார்த்தார் துரைசாமி.

அதுவரையிலும் மீனாட்சியின் உருவத்தை மனத் திரையில் கொண்டு வந்து ரசித்துக் கொண்டிருந்த அழகப்பனின் முகம் மாறுதல் அடைந்தது. அந்த நினைவுகள் அறுந்து, மாறுபட்டு, தன்மானம் என்பது தலை தூக்கியது.

அடியெடுத்து வைக்கும்போதே இது என்ன 'தூக்கு' தண்டனை. இன்னும் என்னென்ன பழக்க வழக்கங்களோ! கல்லைத் தூக்குவதாவது !

தந்தை முன்னிருப்பதையும் மறந்து, அவனது நெஞ்சு படபடத்தது.



'' இது மட்டும்தானா ? — எங்கேயும் இல்லாத, வேறே சடங்குகளும் இருக்கா?'' என்று சற்றுக் கடுமையாகவே கேட்டு விட்டான் அவன்.

''இதையும் ஒரு சடங்குன்னு எடுத்துக் காட்டியும், கல்யாணத்துக்கு முன்னாலே ஒரு விளையாட்டாகவே வைச்சுக்கலாம். அப்படித்தான் எங்க ஊருலே நடந்துக்கிட்டு வருது'' என்றார் பெண்ணைப் பெற்றவர் கார்மேகம்.

துரைசாமி வாய் திறக்காமலே 'சரி யென்று சொல்' என்றவிதமாக மகனைப் பார்த்தார்.

ஆனால் அழகப்பனுக்கு அணை கடந்த ஒரு வேகம் கூடியிருந்தது.

''கல்லைத் தூக்கலையின்னா வேறே பேச்சுக்கே இடம் இல்லையாக்கும்'' என்றான் அவன்.

நாட்டாண்மைக்குத் தெளிவாகவே காது கேட்டுவிட்டது.

''ஆமா தம்பி—எங்க ஊரிலே இதுவும் ஒரு கட்டுப்பாடுதான். இதுக்கு முன்னாலே, பெண்



பட்டு நூல் எவ்வளவு மெல்லியதாக இருக்கிறதோ அந்த அளவுக்கு எஃகைக் கம்பியாக நீட்டினால் அந்த இரண்டில் பட்டு நூலுக்குத்தான் வலிமை அதிகம்.

—விக் எண்ட் - பாபு

---

கேட்டு வந்து. இந்த இளவட்டக் கல்லைத் தூக்க முடியாமல் தலை குனிந்த போன மாப்பிள்ளைகளும் உண்டு'' என்றார் அவர்.

நிலைமை எங்கோ செல்வதைக் கண்டு பரபரப்படைந்த துரைசாமி, ''இதிலே என்னடா இருக்கு? உன்னாலே முடியாததா?'' என்றார் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு.

''அறிவு இல்லையின்னாலும், வர்ற மாப்பிள்ளைக்குப் பலம் இருந்தாப் போதும்னு நினைக்கிறாங்க'' என்றான் அழகப்பன்.

கார்மேகத்துக்கு இது சுருக்கென்று தைத்தது.

முதல் கோணல், முற்றிலும் கோணலாகி விடுமோ? படித்துவிட்டால் தலையும் முடியுமாக இப்படித்தான் இருக்க வேண்டுமா? அதற்குள் அகம்பாவமும் நிறைந்திருக்குமோ?

கூடியிருந்த கும்பலிலும் சலசலப்பு ஏற்பட்டது.

அப்போதைக்கு நிலைமையைச் சமாளிக்க முந்திக் கொண்டார் துரைசாமி.

'' நா னே யே மதியத்துக்கு மேலே வாரோம். எல்லாமே நல்லபடியா... முடியும்'' என்று பொதுப்படையாகச் சொல்லி விட்டு, இரு தரப்பிலும் வேறு பேச்சுக்கு இடம் கொடுக்காமல், அப்போதே புறப்பட்டுவிட்டார்.

ஒருவருக்கொருவர் சிரித்துப் பேசி வழி அனுப்பினாலும், மீண்டும் ஒட்டுதல் ஏற்படுவதற்கு, 'பிடிவாதம்' என்பது உறைந்து போய்த் தடுப்பாகவே நின்றது.

தலை வாசலை அடுத்து, கூடத்தில் திருமணப் பேச்சு நடந்து கொண்டிருந்த போது, முன் அறையில், மீனாட்சியோடு, அவள் வயதுப் பெண்களாகப் பலர் கூடியிருந்தார்கள்.

முடிவு செய்யாமலே பெண் கேட்டு வந்தவர்கள் எழுந்து சென்றபோது, அங்கு பொங்கித் ததும்பிக் கொண்டிருந்த உற்சாகமெல்லாம் நொடிப் பொழுதில் வடிந்தே விட்டது.

''என்னடி இது! இந்த இளவட்டக் கல்லைத் தூக்க முடியாமலா.... மாப்பிள்ளை எந்திரிச்சு போறாரு'' என்றாள் ஒருத்தி.

''ஆளைப் பார்த்தா வாட்டசாட்டமாகத்தான் இருக்காரு. இப்படியா பயந்துக்குவாரு. ஒரு பொட்டச்சி தூக்கிப் போடுவா?'' என்று சொல்லி மூக்கின்மேல் விரலை வைத்து வியப்படைந்தாள் குண்டாக இருந்தவள்.

மீனாட்சியின் முகம் வாடித்தான் விட்டது. கூர்ந்து பார்க்கும் போது அவளது கயல் விழியோரம் நீர் கோத்திருப்பது தெரிந்தது.

பண்படுத்திய வயலில் விதையைத் தெளித்தது போல், எடுத்து வைத்த இந்தப் பேச்சு, சில நாட்களுக்குள்ளேயே, இந்த நெஞ்சுக்குள் எத்தனை எத்தனை கனவுகளைத் தான் நிறைத்துவிட்டது. அத்தனையும் நீர் மேல் குமிழியாக உடைந்து விடுமோ?

— நினைக்க நினைக்கக் கண் கலங்கியது மீனாட்சிக்கு.

காணாத முன்பு கற்பனையாக நின்றவர், நேற்று திருவிழாவிலே நேருக்கு நேராகப் பார்த்துவிட்ட பிறகு, இரவெல்லாம் கண்ணிமை பொருந்தவில்லையே. இந்த ஒரு பொழுதுக்குள், அந்த எடுப்பான உருவம், புன்னகை, அத்தனையும் நெஞ்சிலே நிலைத்து நின்றுவிட்டதே! அதை அவ்வளவு சுலபமாக அங்கிருந்து அகற்றிவிட முடியுமா? கண்ணீர் கொப்பளிக்கும் முன்னதாக முகத்தைத் துடைத்துக் கொண்டாள் மீனாட்சி.

அதற்குள் மற்றப் பெண்கள் போய்விட, செங்கமலம் மட்டும் கட்டிலிலே உட்கார்ந்து, ஆதரவோடு அவளது கையைப் பிடித்துக் கொண்டாள்.

'' இப்ப... எதுக்குத் திருவிழாவுக்குப் போனோம்னு இருக்கு. அதுக்கு முன்னாலே, எதையும் நினைக்காம நான் நிம்மதியாகத்தான் இருந்தேன். நினைச்சாச்சு. நடக்கலையின்னு... இந்த மனசு கெட்டுப் போனது தானடி'' என்று சொல்லிப் பெருமூச்சுவிட்டாள் மீனாட்சி.

'' ஒண்ணும் கெட்டுப் போகாது'' என்ற செங்கமலம், கவிழ்ந்து, அறையின் வாசல் பக்கமாக எட்டிப் பார்த்துவிட்டு, ''எனக்கு ஒரு யோசனை தோணுது'' என்றாள்.

நீர் கோத்த இமைகள் படபடக்க அவளைப் பார்த்தாள் மீனாட்சி.

'' யாருக்கும் தெரியாம... அவருக்குச் சொல்லி அனுப்பிச்சா என்ன?'' என்றாள் செங்கமலம்.

அந்தச் சோகத்திலும் மீனாட்சியின் முகத்தில் செம்மை படர்ந்தது.


''அந்த அளவுக்கு நமக்கு என்னடி உரிமை இருக்கு?'' என்று கேட்டாள்.

'' உரிமையை நாமதான் உண்டாக்கிக்கணும்'' என்றாள் செங்கமலம்.

அதற்குள்ளாக, மகளைத் தேடிக் கார்மேகம் அங்கே வந்துவிட்டார்.

இருவருமே அவசரத்துடனே எழுந்து முகத்தைத் துடைத்துக் கொண்டனர்.


---



லண்டனிலிருந்து வெளியாகும் 'டெய்லி மிர்ரர்' தனது பெண் வாசகர்களுக்கு ஒரு போட்டி வைத்தது. 'இலட்சியக் கணவன் எப்படி இருக்க வேண்டும்?'' என்ற கேள்விக்கு வரும் சிறந்த பதிலுக்குப் பரிசு அறிவிக்கப்பட்டது.

பரிசு கொடுக்கப்பட்ட பதில்: 'இலட்சியக் கணவன்' என்பவன் தான் ஓர் இலட்சிய மனைவியை மணந்துகொண்டிருப்பதாக நினைப்பவன்.

விக் — 'பாபு'



வெற்றிகரமாக அழுக்கைப்போக்கும்
புதிய ரம்யா
தீவிரமாகச் சுத்தப்படுத்தும்
டிடர்ஜன்ட் வில்லை
NEW
RAMYA
DEEP CLEANSING DETERGENT
அழுக்குத்துணி
வெளுக்க—
பளீரென ஒளிவீச
மற்றொரு
தரமான தயாரிப்பை அளிப்போர்:
அல்ட்ராமரீன் & பிக்மண்ட்ஸ் லிமிடெட்
ராணிப்பேட்டை, தமிழ்நாடு
SAA/UPL/1922 TAM




ஜி.இ.ஸி. ஆஸ்ரம் டியூப்லைட்
ஆண்டுக் கணக்கில் உபயோகித்த பிறகும்கூட
பிரகாசமான ஒளியுடன் புதியதாயும் இருக்கின்றது
மங்காமல் அதிக காலம், ஒரே சீரான ஒளி:
இருபுற நுனியிலும் ஒருபொழுதும்
கருமை அடையாது!
G.E.C.
Osram

## ஸ்ரீ தர்மலிங்கேஸ்வரர் ஆலய
# மகா கும்பாபிஷேகம்
### ஸர்வ மங்களா நகர்
### நங்கைநல்லூர், சென்னை - 61

"பண்டைய காலத்திலிருந்து விளங்குவதும் நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்குமுன் சோழ அரசர்களால் திருப்பணி செய்யப்பட்டிருப்பதாக சிலா சாஸனங்களால் அறியப்படுவதுமான ஸ்ரீ தர்மலிங்கேஸ்வர ஸ்வாமி ஆலயம் ஜீர்ணோத்தாரணம் செய்யப்பட்டு" ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் பூரண அனுக்ரஹத்துடன் நிகழும் ராக்ஷஸ வருஷம் தை மாதம் 22ஆம் தேதி வியாழக்கிழமை (5-2-1976) பஞ்சமி உத்திரட்டாதி நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் கும்ப லக்ன தினம் காலை 7-30 மணிக்கு மேல் 8-30 மணிக்குள் மஹா கும்பாபிஷேகம் "ஸர்வமங்களா" ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி ஆஸ்ரமம்-ஆலயத் தலைவர் ஸ்ரீ ராஜகோபால ஸ்வாமிகள் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

பக்தர்கள் யாவரும் கலந்து கொண்டு ஸ்ரீ ஸர்வ மங்களாம்பிகை சமேத ஸ்ரீ தர்மலிங்கேஸ்வர ஸ்வாமியின் அருளை அடையுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பொருளுதவி செய்ய விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டப்படுகிறது.

ஸ்ரீ C. T. சுப்ரமணியன், பொருளாளர்
ஸ்ரீ தர்மலிங்கேஸ்வரர் ஆலயத் திருப்பணிக் கமிட்டி,
21, கல்லூரி காலனி, சென்னை-600 061





இரவெல்லாம் விழித்திருந்ததில் தலைகனத்துப் போய் உட்கார்ந்திருந்தான் அழகப்பன்.

அவனுள் உறைந்திருக்கும் மீனாட்சியின் நினைவு ஒருபுறம் இருக்கட்டும். அவள் மருமகளாக வீட்டுக்குள் வருவதற்கு முன்பாகவே, அம்மாவுக்கும் அப்பாவுக்கும் இவ்வளவு பாசமா? ஆளுக்கொரு பக்கமாகச் சொல்லி அலுத்துத்தான் போய் விட்டார்கள்.

இங்கே இந்த மாப்பிள்ளைக்கு, இவ்வளவு கிராக்கி இருந்து என்ன செய்ய? இவ்வளவு பாசம் கொப்புளிக்கும்போது, அந்தக் கல் தூக்கும் படலத்தையே ஒதுக்கித் தள்ளினால் என்னவாம்? இந்தப் படித்த மாப்பிள்ளைக்குக் கொடுக்கும் மரியாதையாக இருக்கட்டுமே. உள்ளே நுழையும் போதே கல்லைத் தூக்கிக் கொண்டு நிற்க வேண்டுமா?

இதைச் சொல்லப் போனால், அந்தப் பட்டிக்காட்டின் கட்டுப்பாட்டைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்து விட்டார் அப்பா.

"நம்மகிட்ட எவ்வளவோ சொத்து சுகம் இருந்தாலும், நீ பெரிய படிப்புப் படிச்சிருந்தாலும், அந்தப் பெண் மீனாட்சி, இந்த வீட்டு மருமகளா வர்றதுக்கு நாம்தான் கொடுத்து வைச்சிருக்கணும்" என்ற துரைசாமி மகனது முகத்தைக் கூர்ந்து பார்த்தார்.

இன்னும் என்ன — வெளிப்படையாகவே கேட்டுவிட வேண்டியதுதானே.

"எங்க மனசிலே இருக்கிறதையும் சொல்லிட்டோம். உனக்கு விருப்பம் இல்லையின்னு இந்தக் காரியத்தைக் கட்டாயப்படுத்திச் செய்திட முடியாது. ஆனா... உன் மனசிலே இருக்கிறதும் எனக்குத் தெளிவாகத் தெரியணும். படிக்கப் போனவன், எந்தப் பெண்ணையும் பார்த்து, அவளையே கட்டிக்கிறதுன்னு தீர்மானிச்சிருக்கியா?" என்று கேட்டார்.

அழகப்பன் தலை நிமிர்ந்து தந்தையைப் பார்த்தான். அவனது கண்கள் பனித்தன.

"அப்பா....! உங்களை மறந்து எதையும் நான் மனசாலேகூட நினைக்கலே. தன்மானத்தை நினைச்சுத்தான், என்னையும் மறந்து, உங்களைக் கடந்து பேசிட்டேன்" என்றார்.

துரைசாமியின் முகம் மலர்ந்தது.

"நேத்து, நாலு பேருக்கு முன்னாலே உனக்கு மரியாதை கொடுக்கணும்னுதான் நானும் மேலே பேசலே. நம்ம பரம்பரையிலே எத்தனையோ வீர விளையாட்டுன்னு இல்லையா? இப்படி நினைக்கிறப்ப தன்மானத்துக்கு இடமே இருக்காது. அப்ப இன்னைக்கே போய் நிச்சயத்தை முடிச்சுக்கிட்டே வந்திடுவோம்" என்றார் உற்சாகத்துடன்.

அழகப்பனும் புன்னகையுடன் தலையசைத்தான்.

மந்தையிலே, வண்டியை நிறுத்திவிட்டு, அழகப்பனுடன் சேர்ந்து ஐந்தாறு பேர்களுடன், நாகம்பட்டிக்குள் நடந்தே சென்றார் துரைசாமி.

நேற்றைக்கு, இன்று நேர்மாறான மாறுதல் தெரிந்தது.

"இவன் ஏன் இன்றைக்கும் ஊருக்குள் வருகிறான்" என்று ஒவ்வொருவரும் பார்வையால் கேட்பது போலிருந்தது. நேற்றே காரியத்தை முடித்து, உறுதிப்படுத்தியிருந்தால், இந்த அளவுக்குப் பிளவுபட்டிருக்காது.

ஆனால், கார்மேகம் இந்த வருகையை அறிந்து, முற்றத்திலேயே நின்றார். "எல்லாரும் வாங்க" என்று சொல்லி வரவேற்றார்.

முன்கூடத்திலேயேஎல்லாரும் அமர்ந்தனர்.

'வந்த காரியத்தைச் சொல்வதா - அல்லது 'இங்கு நடந்ததென்ன?' என்று கேட்பதா' என்ற யோசனையில் மூழ்கியிருந்தார் துரைசாமி.

நாட்டாண்மையே முந்திக் கொண்டார்.

"இளவட்டம் கல்லைத் தூக்கணும்னு சொன்னப்பத்தான், நேத்துப் பேச்சு நின்னு போச்சு" என்று நேற்று விட்ட இடத்திலிருந்தே தொடங்கினார்.

"அதுக்குச் சம்மதிக்கத்தான் இப்ப நாங்க வந்திருக்கோம். இந்தச் சின்னக் காரியத்துக்காக நிலைச்சு நிக்கப் போற உறவு நின்னு போகக் கூடாது" என்று தொடர்ந்தே சொன்னார் துரைசாமி.

அங்கு சற்று அமைதி நிலவியது.

"ஒரு பொழுதுக்குள்ளே, கோயில் வாசல்லே, அந்த இளவட்டக் கல் இரண்டு துண்டமா உடைஞ்சு கிடக்கு. இவங்க எதைத் தூக்கப் போறாங்களாம்?" என்ற குரல் கூடியிருந்த கும்பலுக்குள்ளிருந்து வந்தது.

"இதைச் செய்தது யாருன்னுதான் எங்களுக்குப் புரியலே" என்று கார்மேகமும் சொன்னார்.

"இது எங்களுக்கும் அதிர்ச்சியாகத்தான் இருக்கு" என்றார் துரைசாமி.

"ராவோட ராவா கல்லைத்தான் உடைச்சாச்சே. பரம்பரையா இருந்து வந்திச்சு அது" என்றான் உள்ளூர் இளவல் ஒருவன்.

நாட்டாண்மை அவனை ஏறெடுத்துப் பார்த்தார்.

"இந்த இடத்திலே தலைக்குத் தலை ஒண்ணு பேசிக்கிட்டிருக்கப்படாது" என்று சற்றுக் கோபமாகச் சொன்னவர், துரைசாமியின் பக்கமாகத் திரும்பி, "ஒரு லேசான காரியம் இப்ப கனத்துக்கிச்சு. முதல்லே கல்லை உடைச்சது யாருன்னு தெரியணும்" என்றார்.

"நாங்களே உடைச்சிருக்கலாமுன்னு சந்தேகப்படறீங்களா?" என்று திரும்பினார் துரைசாமி.

"அது எப்படி உடைஞ்சிருந்தாலும், ரெண்டு துண்டாகிக் கிடக்கிறது. எங்க மனசுக்குப் பொருத்தமாப்படலீங்க" என்றார் கார்மேகமும்.

"கல்லை உடைச்சது..... ஊருக்குள்ளே ஒருத்தராத்தான் இருக்கணும்" என்றார் துரைசாமி.

"இதையும் எப்படிங்க உறுதியாச் சொல்ல முடியும்? இதைச் செய்தது யாருன்னு தீர்க்கமாகத் தெரிஞ்சப்புறம்தான் மற்றதைப் பேச முடியும். ஒரு நாளும் இல்லாதது நடந்

---





திருக்கு'' என்று நாட்டாண்மை முடிவாகவே சொன்னார்.

துரைசாமி திகைப்பிலே மூழ்கிவிட்டார்.

அழகப்பன், அடிக்கடி அவரையே திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தான். வரும்போதே, இங்கு வாயையே திறக்கக் கூடாதென அவனுக்கு உத்தரவு.

துரைசாமி ஏதோ சொல்ல வாயெடுத்த போது வீட்டுக்குள் கூடியிருந்த பெண்களிடையே சலசலப்பு ஏற்பட்டு, அது வெளியிலும் வந்து மோதியது.

''என்னது.... அங்கே?'' என்று அதட்டினார் நாட்டாண்மை.

சற்றைக்கெல்லாம் கும்பலை விலக்கிக் கொண்டு, அருள் வந்தவளைப் போல் ஆவேசத்தோடு அங்கு வந்து நின்றாள் செங்கமலம். அவளுக்கு இருந்த பரபரப்பில், தானும் ஒரு கன்னி கழியாப் பெண் என்பதையும், அங்கு ஊரே கூடியிருப்பதையும் அவள் நினைக்கவே இல்லை.

''இந்தக் கல்யாணத்தை நிறுத்திடாதீங்க, தாத்தா!'' என்று நாட்டாண்மையை நோக்கிச் சொன்ன, செங்கமலம் அழுதே விட்டாள்.

''என்ன சொல்றே நீ.... பதறாமச் சொல். எல்லோரும் நம்மவங்கதான்'' என்றார் நாட்டாண்மை.

செங்கமலம் தயங்கித்தயங்கிச் சொன்னாள்.

'' நேத்து விடியக்காலம் ஆற்றுக்குக் குளிக்கப் போனப்ப, இந்த இளவட்டக் கல்லுலேதானே மீனாட்சியோட கல்யாணமே நிற்கப் போகுதுன்னு ஆத்திரப்பட்டு, யாருக்கும் தெரியாமக் கோயில் திண்ணையிலேயிருந்து நான்தான் உருட்டி விட்டுட்டேன். அது உடைஞ்சு போச்சு'' என்றாள் அவள்.

''இதிலே உனக்கு எதுக்கு இவ்வளவு ஆத்திரம் வரணும்'' என்று கோபத்துடனே கேட்டார் நாட்டாண்மை.

செங்கமலம் தயக்கத்துடன் சுற்றிலும் பார்த்தாள்.

''நாலு பேருக்கு முன்னாலே வந்து நின்னுட்டியே...... சொல்லித்தானே ஆகணும்.''

''இந்தக் கல்யாணம் நின்னு போனா.... மீனாட்சி உயிரோட இருக்கமாட்டா.....'' என்று சொன்னபோது அவளுக்கு அழுகையும் வந்து விட்டது.

நாட்டாண்மை சிரித்தார்.

''நம்ம மடியிலேதான் கனம் இருந்திருக்கு'' என்றவர் கார்மேகத்தின் பக்கமாகத் திரும்பிப் பார்த்து, ''நெருங்கித்தான் ஆகணும்னு இருக்கிறப்ப விலகிப் போக முடியுமா? என்ன சொல்றே கார்மேகம் ?'' என்று கேட்டார்.

உள்ளுக்குள் இவ்வளவும் இருந்ததா — என்பதை நினைத்துத் திகைத்துப் போயிருந்த கார்மேகம், ''நீங்களே.... சொல்லுங்க'' என்றார் மனம் நிறைந்தவராக.

நாட்டாண்மை சொன்னார்:

''கோவிலுக்குள்ளே, சாமிக்குப் பின்னாலே, இதே மாதிரி இன்னொரு இளவட்டக் கல் கிடக்குது. அதைத் தூக்கியாந்து முன்னாலே போடுங்க. மாப்பிள்ளையும் தயாராகத்தான் வந்திருக்காரு'' என்றார் சிரித்துக் கொண்டே.

பூரித்துப் போனவராக, மகனைத் திரும்பிப் பார்த்தார் துரைசாமி.


அழகப்பனின் முகம் மலர்ந்திருந்தது.

அவனது மனத்திரையில் மீனாட்சி நின்று சிரித்தாள்.


தனக்காக, அவள் உயிரையே கொடுக்கத் துணிந்திருக்கும் போது, அவனுக்காக இந்தக் கல்லைத்தான் தூக்கக் கூடாதா ?

அவனது தோள்கள் விம்மிப் புடைத்தன. அப்போதே துள்ளி எழுந்தான்.

இந்த இளைஞன், ''வெற்றிவாகை சூடிவிடுவான்'' என்பதை நிச்சயமாக நம்பலாம்.



# மனித குலத்தை மிகப் பரவலாகப் பாதிக்கும் நோயால் பீடிக்கப்பட்டுள்ளவர்களில் நீங்களும் ஒருவராக இருக்கலாம்...



## உங்களுக்கே தெரியாத நிலையில்!

நூற்றுக்கு 95 பேர்கள் பற்சிதைவால் பாதிக்கப்படுகிறார்கள். எனினும் அதிக அக்கறை காட்டாத இந் நோய், காலப் போக்கில் வலிதரும் சொத்தையாக மாறி உங்களைப் பெரும் அவதிக்கு உள்ளாக்கி விடும். எனவேதான் உங்கள் பற்களுக்கு இடைவிடாத பாதுகாப்பு தேவைப்படுகிறது.

## பினகா ஃப்ளோரைட் பற்சிதைவுக்கு எதிராக நீடித்த பாதுகாப்பளிக்கிறது

பற்சிதைவை 50 சதவிகிதம் வரை ஃப்ளோரைட் குறைக்கிறது என விஞ்ஞான சோதனைகள் நிரூபித்துள்ளன. ஆகவே தவறாமல் பினகா ஃப்ளோரைடினால், நாள்தோறும் காலையிலும், படுக்கை வேளையிலும் பல் துலக்குங்கள். இதன் தனிப்பட்ட, நீடித்து நிற்கும் ஆற்றல் பல் எனாமலைப் பலப்படுத்துகிறது. பற்களைச் சிதைக்கும் கிருமிகளின் வளர்ச்சியையும் வலிதரும் சொத்தையையும் தடுக்கிறது.




**பல்லுக்கு உறுதி,**
**பற்சிதைவுக்கு எதிரி—**

# பினகா ஃப்ளோரைட்

L-BF/115 TAM




# இன்பத் தென்றல்

குல்ஷன் நந்தா

## 18

ரூபாவின் தாயாருக்குக் கண்கள் ரத்தமாகச் சிவந்தன. இருந்தாலும் வந்த கோபத்தை வலுக் கட்டாயமாக அடக்கிக் கொண்டாள்.

''என்ன விசேஷம், ரோஸி? உன் மகிழ்ச்சிக்கான காரணத்தை எனக்குக் கூற மாட்டாயா?'' என்று கேட்டான் ஜான். வாயோ தின்பண்டத்தைக் குதப்பிக்கொண்டிருந்தது.

ரோஸி பேசவில்லை. மௌனமாக ஏதோ சிந்திக்கலானாள். அப்புறம் தலையணைக்கு அடியிலிருந்து இரண்டு பத்து ரூபாய்களை எடுத்து ஜானிடம் நீட்டி, ''போய்விடு, உடனே இங்கிருந்து போய்விடு!'' என்றாள்.

''அவ்வளவு சீக்கிரமாகவா? இன்றைக்கு என்ன விசேஷம்? இப்படி விரட்டுகிறாய்?'' என்று கேட்டான் ஜான்.

''என்னவாயிருந்தால் உனக்கு என்ன? உனக்குத்தான் பத்துக்கு இருபதாகத் தண்டம் அழுதிருக்கிறேனே. போய்த் தொலையேன்!'' ரோஸி ஆத்திரத்தைக் கொட்டினாள்.

''எதற்காக என்னைத் தொலையச் சொல்கிறாய்?'' ஜான் அவளைக் கோணலாகப் பார்த்துக் கேட்டான்.

''ரூபா வரப்போகிறாள். உன்னைப் பார்த்து விட்டால் அவளுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வரும்!''

''ரூபா வருகிறாளா? அப்படியானால் நீ என்ன சொன்னாலும் நான் போகமாட்டேன்.''

''பிடிவாதம் வேண்டாம், ஜான்! எனக்காகப் போ! சொல்வதைக் கேள்!''

''முடியாது, ரோஸி. உனக்குத் தெரியாது. உன் பெண்ணோடு விளையாட்டும் விளையுமாகப் பேசுவதில் ஏற்படும் ஆனந்தம் பாட்டில் பாட்டிலாகப் பருகினாலும் ஏற்படுவதில்லை!''

ரோஸி அவனுடைய பிடிவாதத்தைக்கண்டு பயந்துவிட்டாள். பூசை வேளையில் கரடி

தமிழாக்கம்: ரா. வீழிநாதன்



புகுந்த கதையாக வந்திருக்கும் இவனை என்ன செய்வதென்று அவளுக்குப் புரியவில்லை. அவள் இன்னுமொரு பத்து ரூபாய் நோட்டை எடுத்து அவனிடம் நீட்டி, ''இந்தா, தொலைத்துக்கொள்! இதுதான் என் கடைசி முதல்! தயவு செய்து போய் வா! காலில் விழுந்து கேட்டுக் கொள்கிறேன்!'' என்றாள்.

''நிசத்தைச் சொல்லு. விஷயம் என்ன? இன்று யார் வருகிறார்கள்?'' என்று கேட்டான் ஜான்.

''இதைக் கேட்டு நீ என்ன செய்யப் போகிறாய்? போ, போய் உன் பாட்டிலோடு உறவாடு!''

''முடியாது. என்ன விஷயம் என்பதைத் தெரிந்து கொண்டுதான் இன்று நான் இங்கிருந்து நகரப் போகிறேன்!''

''இன்று ரூபாவைப் பெண் பார்க்க வருகிறார்கள்!''

''யார்?''

''பையனின் தமக்கை. அவளுக்கு என்னைப் பற்றி எதுவும் தெரியாது. ரூபா தகப்பனில்லாத பெண் என்பது மட்டும்தான் அவளுக்குத் தெரியும்.''

''அதாவது இன்றைக்குப் பெண்ணின் அதிர்ஷ்டத்தை விலை பேசப் போகிறாய். இல்லையா?''

''ஒரு பெண்ணை ஒருவனின் கையில் பிடித்துக் கொடுப்பது விலை பேசுவதாக எப்படி ஆகும்? ஆண்டவனுக்குச் சம்மதமானால் அந்த நல்ல காரியம் நடந்தேறும்!''

''அப்படியானால் இன்னொரு நல்ல காரியம் செய். கையோடு கையாக என் அதிர்ஷ்டத்துக்கும் ஒரு வழி வகை செய்!''

''என்ன உளறுகிறாய்?''

''இன்றைக்கு நான் குடிக்கவில்லை. உளறவும் இல்லை. சாராயத்தைத் தொட்டு எத்தனையோ நாட்களாகி விட்டன!''

''விளக்கமாகச் சொல்லு. நீ என்ன சொல்கிறாய்?''


''உன் பெண் நல்லபடியாக வாழ வேண்டுமானால், அவள் பெயரால் இன்று எனக்குத் தானம் கொடு. அப்புறம் வாழ் நாள் முழுதும் உன்னை நெருங்கவே மாட்டேன்!''

''தினம் தினம்தான் உனக்குப் பிச்சை போட்டுக் கொண்டு வந்திருக்கிறேனே? இவ்வளவும் என்னத்தைக் கொடுப்பது?''

''அப்படியானால் சரி!'' என்றவன் அருவருக்கச் சிரித்தான். தட்டில் இருந்த இனிப்பை எடுத்துத் தின்னலானான்.

''நீ போய்த்தான் ஆகணும், ஜான்!'' ரோஸி குரலில் கடுமையைத் தேக்கி அவனுக்கு ஆணையிட்டாள்.

''நான் மாட்டேன் என்று எங்கே மறுத்தேன்?'' சட்டைப் பையிலிருந்த சாராயப் பாட்டிலை எடுத்து அதிலிருந்த கடைசித் துளியையும் பருகியவாறே கேட்டான் ஜான். அப்படியே ரோஸியை விழுங்கி விடுபவன் போலவும் பார்த்தான். ரோஸியினுடைய இதயம் அச்சத்தால் படபடவென்று அடித்துக் கொண்டது.



அதிசயக் கனவு

## விஞ்ஞான உண்மை

இப்பொழுது நாம் சர்வ சாதாரணமாக அறிந்துள்ள 'பென்ஸீன்' (Benzene) என்னும் ரசாயனப் பொருளின் அணுச் சேர்க்கை அமைப்பை வட்ட வடிவ அமைப்பு உடையது என்று 'கெகூல்' என்ற விஞ்ஞானி நூற்றுப்பத்து ஆண்டுகளுக்குமுன் கண்டு பிடித்தார். எப்படி? ஒரு கனவின் மூலம்! அவர் எழுதுகிறார்:

''என்னுடைய பாடப் புத்தகத்தை எழுதிக் கொண்டு உட்கார்ந்திருந்தேன். என்னுடைய சிந்தனை வேறு இடத்தில் லயித்திருந்ததால், அந்த வேலை நன்கு முன்னேற்ற மடையவில்லை. நெருப்பு உள்ள பக்கம், என் நாற்காலியைத் திருப்பிப் போட்டுக் கொண்டு அரைத் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தேன். மறுபடியும் அணுக் கூறுகள் என் கண் முன்னே நாட்டியமாடத் தொடங்கின. சிறிய அணுக் கூறுகள் மென்மையாக நகர்ந்து போய்க் கொண்டிருந்தன..... அந்த அணுக் கூறு ஒரு பாம்பு நெளிவது போல் ஒன்றோடு ஒன்று முறுக்கிக் கொண்டும், திரும்பிக் கொண்டும் இருந்தது. ஆனால் இது என்ன ஆச்சரியம்! ஒரே ஒரு பாம்பு தன்னுடைய வாலைத் தானே கௌவிக் கொண்டுள்ள தோற்றம், என் கண் முன்னே என்னைக் கேலி செய்வது போல் சுழன்று சுழன்று வந்தது. இடியால் தாக்கியது போல் திடீரென்று விழிப்படைந்தேன். மீதி இரவை அக் கனவுக் கொள்கையின் விளைவுகளைப் பற்றிய ஆராய்ச்சியிலேயே கழித்தேன். கனவு காணப் பழகிக் கொள்வோம்! அப்படியாவது ஒரு வேளை, நாம் உண்மையை அறியலாம்!''

—எஸ். ராமசுவாமி

---

''உன் மனத்தை எதற்காக வீணில் கெடுத்துக்கொள்கிறாய்? என் அதிர்ஷ்டத்துக்கு ஒரு தீர்ப்பை வழங்கிவிட்டு ஹாய்யாக இரு.''

''இனி என்னிடம் ஒன்றும் இல்லை என்பது உனக்குத் தெரியும். அப்புறமும்..''

''அந்த முத்து மாலை இருக்கிறதே. அது வேறு என்றைக்குப் பயன்படப் போகிறது? அதைக் கொடுத்து விடேன்!''

''உன் கண் அதன் மேலும் பட்டுவிட்டதா? அது என் மகளின் உடைமை!''

''ஆனால் அந்த மகளே உன் உடைமை தானே?''

இப்படி ஜான் கேட்டுக் கொண்டிருந்த பொழுது யாருடைய காலடி ஓசையோ கேட்டது. இருவருமே துணுக்குற்றுத் திரும்பிப் பார்த்தனர். ரூபா அப்பொழுதுதான் வாசற்படி தாண்டி வந்து கொண்டிருந்தாள். அவள் ஜான் சொன்னதைக் கேட்டுவிட்டாள். இருந்தாலும் அவள் அந்த நேரத்துக்கு அவன் வாயில் அகப்பட்டுக்கொண்டு விழிக்க விரும்பவில்லை. காரணம், சாரதா தேவி அவளுடன் இருந்ததுதான். அவள் ஜானையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ரூபாவைப் பார்த்த ஜான் வெறுப்போடு முகத்தைத் திருப்பிக் கொண்டான். என்றாலும் ரூபாவின் கழுத்தில் முத்து மாலையைக் கண்டபோது அவன் இதயத்தை என்னவோ செய்தது. அவள் விலையுயர்ந்த புடவை அணிந்து எழிற் பதுமையாக வேறு காட்சி அளித்தாள். இவ்வளவையும் ஒரு வீச்சில் கவனித்த ஜான், பக்கத்தில் நின்ற சாரதா தேவி மீது தன் பார்வையைப் படர விட்டான். அப்புறம் என்ன நினைத்துக் கொண்டானோ, மெதுவாக நடந்து சென்று ரூபாவின் அருகில் போய் நின்று கொண்டான். அதோடு நிற்காமல் முத்து மாலையைத் தொட்டுப் பார்க்கக் கையை நீட்டினான். ரூபாவுக்கு அவனுடைய இந்த விவகாரம் பிடிக்கவில்லை. அவன் கையைச் சட்டென்று தட்டிவிட்டாள். அப்புறம் அவனை லட்சியம் செய்யாதவள் போல், ''வாருங்கள்!'' என்று சாரதா தேவியை அழைத்தாள்.

''யார் இது?'' — சாரதா தேவி கேட்டாள்.

''எப்பொழுதாவது இப்படி வந்து தொல்லை கொடுப்பான். எந்நேரமும் போதையிலேயே ஆழ்ந்து கிடப்பதுதான் இவன் வழக்கம்.'' பூசி மெழுகினாள் ரூபா.

ரூபாவின் பேச்சைக் கேட்டு ஜானுக்குக் கோபம் குமுறிக் கொண்டு வந்தது. இந்த அவமானத்தை அவனால் பொறுக்க முடியவில்லை. அவன் ரூபாவின் கூந்தலைப் பிடித்து ஓர் உலுக்கு உலுக்கி, ''ஏண்டி சிறுக்கி! அப்பன் என்று கூற உனக்கு நாக் கூசுகிறதோ?'' என்று சீறினான்.

ரூபாவினால் சட்டென்று அவனுக்குப் பதில் சொல்ல முடியவில்லை. ரோஸி ஏதோ சொல்ல வாய் எடுத்தாள். ஜான் அவளையும் அதட்டி அடக்கினான். ''போடி, போ! பெரிசாகப் பெண்ணுக்குப் பரிந்து கொண்டு வந்து விட்டாயோ? இந்தப் பாவத்தைப் பெண்ணைச் சுமந்த உன்னைப் போய்க் கல்யாணம் செய்து கொண்டேனே, அதுவே பெரிய காரியம் இல்லையா?'' என்றான்.

''ஜான்! நாக்கை அடக்கிப் பேசு! இல்லையென்றால் நான் ரொம்பப் பொல்லாதவளாகி விடுவேன்!'' ரோஸி பெண் நாகமெனச் சீறினாள்.

''சட்! நிறுத்தடி! நீ நாக்கை நீட்டி முழக்கினால் நான் கையை நீட்டிவிடுவேன்! அம்மா—பெண் இரண்டு பேரையும் தலை கீழாகக் கட்டி வைத்துத் தோலை உரித்துப் போடுவேன்!'' என்று கூறிக்கொண்டே வாசற்புறம் காறி உமிழ்ந்தான். அவனது எச்சில் சாரதா தேவியின் புடவைத் தலைப்பில் போய் விழுந்தது.

ரோஸி அவனது இந்த அடாவடித்தனத்தைக் கண்டு எல்லை மீறிய கோபம் கொண்டாள். ஆயினும் சாரதா தேவியை நேருக்கு நேர் நிமிர்ந்து நோக்கக் கூசினாள். ரூபா சட்டென்று தன் கைக்குட்டையை எடுத்துச் சாரதா தேவியின் புடவைத் தலைப்பைத் துடைத்து விட்டாள்.

ரோஸி கோபம் கொப்புளிக்க இங்கும் அங்கும் பார்த்தாள். அவளது பார்வை ஒரு மூலையில் சாத்தியிருந்த கைத்தடி மீது விழுந்தது. அதை எடுத்து ஜானின் கால்களில் தன் பலம் கொண்ட மட்டும் ஓங்கி அடித்தாள். ரூபா பயந்து போய்த் தாயா

ரைத் தடுக்க முயன்றான். ஆனால் ரோஸி எதற்கும் கட்டுப்படவில்லை. விடாமல் ஜானைத் தடியால் அடித்துக் கொண்டே இருந்தாள். ஜான் கதறினான், கைகூப்பினான். ஆயினும் அவள் அடிப்பதை நிறுத்தவில்லை.

ரூபாவும் சாரதா தேவியும் பிரமித்துப் போய் இந்தக் காட்சியைப் பார்த்தவாறு நின்றனர். அந்த நேரத்துக்கு ரோஸியின் நோஞ்சான் உடம்பில் அத்தனை பலம் எங்கிருந்துதான் வந்ததோ?

கடைசியில் ரூபா துணிந்து முன்னேறித் தாயாரைத் தடுக்க முயன்றான். அதற்குள்ளாக ரோஸி ஆடிப்போய்த் தொப்பென்று தரையில் விழுந்து விட்டாள்.

ரூபா உயிரே போய் விட்டாற் போல் அலறினான். சட்டென்று ரோஸியின் உடலைச் சீர்படுத்தித் திருப்பிப் படுக்க வைத்த சாரதாவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. ஏனெனில் ரோஸி தன் நினைவு இழந்து கிடந்தாள். ரத்தக் கொதிப்பில் மாரடைப்பு ஏற்பட்டிருக்குமோ என்று தோன்றியது.


ஓலக் குரலைக் கேட்டு அக்கம் பக்கத்து விட்டார்கள் ஓடிவந்தனர். சாரதா தேவி அவர்களுடைய உதவியோடு ரோஸியைத் தன் வண்டியில் ஏற்றிக்கொண்டு ஆஸ்பத்திரிக்கு விரைந்தாள்.

ஜான் இதற்குள் தெரு முனைக்குச் சென்று ஒளிந்து நின்று தன் துக்கிரித்தனத்தின் விளைவைப் பார்க்கலுற்றான்.

ரோஸியை ஆஸ்பத்திரியில் சேர்த்து அன்று மூன்றாவது நாள். இதயநோய் ஒரே தாக்குதலில் அவளது இரத்தம் முழுவதையும் உறிஞ்சிவிட்டிருந்தது. டாக்டர்களின் கூற்றுப்படி குறைந்தபட்சம் அவள் மூன்று அல்லது நான்கு வாரங்கள் அங்கேயே இருந்தாகவேண்டும் என்றாகி விட்டது. மருந்துச் செலவு, மற்றச் செலவு எல்லாம் ரூபாவின் தலையில் பெருஞ் சுமையாக விழுந்தது. ஆயினும் ரூபா அயர்ந்துவிடவில்லை. வாழ்க்கையில் தோன்றும் இடையூறுகளையெல்லாம் எதிர்த்து நின்று வெற்றி காண முயல்வது என்று அவள் முடிவு கட்டிவிட்டாள்.

தன் வாழ்வின் இரகசியங்கள் அம்பலமாகிவிட்டனவே என்பதற்காக அவளுக்குத் தன் தாயாரின் மீது வெறுப்பு உண்டாகவில்லை. மாறாகப் பன்மடங்கு அவள் மேல் மரியாதைதான் ஏற்பட்டது. தாய்க்கு உணர்வு திரும்பியபொழுது அவளை அன்பொழுகத் தழுவிக் கொண்டாள்; தன் உள்ளத்தில் எந்த நினைப்பும் முள்ளாக உறுத்தவில்லை என்பதைக் காட்டிக் கொண்டாள். ரூபாவுக்கு ஒரே ஒரு வருத்தம் என்னவென்றால், அன்று நடந்த நிகழ்ச்சி நடக்காமலே இருந்தால் நன்றாக இருந்திருக்குமே என்பது தான். அவளும் அவள் தாயாரும் அதனால் சாரதா தேவியின் பார்வையில் என்றென்றைக்கும் அல்லவா தாழ்ந்து விட்டார்கள்!

அப்படியிருந்தும் சாரதா தேவி கணத்துக்குக் கணம் அவளுக்குத் துணையிருந்து உதவி புரிந்து கொண்டிருந்தாள். தான் பொது நலத் தொண்டில் நாட்டம் கொண்டவள்



'கேம்பிரிட்ஜ்' பல்கலைக் கழகத்துக்கு அந்தப் பெயர் எப்படி வந்தது?

**இந்தப் பல்கலைக் கழகத்துக்கு அருகில் ஓடும் ஆற்றுக்குப் பெயர் கேம். இருபது அடி ஆழமுள்ள இந்த ஆற்றுக்கு சர் ஐஸக் நியூட்டன் ஆணி, கம்பி இல்லாத பாலம் ஒன்று கட்டினார். இதனால் அந்தக் கல்லூரிக்குக் 'கேம்பிரிட்ஜ்' என்ற பெயர் நிலைத்துவிட்டது.**

ஜே. எஸ். — பாலி

என்பதைக் காட்டிக் கொண்டாள். அந்த முறையில் அவளுக்கு ஆறுதல் கூறி ஆதரவும் அளித்து வந்தாள். ரோஸியைப் பார்ப்பதற்கு அவள் தினமும் ஆஸ்பத்திரிக்கு வருவாள். அவள் காட்டும் பரிவில் மயங்கி ரூபா அவளுக்கு எதிரே தான் தாழ்ந்துவிட்டதான உணர்வை அந்தக் கணத்துக்கு மறந்து போவாள். இந்த உணர்வு அவள் கண் எதிரில் இருக்கும் வரையில்தான். அப்புறமோ தாழ்வு மனப்பான்மை அவள் நெஞ்சில் நெருஞ்சி முள்ளாகத் தைத்து உறுத்தத் தொடங்கிவிடும். மணிக்கணக்கில் மனவேதனையுற்று அலை பாய்வாள்.

டாக்டர் பக்ஷி தினமும் போல் ரோஸியைப் பார்த்து விட்டுப் போன பொழுது, ரூபாவும் அவருடனேயே வெளியே வந்தாள், தன் தாயாரின் நோயைப் பற்றி அவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற துடிப்பில், அவரை நிறுத்தி வைத்துக் கேள்விக்கு மேல் கேள்வியாகக் கேட்டுத் துளைத்தெடுத்தாள்.

"அவளுக்கு இது மறு பிறவி என்று தெரிந்து கொள். அதுவே போதுமானது!" டாக்டர் பக்ஷி ஒரே வாக்கியத்தில் அவள் அத்தனை கேள்விகளுக்கும் விடை அளித்தார்.

"அது சரி, டாக்டர்! அம்மாவுக்கு இருதய நோய் என்பதை நீங்கள் என்னிடம் ஏன் முன்பே சொல்லவில்லை?"

"உன் அம்மா இந்த விவரம் உனக்குத் தெரியக் கூடாது என்று விரும்பினாள். தெரிந்தால் நீ மிகவும் மனச் சங்கடப்படுவாய் என்றும் படிப்பையே நிறுத்திவிடுவாய் என்றும் பயந்தாள். அதனால்தான் கூறவில்லை."

"அதிருக்கட்டும், அம்மாவின் உயிருக்கே உலை வைக்கும் இந்தப் படிப்பினால் யாருக்கு என்ன பயன்? இப்பொழுது தும்பைவிட்டு வாலைப் பிடிக்கும் கதையாக அல்லவா ஆகி விட்டது!" — ரூபா தலையைப் பிடித்துக் கொண்டாள். (தொடரும்)



சமையலுக்குப் பெருந்துணை
ஓய்வில்லாத தாய்மார்கள் சுவையான சமையல் செய்ய சுலபமான வழி! இந்த 3 பெருந்துணைகளைப் பின்பற்றி, பல்வேறு இன்பமூட்டும் தின்பண்டங்களைத் தயாரித்து மகிழுங்கள்!
பிரவுன் & போல்ஸன்
கார்ன்ஃப்ளவர்
சமோசா, பட்டீஸ் ஆகியவற்றை அதிமெல்லியதாகவும் மொரமொரப்பாகவும் ஆக்குகின்றது. குழைவான சுவைமிகு சூப், கிரேவி ஆகியவற்றைக் கெட்டியாகத் தயாரிக்க உதவுகிறது.
பிரவுன் & போல்ஸன்
வெரய்டி கஸ்டார்டு பவுடர்
6 இனிமையான சுவை வகைகள்! குடும்பத்தினரை மகிழ்விக்க வீட்டிலேயே புடிங், பாயசம், ரபடி ஆகிய பல்வேறு இன்சுவையுள்ள பண்டங்கள் தயாரிக்க சாலச் சிறந்தது.
ரெக்ஸ்
பேகிங் பவுடர்
கேக், பிஸ்கோத்து, பக்கோடா, பூரி, குலாப் ஜாமூன் ஆகியவற்றை சுவைபட அதி மென்மையாகத் தயாரிக்க உதவுகிறது. சிறிதளவே சிறப்பாகச் செய்து முடிக்கிறது!
Brown & Polson Cornflour
Brown & Polson
REX
BAKING POWDER
OBM 5457 TAM
பிரவுன் & போல்ஸன் மற்றும் ரெக்ஸ்
தரமுயர்ந்த தயாரிப்புகள். அருமையான பொருள்களிலிருந்து மிகுந்த கவனத்தோடு பக்குவப்படுத்தப்பட்டவை— கிடைப்பனவற்றிலேயே சிறந்தவை.
கார்ன் பிராடக்ட்ஸ் கோ. (இந்தியா) பிரைவேட் லிட்.
ஸ்ரீநிவாஸ் ஹவுஸ்,
எச். ஸோமானி மார்க,
பம்பாய் 400 001.



# ஒரு பிடி அவல்

## — வம்பன்

முன்பெல்லாம் மனைவி, கணவனின் எதிரில் ஒரு கிரிமினல் குற்றம் இழைத்தால், கணவனின் வற்புறுத்தலின் மீது அவள் இழைத்ததாகக் கருதித் தண்டனை கணிசமாகக் குறைக்கப்படும். அல்லது தவிர்க்கப்படும்.

இப்பொழுது காலம் மாறிவிட்டது. ஆண்களும் பெண்களும் சமமாகக் கருதப்படும் காலம் அல்லவா இது. ஆகவே பழைய முறை ரத்து செய்யப்பட்டு, கணவனுடன் சேர்ந்து மனைவி ஒரு குற்றம் செய்தால் இருவருமே சமமாகத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று அமெரிக்க மாஸசூஸெட்ஸ் உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது.

சில பெண்கள் பழைய நிலையே தேவலை போலிருக்கிறதே என்று நினைத்தால் வியப்பதற்கில்லை.

● ● ●

புகை பிடித்தல் பற்களுக்குத் தீங்கு விளைவிக்கிறது என்று அமெரிக்க டாக்டர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். பற்கள் உதிர்வதற்கு முக்கிய காரணம் புகை பிடித்தல் தான் என்று தெரிவித்திருக்கிறார்கள்.

புகை பிடித்தலால் இதயநோய், சுவாசப் பையில் புற்றுநோய் ஆகியவற்றுடன் இப்போது பற்கள் உதிர்வதும் சேர்ந்திருக்கிறது.

புகையிலையின் அபிவிர்த்தி நாளுக்கு நாள் பெருகி வருகிறது. ஆனால் அதை விடுவோரின் எண்ணிக்கை குறைந்து வருவதாகத் தெரியவில்லை. இதற்கும் ஓர் 'எமர்ஜன்ஸி' பிரகடனம் செய்தால் என்ன என்று தோன்றுகிறது.

● ● ●

ஆங்கிலமே ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டும் என்று தமிழ் நாட்டில் கிளர்ச்சி நீடித்தபோது ''இங்கிலீஷ் நம்மை அடிமைப் படுத்தியவர்களின் மொழி. இங்கிலீஷ் நம் ஆட்சி மொழி என்று எப்படிச் சொல்லிக் கொள்வது?'' என்று சிலர் கேட்டனர்.

அப்போது சென்னை உயர் நீதிமன்றத்து நீதிபதியாக இருந்த காலஞ்சென்ற ஏ. எஸ். பி. அய்யர், ''இங்கிலீஷ் நம் ஆட்சிமொழி என்று சொல்லிக் கொள்வதில் கௌரவக் குறைவு என்றால், 'அமெ[illegible]து ஆட்சிமொழி' என்று சொல்லிக் கொள்ளுங்களேன்'' என்றார்.

● ● ●

ஆசாரிய வினோபா பாவே அவர்கள் சமீபத்தில் பேசுகையில் ''தேசத்தில் பிரகடனம் செய்யப்பட்டுள்ள 'அவசர நிலைமை' மக்கள் உள்ளத்தில் அனாவசிய பீதியை ஏற்படுத்தியிருக்கிறது. எனினும் என் ஆசிரமத்தைச் சுற்றியுள்ள பறவைகள் சுதந்திரமாகப் பறந்து [illegible]வதைப் பார்க்கும்போது அவை இந்த [illegible]ர நிலையினால் பாதிக்கப்படவில்லை என்று தெரிகிறது'' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

பாரதியார்கூடச் சிட்டுக்குருவியின் சுதந்திரத் தன்மையைப் பார்த்துத்தான் பாரத நாட்டு மக்களுக்குப் பின்வரும் அடிகளைப் பாடினார் என்பது நினைவுக்கு வருகிறது.

**விட்டு விடுதலை யாகிநிற்பாய் - இந்தச் சிட்டுக் குருவியைப் போலே**

பாரதியார் வாக்கு அன்றைக்கும் பொருத்தம்; இன்றைக்கும் பொருத்தம்.

● ● ●

''கங்கண'' (வளையல்) என்ற கன்னடப் படத்துக்குத் தேசிய விருது கிடைத்துள்ளது. இந்தப் படம் முழுவதும் அமெச்சூர்களால் எடுக்கப்பட்டது. தொண்பது பேர் சேர்ந்து தலைக்கு 2000 ரூபாய் வீதம் முதலீடு செய்தார்கள். மேற்கொண்டு ரூ. 96,000 கடன் வாங்கியிருக்கிறார்கள். இதில் கதாநாயகியாக நடித்த ரேவதி. (புகைப்படம்: மேலே) ஒரு கல்லூரி மாணவி. நடித்துக் கொண்டே தமது பி. எஸ்ஸி. ஹோம் ஸயன்ஸ் கடைசி ஆண்டு பரீட்சை எழுதிப் பட்டமும் பெற்று விட்டார். கதாநாயகனாக நடித்த யஜமான், முனிசிபல் அங்கத்தினர். இவருக்கும் நடிப்பில் முன் அனுபவம் கிடையாது. படம் முழுவதும், [illegible] வீடுகளிலும் வெளிப்புறங்களிலும் எடுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் படம் எடுக்க [illegible] மாதங்கள் பிடித்திருக்கின்றன. இப்படத்தில் நடித்த கதாநாயகி, ரேவதி, இந்த ஆண்டின் சிறந்த கன்னட நடிகை என்ற கர்நாடக மாநில விருதையும் பெற்றிருக்கிறார்.

இப்படி 'ஓகோஹோ' என்று புகழப்படும் நடிகை ரேவதிக்குத் திரையுலகில் நல்ல எதிர்காலம் இருக்கக் கூடும். எனினும் அந்நடிகை என்ன சொல்லுகிறார் தெரியுமா?

தான் இந்தப் படத்தில் நடித்ததைத் தமது வாழ்க்கையில் மறக்கவொண்ணாத ஓர் அனுபவமாகக் கொள்ளப் போகிறாரே தவிர வேறு படங்களில் நடிக்கப் போவதில்லை என்று அறிவித்திருக்கிறார். பாராட்டுகிறோம்!



# சிரிப்பு மேடை

பாலாஜி

## ஆபீஸ் நியூஸ்

சில பெரிய கம்பெனிகளில் 'காப்பி இடை வேளை' என்று பத்து, பதினைந்து நிமிஷங்கள் ஒதுக்குகிறார்கள். கம்பெனிச் செலவில் எல்லா ஊழியர்களுக்கும் காப்பி தருகிறார்கள். எனக்குத் தெரிந்த ஒரு கம்பெனியில் இச்சமயத்தில் எல்லா டிபார்ட்மெண்டுகளிலும் மெல்லிசை



யையும் ஒலிபரப்புகிறார்கள். தினமும் இசையைப் போடுவதை விடச் சில நாட்களில் 'ஆபீஸ் நியூஸ்' என்ற செய்தி அறிக்கையைப் படிக்கலாமே!

இப்படி நான் ஒருநாள் நண்பர் நாகுவிடம் சொன்னேன். 'பிரமாதமான ஐடியா' என்று சொல்லிவிட்டுப் போனவர் மறுநாள் ஒரு செய்தி அறிக்கையைத் தயார் செய்து கொண்டு வந்து படித்தார். அதை அப்படியே தருகிறேன் — அவர் இடை இடையே 'ஹஹ்ஹா ஹோஹோ' என்று சிரித்ததை நீக்கிவிட்டு!

* * *

"இது அடாவடி கம்பெனி. இப்போது கம்பெனி செய்தி அறிக்கை. வாசிப்பது அனகிரி.

கம்பெனி முதலாளி நேற்று மாலையிலிருந்து கடும் ஜலதோஷத்தால் அவதிப்படுகிறார்.. 'கவலைப்படும்படியாக ஒன்றும் இல்லை. அதிக ஒய்வுதான் காரணம்' என்று டாக்டர்கள் கூறினாலும், மானேஜர் கூஜாராஜனும் ஹெட் கிளார்க் காக்காசாமியும் படுக்கை அருகிலேயே கவலையுடன் நின்று கொண்டிருக்கிறார்கள். இவர்களில் யார் அதிகம் முதலைக் கண்ணீர் வடிக்கிறார்கள் என்று போட்டியும் உள்ளது. போட்டியின் முடிவு நாளை அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கம்பெனி காஷியர் நாணயசாமி தனது பெண்ணின் திருமணத் தேதியை இன்று காலை 'ஓவர் டைம்' பில்லுக்குப் பணம் பட்டுவாடா செய்த போது அறிவித்தார். இதன் காரணமாக இதுவரை நூற்று எழுபத்தி ஏழு ரூபாய்க்கு மேல் அன்பளிப்புத் தொகை சேர்ந்துவிட்டதாகத் தெரிகிறது. இன்னும் மூன்று பில்களும், சம்பளப் பட்டுவாடாவும் இருப்பதால்,இத்தொகை ஐந்நூறை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

டெஸ்பாட்சர் சங்கரனும் டைப்பிஸ்ட் மோகினியும் மறுபடியும் ஏழாவது தடவையாகச் சேர்ந்து ஓர் அறிக்கை விட்டிருக்கிறார்கள்: "எங்களைப் பற்றிய வீண் வதந்திகளைப் பலர் பரவ விடுகிறார்கள். நாங்கள் நண்பர்கள். அவ்வளவுதான்!"

மூன்று நாட்களுக்கு முன்பு அக்கவுண்டண்ட் இளங்குமரன் அவர்களின் பொய்ப் பல் செட் காணாமற் போனது நினைவிருக்கும். அது கிடைத்து விட்டதாகத் தெரிவிக்கிறார்.

இம்மாதிரியே நிதானசாமியின் காணாமற் போன பேனாவும் கிடைத்து விட்டதாக அறிகிறோம். "மூன்று மாதங்களாகப் பேனாவைத் தேடித் தேடி நம்பிக்கை இழந்தேன். நல்ல காலம். இப்போது கிடைத்தது" என்று மகிழ்ச்சியுடன் கூறினார். அர்ஜண்ட் ஃபைல் வைக்கும் டிராயரைத் திறந்தபோது ஃபைல் மேலேயே பேனா இருந்ததாகவும் ஏஜன்ஸிச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

பியூன் பங்காருவின் பாட்டி மூன்றாவது தடவையாக இன்று காலமானதால், பங்காரு இன்று ஆபீசுக்கு லீவு. "சென்ற தடவை அனுப்பிய அனுதாபக் கடிதத்தை மறுபடியும் படித்துக் கொள்கிறேன். ஆகவே யாரும் அனுதாபக் கடிதம் அனுப்ப வேண்டாம்" என்று நமது நிருபரிடம் அவர் கூறினார்.

ஆபீஸ் மேஜையிலேயே மத்தியான டிபனைச் சாப்பிடுவதற்கும், கீழே சிறிது இறைப்பதற்கும் விதிக்கப்பட்டிருந்த தடை உடனடியாக நீக்கப்படுகிறது. இந்தத் தடை இருந்த காலத்தில் எலிகள் அதிகம் வர ஆரம்பித்து விட்டன. இந்த டிபன் துண்டுகளைச் சாப்பிட்டு விட்டு இனி கம்பெனிப் பக்கமே வராமல் அவை ஓடிவிடும் என்ற காரணத்தால் தடை நீக்கப்படுகிறது.

ரிகார்ட் செக்ஷன் ரோஸ் மேரி ஸ்வெட்டர் பின்ன ஆரம்பித்து விட்டதாக ஆதாரமற்ற செய்தி ஒன்று தெரிவிக்கிறது. ரோஸ் மேரிக்குச் சென்ற மாதம் திருமணமானது நினைவிருக்கும்.

நீங்கள் கேட்ட செய்திகளின் சாரம்..."

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput. Madras-600031. Editor: K Rajendran

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப் பதிப்பு) 60 மலேசிய காசு

